விலை: 60.00
பக்கங்கள் : 24
website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
சங்குநாதம்

சங்கு 26
ஒலி 108 வள்ளுவர் ஆண்டு 2056 பங்குனி 23 ஞாயிற்றுக்கிழமை (06.04.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/=

## தமிழ் மக்களின் அபிலாசைகளை அநுர அரசு நிறைவேற்ற வேண்டும்

### ஜனாதிபதியுடனான சந்திப்பின் பின் மோடி

- அரசியலமைப்பை முழுமையாக அமுல்படுத்த வேண்டும்.
- மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டும்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இந்தியப் பிரதமர் மோடி ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவைச் சந்தித்த பின் கூட்டு செய்தியாளர் சந்திப்பு ஒன்றை நடத்தினார்.

அங்கு உரையாற்றும்போதே இவ் ▷23

## தமிழ்ச் சமூகத்துக்கு இந்தியா தொடர்ந்து அசைக்க முடியாத அர்ப்பணிப்பை வழங்கும்

### தனது எக்ஸ் தளத்தில் மோடி

(கொழும்பு)

தமிழ்ச் சமூகத்துக்கு இந்தியா தொடர்ந்தும் அசைக்க முடியாத அர்ப்பணிப்பை வழங்கும் எனத் தமிழ்த் தலைவர்களுடனான சந்திப்புக் குறித்து தனது எக்ஸ் தளத்தில் பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை நேற்று இலங்கைத் தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் கொழும்பில் சந்தித்தனர்.

நேற்றுப் பிற்பகல் இந்தச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது. ▷23

- தமிழர்களுக்கான அரசியல் தீர்வு
- 13ஆவது திருத்தச் சட்டம்
- மாகாண சபைத் தேர்தல்
- மீனவர்கள் பிரச்சினை

# இலங்கை இனப் பிரச்சினை விவகாரத்தில் இந்தியா நேரடியாக தலையிட வேண்டும்



### பாரதப் பிரதமரிடம் தமிழ்த் தலைவர்கள் கோரிக்கை

(கொழும்பு)

தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு, மாகாண சபைத் தேர்தல், 13ஆவது திருத்தச் சட்டம், மீனவர்கள் பிரச்சினை தொடர்பாக பாரதப் பிரதமரிடம் விரிவாக கலந்துரையாடிய தமிழ்த் தலைவர்கள் இலங்கையில் காணப்படும் இனப் பிரச்சினை விவகாரத்தில் இந்தியா நேரடியாகத் தலையிட வேண்டும் என்று கோரிக்கை முன்வைத்தனர்.

(20ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு, வலுச்சக்தி, டிஜிட்டல் உட்பட 7 ஒப்பந்தங்கள் கைச்சாத்து

(கொழும்பு)

இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் பாதுகாப்பு, வலுச்சக்தி, டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் சுகாதாரம் ஆகிய துறைகள் தொடர்பான 7 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் ▷23



## இந்திய மீனவர்களை விடுவித்து அவர்களின் படகுகளை ஒப்படைக்குக

### அநுரவிடம் மோடி வேண்டுகோள்

(கொழும்பு)

இந்திய மீனவர்களை உடனடியாக விடுவித்து அவர்களின் படகுகளை உடனடியாக ஒப்படையுங்கள் என இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவிடம் கோரிக்கை விடுத்தார்.

ஜனாதிபதி அலுவலகத்திற்கு நேற்று வருகை தந்த இந்தியப் பிரதமருக்கு, ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவினால் சிறப்பு வரவேற்பளிக்கப்பட்டது.

இதன் பின்னர் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவுக்கும் இந்தி ▷23

## திருக்கோணேஸ்வரர் ஆலய புனரமைப்புக்கு உதவுவோம்

### செய்தியாளர் மாநாட்டில் மோடி

(கொழும்பு)

திருகோணமலையில் உள்ள திருக்கோணேஸ்வரர் ஆலயத்தை புனரமைக்க இந்தியா உதவும் என இந்தியப் பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டுள்ள பிரதமர் மோடி ஜனாதிபதியுடன் சந்திப்பு நடத்திய பின் நேற்று கூட்டுச்செய்தியாளர் மாநாட்டை நடத்தினார்.

அங்கு உரை ▷23

## திருக்குறளோடு உரையை ஆரம்பித்த பிரதமர் மோடி

(கொழும்பு)

திருக்குறளோடு தனது உரையை ஆரம்பித்தார் பாரதப் பிரதமர் மோடி.

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் வேண்டுகோளுக்கு ▷23

## இந்துக் கோயில்களின் பிரதேசங்கள் பௌத்த மயமாக்கல் அரசால் முன்னெடுக்கப்படுகின்றதா?

### தமிழ்த் தலைவர்களிடம் கேள்வி எழுப்பிய மோடி

(கொழும்பு)

இந்துக் கோயில்களின் பிரதேசங்கள் அபகரிக்கப்பட்டு பௌத்த மயமாக்கல் அரசால் முன்னெடுக்கப்படுகின்றதா? எனத் தமிழ்த் தலைவர்களிடம் பிரதமர் மோடி கேள்வி எழுப்பியுள்ளார்.

கொழும்பில் இந்தியப் பிரதமர் மோடிக்கும் தமிழ்த் தலைவர்களுக்குமிடையிலான சந்திப்பு நேற்று நடைபெற்றது.

இச்சந்திப்பில் முன்னாள் பாராளுமன்ற ▷23



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் மருதனார்மடம் சபாபதிப்பிள்ளை வீதியில் 2 ½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை.

- ஒரு பரப்பின் விலை 65 இலட்சம்
- நன்னீர் குழாய்க் கிணறு மற்றும் குளியறை
- 41' x 35' வடக்கு வாசல் வீடு கட்ட அனுமதி பெறப்பட்டுள்ளது.
- 18 அடிப்பாதை
- UDA அனுமதி உண்டு.

(3863)

தொடர்பு : 074 021 5706

## வேலைவாய்ப்பு

எமது நிறுவனத்தில் பணி புரிவதற்கு கணனி அறிவுள்ள, ரைப்பிங் செய்யக்கூடிய பெண் ஊழியர்கள் தேவை. மேலதிக விபரங்களுக்கு நேரில் வரவும்

Selva Telecom (Pvt) Ltd
122A, Temple Road, Jaffna.
(பொஸ்கோ பாடசாலை சந்தி)

077 728 6050

(3858)

## வேலைவாய்ப்பு

யாழ்.நகரில் இயங்கிவரும் உணவகம் ஒன்றிற்கு

**ஐஸ்கிறீம் மற்றும் கேக் தயாரிப்பவர்கள்**
**சமையல் உதவியாளர்**
**துப்புரவுப் பணியாளர்கள்**

தேவை.

ஆண், பெண் இருபாலாரும், இன்றே அழையுங்கள்

(C-2631)

தொடர்பு : 077 729 2840

## துயர் பகிர்கின்றோம்



எமது கல்லூரியின் ஆசிரியை **திருமதி தமிழினி அன்ராஸ்** அவர்களின் அன்புத் தந்தை

### அமரர் கணபதி இராசையா

அவர்களின் இறைபதம் அடைந்த செய்தி கேட்டு துயரடைவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிறப்பு 18.11.1955 இறப்பு 04.04.2025

பிரிவால் துயருறும்

ஆசிரியர் ஊழியர், நலன்புரிக்கழகம்
யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை

(C-2626)

## பெண் பராமரிப்பாளர் தேவை

70 வயதான வயோதிபப் பெண் ஒருவரை பராமரிப்பதற்கு பெண் பராமரிப்பாளர் தேவை.

(3864)

077 993 5844

## பணி வெற்றிடம்

கிளிநொச்சி நகரில் இயங்கிவரும் ஹாட்வெயர் நிறுவனத்திற்கு பின்வரும் பணிநிலைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

1. கணக்காளர்
2. காசாளர்
3. கணினி இயக்குனர்

பொருத்தமானவர்கள் தங்களது விண்ணப்பங்களை 076 0004 903 என்ற whatsapp இலக்கத்திற்கு அனுப்பிவைக்கவும்

(C-2628)

## SK SCIENCE CENTER

ஆசிரியர் :
ஜெ.செந்தில்செல்வன் (Bsc Msc PGDE)
யா/மாசிப்பாய் மகளிர் கல்லூரி

தரம் 06-11 வரையிலான மாணவர்களுக்கான விஞ்ஞான பாட தனி, குழு வகுப்புக்கள் மற்றும் தரம் 11 மாணவர்களுக்கான கடந்தகால வினாத்தாள், மாதிரி வினாத்தாள் வகுப்புக்களுடன் தொடர் மாதிரிப் பரீட்சைகளும் நடைபெறும்.

தொடர்புக்கு : 076 842 8837
அரசடி கோப்பாய்,
வடக்கு.

உலகத்தை மாற்ற நீங்கள் பயன்படுத்தக்கூடிய சக்தி வாய்ந்த ஆயுதம், கல்வி.

(3862)

## Biology & Chemistry

**2027 A/L Batch**

**Personal & Group Classes**
**English & Tamil Medium**

Mr.S.Vinojan
(Medical Student)

(1001)

Contact No: 076 485 5392

## நாகபூஷணி திருமண சேவை

புதுவருடத்தை முன்னிட்டு **50% கட்டணக் கழிவு**

(06.04.2025 முதல் 16.04.2025 வரை)

நீங்கள் விரும்பும் மணமக்களை மிகப் பொருத்தமாக உடன் தெரிவு செய்து தரப்பட்டு துரிதமாகத் திருமணம் நிறைவேற்றி வைக்கப்படும்.

**198, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.**
(வன்னி இன் ஹோட்டலுக்கு அருகில்)

(3867)

077 138 7596, 071 999 9306, 021 222 9306

# காணி விற்பனைக்கு

**யாழ்ப்பாணம் உரும்பிராய்ப் பகுதியில் 06 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.**

**நிலப்பரப்பு**

- பலாலி வீதியில் இருந்து 150 மீற்றர் தூரம்.
- 20 அடிப் பாதையுடன் 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் உள்ளது.
- உரும்பிராய் பெற்றோல் செற் முன் வீதியில் உள்ளது.
- பயன் தரும் தென்னைகள் உள்ளன.
- நல்ல சுற்றுச் சூழல், குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி.
- நல்ல தண்ணீர் ஊற்றுச் சூழல்.
- ஒரு பரப்பின் விலை 64 இலட்சம்.
- தரகர் தேவையில்லை.
- பார்வையிடும் நேரம் : காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை

(3856)

தொடர்புகளுக்கு : ஜெயம்

**077 814 7389,**
**077 986 5457**

## கண்ணீர் அஞ்சலி

### கணபதி இராசையா

(எமது திருக்கோயிலின் முன்னாள் தலைவரும், தற்போதைய பரிபாலன சபை உறுப்பினரும், 1ம் திருவிழா உபயகாரர்களில் ஒருவரும்.)



எமது திருக்கோயிலில் சிவத்தொண்டனாக, தலைவராக, பரிபாலன சபை உறுப்பினராக, திருவிழா உபயகாரராக இருந்து எமது திருக்கோயிலின் பெரு வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றிய பெருந்தகை அன்னாரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவிப்பதோடு ஆத்மா சாந்தியடைய எம்பெருமானை பிரார்த்திக்கிறோம்.

பிறப்பு 18.11.1955 இறப்பு 04.04.2025

பரிபாலன சபை
ஊரெழு கிழக்கு,
நாவலம்பதி ஸ்ரீ ஞான வயிரவர் திருக்கோயில்

(C-2627)

## கண்ணீர் அஞ்சலி

### அமரர் கணபதி இராசையா



பிறப்பு 18.11.1955 இறப்பு 04.04.2025

எங்களுடைய அப்பா சி.பசுபதி அவர்களின் குடும்பத்தில் இளைய மருமகனாக இணைந்த கணபதி இராசையா அவர்கள் தமது குடும்பத்தை நன்கு கவனித்து ஐந்து பெண் பிள்ளைகளையும் ஓர் ஆண் பிள்ளையையும் பெற்றெடுத்து அவர்களுக்குரிய கல்வி மற்றும் பொருளாதாரத்தில் முன்னணி வகிக்கக்கூடிய வகையில் அரும்பாடுபட்டார்.

ஊரெழு கிழக்கு. நாவலம்பதி ஞானவயிரவர் ஆலய பரிபாலன சபையின் தலைவராக 7 வருடங்களும் நிர்வாக உறுப்பினராக 17 வருடங்களும் இறைபணியாற்றி ஞானவயிரவர் ஆலயத்தின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றியிருந்தார்.

அத்துடன் ஊரெழு கிழக்கு வளர்பிறை சன சமூக நிலையத்தின் பொருளாளராக 1989ஆம் ஆண்டு தொடக்கம் 10 வருடங்கள் சேவையாற்றி வளர்பிறையின் வளர்ச்சியில் தனது முத்திரையைப் பதித்திருந்தார். அவரது மிடுக்கான நடை, உடை பாவனையில் என்றும் 16 வயது மார்க்கண்டேயரைப் போல காட்சியளிப்பார். சகல பொது நிகழ்வுகள், தனிப்பட்ட நிகழ்வுகள் மற்றும் நாவலம்பதி ஞானவயிரவர் திருக்கோவிலின் கொடியேற்றத் திருவிழாவின் உபயகாரர்களில் ஒருவராக இருந்து சிறப்பான முறையில் கலந்து கொள்வதுடன் யாவற்றிலும் தனது பங்களிப்பினை வழங்குவதற்குத் தவறமாட்டார்.

இனிவரும் காலங்களில் அவரை எந்தவிதத் தொழிலையும் மேற்கொள்ளாமல் வீட்டில் இருக்கும்படி எனது சகோதரி சறோ மற்றும் மருமக்கள் அடிக்கடி கூறுவதை நான் கண்கூடாக அறிந்துள்ளேன். ஆனால் விதி விளையாடி விட்டது. அவருடைய இழப்பை எங்கள் எல்லோராலும் தாங்கமுடியாது. ஏன் எமது கிராமத்திற்கே பாரிய இழப்பு. அன்னாருக்கு எமது குடும்பத்தின் சார்பில் துயரம் தோய்ந்த கண்ணீரைக் காணிக்கையாக்குவதுடன் அவரை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

ஊரெழு கிழக்கு (3860) கலாநிதி பசுபதி இராசேந்திரம் குடும்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்குச் சீட்டுகள் அச்சிடும் பணி இன்றுடன் நிறைவு-அரச அச்சகர்

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றங்களுக்கான தபால்மூல வாக்குச்சீட்டுகளை அச்சிடும் நடவடிக்கைகள் நிறைவடைந்துள்ளதாக அரச அச்சகர் பிரதீப் புஷ்பகுமார தெரிவித்தார்.

இதனிடையே இன்றுடன் தபால்மூல வாக்குச்சீட்டுகளை அச்சிடும் நடவடிக்கைகளை பூர்த்தி செய்ய எதிர்பார்ப்பதாக அவர் தெரிவித்தார்.

இம்முறை தபால்மூல வாக்களிப்பிற்காக 7 இலட்சம் தபால் வாக்குச்சீட்டுகள் அச்சிடப்படுகின்றன.

தபால்மூல வாக்குச்சீட்டுகளை நாளை 7 ஆம் திகதி விநியோகிக்கவுள்ளதாக தேர்தல் ஆணைக்குழு தெரிவித்தது.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான தபால்மூல வாக்களிப்பு எதிர்வரும் 22, 23, 24 ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது.

குறித்த நாட்களில் வாக்களிக்க முடியாத வாக்காளர்கள் ஏப்ரல் 28, 29 ஆகிய தினங்களில் வாக்களிக்க முடியும். (நி-8)

# மோடிக்காக திரையிடப்பட்ட சுந்தரகாண்ட நாடகம்

(கொழும்பு)

இலங்கைக்கு வருகை தந்துள்ள இந்தியப் பிரதமருக்கு, இராமாயண இலக்கியத்தின் சுந்தர காண்டத்தில் உள்ள சில பகுதிகளை எடுத்துக்காட்டும் ஒரு பொம்மலாட்ட நிகழ்ச்சி நேற்று முன்தினம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள இந்திய பிரதமர் நரேந்திர மோடி,

'சுந்தர காண்டத்தின் சில பகுதிகளை எடுத்துக்காட்டும் ஒரு பொம்மலாட்ட நிகழ்ச்சியின் காட்சிகளை கண்டுகளித்தேன்.

இதனை ஏற்பாடு செய்த பொம்மலாட்ட சங்கத்தினருக்கும் அவர்களின் ஆர்வத்திற்கும் வீரியத்திற்கும் எனது பாராட்டுகள் என தெரிவித்துள்ளார். (நி-8)

# தேர்தல் தொடர்பில் 527 முறைப்பாடுகள் பதிவு

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பில் கடந்த 20 ஆம் திகதியிலிருந்து நேற்று முன்தினம் வரை 527 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் 4 முறைப்பாடுகளும் சட்டத்தை மீறியமை தொடர்பில் 492 முறைப்பாடுகளும் வேறு குற்றங்கள் தொடர்பில் 29 முறைப்பாடுகளும் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

அத்துடன், கடந்த 24 மணித்தியாலங்களில் மாத்திரம் 71 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார். (நி-8)

# ஜி.எஸ்.பி+ இல்லாமல் போகும் சாத்தியம்

## ஹர்ஷ டி சில்வா

(கொழும்பு)

அமெரிக்காவின் புதிய வரிக் கொள்கையின் அடிப்படையில் இலங்கை உள்ளிட்ட ஜி.எஸ்.பி+ நிவாரணம் கிடைக்கும் அனைத்து நாடுகளுக்கும் குறித்த ஜி.எஸ்.பி+ நிவாரணம் இல்லாமல் போகும் நிலைமை காணப்படுவதாக பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைத்த போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அமெரிக்கா, உலக நாடுகளில் அதிகமாக வரி விதித்துள்ள முதல் ஐந்து நாடுகளின் பட்டியலில் இலங்கையும் உள்ளடங்குகிறது.

இதேவேளை அமெரிக்கா விதித்துள்ள வரி தொடர்பில் அரசாங்கம் வெகு விரைவில் கலந்துரையாட வேண்டும் என இலங்கை பொருட்கள் மற்றும் போக்குவரத்து சங்கத்தின் செயலாளர் இனாம் கபூர் மற்றும் கொழும்பு பல்கலைக்கழக பொருளாதார பிரிவின் பேராசிரியர் பிரியங்க துனுசிங்க ஆகியோரும் தெரிவித்துள்ளனர்.

அமெரிக்கா விதித்துள்ள வரிக் கொள்கை தொடர்பில் கலந்துரையாடுவதற்காக அரசாங்கத்தின் குழுவொன்று அடுத்த இரண்டு நாட்களுக்குள் அமெரிக்கா நோக்கிச் செல்லவுள்ளதாகச் சுதந்திர வர்த்தக வலய முதலீட்டாளர்களின் சங்கத்தின் தலைவர் தம்மிக்க பெர்னாண்டோ தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# சட்டவிரோதமாகப் பதியப்பட்ட மேலும் 12 வாகனங்கள்

(கொழும்பு)

சுங்கத்தில் இருந்து விடுவிக்கப்படாத நிலையில் மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட மேலும் 12 வாகனங்கள் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் கைப்பற்றப்பட்டது.

ஜீப் Mitsubishi Montero ரக வாகனங்கள், Toyota ரக வாகனங்கள், Land Cruiser Prado ரக வாகனம், Nissan Double Cab உள்ளிட்ட வாகனங்கள் இதில் உள்ளடங்குவதாக ஆணைக்குழு தெரிவித்தது.

இந்த முறைகேடுகள் இடம்பெற்ற விதம் மற்றும் இதனால் அரசாங்கத்திற்கு ஏற்பட்டுள்ள நட்டம் தொடர்பில் விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப முறைகளின் ஊடாக விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாக ஆணைக்குழு குறிப்பிட்டது.

அரசாங்கத்திற்கு பாரிய நட்டத்தை ஏற்படுத்தி சட்டவிரோதமாக பதிவு செய்யப்பட்ட 15 வாகனங்களை ஏற்கனவே ஆணைக்குழு கைப்பற்றிய துடன் மேலதிக பரிசோதனைகளுக்காக சுங்கத் திணைக்கள அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்தது. (நி-8)

# அஞ்சல் மூல வாக்களிப்பு

## பொலிஸ், முப்படையினருக்கான செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள் தொடர்பாக அஞ்சல் மூல வாக்களிப்பு அத்தாட்சிப்படுத்தும் பொலிஸ் மற்றும் முப்படையினருக்கான செயலமர்வு யாழ்ப்பாணம், கிளிநொச்சி ஆகிய மாவட்ட செயலகங்களில் நடைபெற்றது.

யாழ்.மாவட்ட அரசாங்க அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் யாழ். மாவட்ட செயலக கேட்போர் கூடத்திலும் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான எஸ்.முரளிதரன் தலைமையில் கிளி.மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்திலும் நேற்று நடைபெற்றது.

இச் செயலமர்வில் உள்ளூராட்சி அதிகார சபைத் தேர்தலில் அஞ்சல் மூல அத்தாட்சிப்படுத்தும் பொலிஸ் மற்றும் முப்படைகளின் அலுவலர்களின் கடமைகள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக, தேர்தல் ஆணைக்குழுவின் திட்டமிடல் பணிப்பாளர் சந்தன டி சில்வா, பிரதி ஆணையாளர் கே. ஜே. எஸ். மகாதேவ மற்றும் யாழ்.கிளிநொச்சி மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர்கள் ஆகியோரால் விளக்கமளிக்கப்பட்டது.

இச் செயலமர்வில் நியமிக் கப்பட்ட அத்தாட்சிப்படுத்தும் பொலிஸ் மற்றும் முப்படையினர்களின் அலுவலர்கள் கலந்து கொண்டனர். (நி-8-33-316)

# அமெரிக்க வரிவிதிப்பு

## பாதிப்புகளைத் தவிர்க்க அரசிற்கு ஒத்துழைப்போம்

## சாகர அறிவிப்பு

(கொழும்பு)

அமெரிக்காவின் புதிய வரி விதிப்பால் இலங்கையின் பொருளாதாரத்துக்கு பாதிப்பு ஏற்படும். இதனை எமது குறுகிய அரசியலுக்காக நாங்கள் பயன்படுத்திக் கொள்ள போவதில்லை என ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்தார்.

தோற்றம் பெறும் பாதிப்புகளுக்குத் தீர்வு காண்பதற்கு அரசாங்கம் எடுக்கும் சிறந்த தீர்மானங்களுக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குவோமென அவர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு தெரிவித்தார். (நி-8)


31 ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்.உயர்திரு. சுப்பிரமணியம் கமலநாதன்

திதி:பூர்வபக்க நவமி

வாழ்வில் அர்த்தங்களை புரியவைத்து
வசந்த காலத்து நினைவுகளை மெருகூட்டியவரே!
சோதனைகளை சாதனையாக்கிய செயல் வீரரே!
என்றென்றும் உம் நாமம் எம் நாவில் ஒலித்திடும்.

புவித்துவம் 18.05.1947

அமரத்துவம் 08.03.2025

மானிப்பாய், அளவெட்டி.

தகவல்: குடும்பத்தினர்.

(c-2624)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
சங்குநாதம்
நாதம் 487
06.04.2025
பக்கம் 05




# ஆனையிறவு உப்பு "ரஜ லுணு" வானது எப்படி?

அபிமன்பு

ஈழத்து மண் தமிழ் மக்களின் வரலாறுகளோடும் வாழ்வியலோடும் பின்னிப்பிணைந்தது. இதனாலேயே எமது மண்ணை ஆக்கிரமிக்க அனுமதிக்க முடியாது என தமிழ் இளைஞர்கள் அரச இயந்திரங்களுக்கு எதிராக ஆயுதப் போரைத் தொடங்கினர்.

எம் வரலாறுகளை அழித்து அதில் பேரினவாதத்தை புகுத்த நினைத்தமை எவராலும் ஏற்க முடியாத ஒன்று. ஆயினும் அதையே பேரினவாத அரசுகள் மேற்கொண்டன. இதன் முடிவு தமிழினம் ஒட்டுமொத்தமாய் அழிந்து, அவமானப்பட்ட இனமாக இன்றுவரை வாழ்ந்து கொண்டு இருக்கிறது. தமிழர் பூர்வீகங்களை கபளீகரம் செய்யும் பேரினவாத அரசுகளின் போக்கு இன்று நேற்று தொடங்கிய ஒன்று அல்ல. இது காலம் காலமாய் எம் மக்கள் மீது திணிக்கப்படும் ஒன்று.

இலங்கை ஆட்சி மொழி சிங்களம் என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டதன் பின்னர் தமிழ் மக்கள் மீதான பேரினவாத சிந்தனையாளர்களின் போக்கு கடுமையாக்கப்பட்டது என்பதை எவரும் மறுத்து விட முடியாது.

தமிழர் பூர்வீகங்களையும் தொன்மைகளையும் எடுத்துக்காட்டும் வகையில் வடக்கு கிழக்கில் பல்வேறு வரலாற்றுச் சின்னங்கள் காணப்படுகின்றன.

அவ்வாறான வரலாற்றுச் சின்னங்களை சிங்கள மயமாக்கும் செயல் இற்றைவரை நடந்து கொண்டே இருக்கின்றன.

ஆம், கடந்த சனிக்கிழமை தமிழர்களின் வரலாற்றுப் பூர்வீகங்களுடன் பின்னிப்பிணைந்திருக்கும் ஆனையிறவு உப்பளம் திறந்து வைக் கப்பட்டது.

வடக்கில் தொழில் பேட்டைகளை உருவாக்கும் செயற்றிட்டத்தின் முதன்மையாக ஆனையிறவு உப்பளம் அரசாங்கத்தினால் திறந்து வைக்கப்பட்டிருந்தது.

ஆனையிறவு உப்பளம் ஒன்பது தசாப்தங்களுக்கு மேலாக தமிழர் வாழ்வியலோடு ஒன்றியிருக்கிறது.

1938 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ஆனையிறவு உப்பளம் அதன் செயற்பாட்டை 1990 ஆம் ஆண்டு நிறுத்திக் கொண்டது. போரின் கொடும் பிடியே ஆனையிறவு உப்பள இயக்கம் நின்று போகக்காரணம்.

இந்த நிலையில் தேசிய மக்கள் சக்தி ஆட்சி அமைத்ததன் பின் ஆனையிறவு உப்பளம் மீண்டும் இயங்க ஆரம்பித்து உள்ளது.

ஆனையிறவு உப்பள மீள் இயக்கம் வடக்கு கிழக்கு மக்களுக்குக் கிடைத்த வரப்பிரசாதமே.

ஆயினும் காலம் காலமாக "ஆனையிறவு உப்பு" என்ற தமிழர் அடையாளத்தை தாங்கி வந்த உப்பின் பெயர் "ரஜ லுணு" எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு வெளியாகி இருந்தமை தமிழர் நெஞ்சங்களில் பேரிடியாய் வீழ்ந்தது.

இலங்கையின் வரலாற்றையே மாற்றியமைக்கின்றோம் என்ற பேரெழுச்சியுடன் வந்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்காவின் தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசு இவ்வாறான இன வன்மம் நிறைந்த செயலைச் செய்கின்றதா என்பதே ஈழத்தமிழருக்கு இன்னொரு பேரிடியைத் தந்தது. தமிழர் வரலாற்றில் என்றுமில்லாத மாற்றத்தை வடக்கு மக்கள் இம்முறைத் தேர்தலில் ஏற்படுத்தியிருந்தனர்.

தமிழ் மக்களின் இரத்த நாளங்களில் ஓடிக்கொண்டிருந்த தமிழ்த் தேசியக் கட்சிகளைத் தவிர்த்து, தேசிய மக்கள் கட்சிகளை ஆதரித்தனர் தமிழ் மக்கள்.

ஆதரவு எனின், சாதாரண ஆதரவு அல்ல. மிகப்பெரிய ஆதரவு. மூன்று ஆசனங்கள் கிடைக்கும் அளவிலான ஆதரவை தமிழ் மக்கள் வழங்கியிருந்த போதிலும் தமிழ் மக்களின் எண்ணவோட்டத்தை சற்றும் சிந்தியாமல் இவ்வாறு ஆனையிறவு உப்பை "ரஜ லுணு" எனப் பெயர் மாற்றம் செய்திருக்கிறது தேசிய மக்கள் சக்தி அரசு.

தேசிய மக்கள் சக்தியின் ஊடாக வடக்கில் தெரிவு செய்யப்பட்ட மூன்று பாராளுமன்ற உறுப்பினர்களும் தமிழ் மக்களுக்காக குரல் கொடுப்பார்கள் என்ற சிந்தனையிலேயே தமிழ் மக்கள் அவர்களை பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்தனர். ஆனால் நடப்பதோ வேறு மாதிரியாகவல்லவா இருக்கிறது. ஆம், மக்கள் பிரதேசங்களின் முன்னேற்றங்களுக்கான கூட்டங்களில் தேவையற்ற பேச்சுக்களையும் விதண்டாவாத நடவடிக்கைகளையும் மேற்கொள்வதுடன் அக்கூட்டங்களை நகைப்புக்குள்ளாக்கும் செயல்களிலும் இவர்கள் ஈடுபடுவதை தமிழ் மக்கள் விரும்பவில்லை. இதற்காக தமிழ் மக்கள் இவர்களுக்கு வாக்களிக்கவில்லை.

ஆனையிறவு உப்பளப் பெயர் மாற்றப் பிரச்சினை எழுந்தவுடனேயே கடற்றொழில் அமைச்சர் ஓர் அறிக்கையினை வெளியிட்டு இருந்தார். அதாவது, இது கடந்த கால அரசினால் தீர்மானிக்கப்பட்ட பெயர். இப்பெயர் விரைவில் "ஆனையிறவு உப்பு" எனப் பெயர் மாற்றம் செய்யப்படும் எனக் கூறியிருந்தார். ஆனையிறவு உப்பின் பெயர் ரஜ லுணுவாக மாற்றம் பெற்றதா? அல்லது ரஜ லுணு ஆனையிறவு உப்பு எனப் பெயர்மாற்றம் செய்யப்படுகிறதா? என்பதை சம்பந்தப்பட்டவர்கள் தெளிவுபடுத்த வேண்டும்.

கடந்த கால அரசின் ஊழல்களையெல்லாம் விசாரணை செய்யும் தேசிய மக்கள் சக்தி அரசிற்கு ஆனையிறவு உப்பு ரஜ லுணுவாக மாறியதற்குள் இருக்கும் இனவாதம் புரியாமல் போனது ஏன் என்பதுதான் மக்களின் கேள்வி. இங்குதான் ஒரு விடயத்தை தமிழ் மக்கள் சிந்திக்கத் தொடங்கி விட்டார்களோ என்று எண்ணத் தோன்றுகிறது.

அதாவது, மோதகமும், கொழுக்கட்டையும் வேறு வேறு வடிவமாயினும் அதன் உள்ளுடல் ஒன்றுதான் என்பதே அது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

வாத்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து விதானையார் விசுவலிங்கம் எழுந்தார். என்ன இந்த முறை உள்ளூராட்சி சபைத் தேர்தல் சூடு பிடிக்காது போல.

**மூப்பர்:** ஏன் விதானையார் அப்படிச் சொல்லுறியள்.

**விதானையார்:** மூப்பர், தோல்வி வந்திட்டால் பிறகு எதிலும் ஆர்வம் இருக்காது. அதிலும் பாராளுமன்றத் தேர்தலில போட்டியிட்டவியள் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் போட்டியிடுவது என்பது மிகக் குறைவாகத் தான் இருக்கும்.

இப்ப அரசியல் கட்சிகளின்ர தலைமைகளைப் பொறுத்தவரை, அவர்கள் பாராளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்றிருந்தால் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஆர்வம் காட்டுவினம்.

ஆனால் அவர்களுக்குத் தோல்வி எனும் போது, உள்ளூராட்சி சபையில தமது கட்சி வெற்றி பெற வேணும் என்பதில கொண்டிருக்கக் கூடிய ஈடுபாடு ஒரு மட்டாகத் தான் இருக்கும்.

ஏதோ உள்ளூராட்சித் தேர்தலில் போட்டியிடுகிறவர்கள் தத்தம் வெற்றிக்காகப் பாடுபட்டால் உண்டு.

மற்றும்படி தமிழ் அரசியல் கட்சிகளின்ர தேர்தல் பிரசாரம் என்பது சோபிக்கும் போல தெரியல்ல.

**கங்காணி:** விதானையார் சொல்லுறதில நியாயம் இருக்கத் தான் செய்யுது. அதோட இந்த முறை தமிழ் அரசியல் கட்சிகளின்ர வேட்பு மனுக்களில பல வேட்பு மனுக்களை தேர்தல் திணைக்களம் நிராகரித்து போட்டுதல்லோ. அதாலும் தேர்தல் பிரசாரம் என்பது மந்தமாகத்தான் இருக்கப் போகுது.

இவ்வாறு கங்காணி கூற, ஆலடியில் நிசப்தம் நிலவியது. நிசப்தத்தை குலைக்க சாத்திரியார் சதாசிவம் குரல் கொடுத்தார்.

**சாத்திரியார்:** இஞ்சே கங்காணியார், தேர்தல் பற்றி எங்கட மக்களுக்கு இம்மியும் ஈடுபாடு இல்லை. கடந்த பொதுத் தேர்தலில் வாக்களித்து என்ன நடந்தது. அதால இப்ப எங்கட சனங்களுக்குத் தேர்தல் எண்டாலே வெறுப்புத் தான்.

**பண்டிதர்:** அரசியலில் இருந்து எங்கட மக்கள் ஒதுங்கக்கூடாது. உண்மையில அரசியல் தொடர்பான விழிப்புணர்வுகளை ஏற்படுத்துகின்ற பணிகளைத்தான், சிவில் அமைப்புக்கள் செய்ய வேண்டும்.

ஆனால் எங்கட சிவில் அமைப்புக்கள் ஒழிந்திருந்து எப்பாவது அறிக்கை விடும். அவ்வளவு தான்.

அந்த அறிக்கைகளும் ஏதோவொரு வகையில அரசியல் கட்சிச் சார்புடையதாக இருப்பதால, சிவில் சமூகத்தின் அறிக்கையை எங்கட சனங்கள் மருந்துக்கும் மதிப்பதில்லை.

**சிறாப்பர்:** அதெண்டால் உண்மை தான். ஒரு காலத்தில எங்கட யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவர் அமைப்புக்கள் அறிக்கை விட்டால், அதற்கு எங்கட சனங்கள் கொடுத்த மதிப்பு எப்படியென்டு தெரியும் தானே.

**மூப்பர்:** ஏன் சிறாப்பர் நீங்கள் இதைச் சொல்லுறியள். ஒரு காலத்தில யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் அமைப்புகள் தேர்தலில் யாரை ஆதரிக்கச் சொல்லுகினமோ அவையள ஆதரிக்கிறதெண்டு தமிழ் மக்கள் தீர்மானம் எடுத்த காலங்களும் உண்டு தானே.

**விதானையார்:** என்றைக்கு சில புலம்பெயர் அமைப்புக்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் சிலருக்குக் காசு கொடுத்து, தங்கட நோக்கத்தை இங்கு அமுல்படுத்த நினைத்தினமோ- அண்டைக்குத் தொட்டது தான் இந்த நாசம்.

அதோட புலம்பெயர் அமைப்புக்கள் சிலவற்றின் ஏஜென்டுகளாக ஒரு குறிப்பிட்ட காலப் பகுதியில இருந்த பல்கலைக்கழக மாணவர் அமைப்புக்கள் செயற்பட்டன.

அண்டைக்குத்தான் எங்கட மக்கள் பல்கலைக்கழக மாணவர் அமைப்புக்களைத் தூக்கி எறிஞ்சினம்.

**வாத்தியார்:** ஓ! எங்கட மக்கள் நம்பிக் கெட்டது தானே கண்ட பலன். இப்ப எல்லாத்தையும் கைவிட்டு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவை நம்பியிருக்கினம்.

அவராவது எங்கட மக்களின்ர நம்பிக்கைக்கு மோசம் செய்யாமல் நடப்பார் எண்டு நம்புவம்.

**விதானையார்:** என்ன சொன்னாலும் ஜனாதிபதி அநுரவிட்ட நுட்பமாக மக்களை ஏமாற்ற வேணும் எண்ட எண்ணம் இருக்காது எண்டு நினைக்கிறன்.

**கங்காணி:** அதெண்டால் உண்மைதான். மிகவும் நுட்பமாக மக்களை ஏமாற்றுவதில முன்பிருந்த ஆட்சியாளர்கள் கைதேர்ந்தவர்கள்.

இந்தாப் பாருங்களன், நாங்கள் வரிசையில நிண்ட போது அவர்கள் எவ்வளவு காசை வாரிச் சுருட்டினார்கள் என்பது தெரியுது தானே.

சில அரசியல்வாதிகள் தங்கட பழைய வீட்டை தாங்களே ஏரியூட்டிப் போட்டு, அரகலப் போராட்டக்காரர்கள் எரித்ததாகக் கூறி, டபிள், றிபிள் மடங்காக நட்டஈடு பெற்றிருக்கினம் எண்டால் பாருங்களன்.

ஆனால் ஜனாதிபதி அநுரவின்ர ஆட்சியில அப்படியான மோசடிகளுக்கு அறவே இடமில்லை என்பதை நான் அடித்துக் கூறுவன்.

**சிறாப்பர்:** கங்காணியார் நீங்கள் சொல்லுற விடயம் பொதுவானது. ஆனால் எங்கட இனப்பிரச்சினை தொடர்பில ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க என்ன செய்வார் எண்டதை நாங்கள் பொறுத்திருந்து தான் பார்க்க வேணும். ஏனெண்டால் அநுர அரசு எல்லா விடயத்தையும் கனகச்சிதமாகக் கையாளுகிறது.

**வாத்தியார்:** சிறாப்பரின்ர கருத்தை நான் ஏற்றுக்கொள்கிறன். அவர்கள் எதையும் மிக நுட்பமாகக் கையாளுவினம்.

**கங்காணி:** ஏன்? வாத்தியார் அப்படிச் சொல்லுறியள்?

**பண்டிதர்:** இந்தாப் பாருங்க, கிழக்குப் பல்கலைக்கழகத்தின்ர பேரவையில இருக்கிற 14 உறுப்பினர்களில் 7 பேர் சிங்களவர், மிகுதி ஏழு பேரில் 5 தமிழர்கள், 2 முஸ்லிம்கள் இப்ப தெரியுது தானே! அடுத்த, அடுத்த தடவையில கிழக்குப் பல்கலைக்கழகத்தின்ர துணைவேந்தராக ஒரு சிங்களவர் நியமிக்கப்படக் கூடிய வாய்ப்பு உண்டு.

**வாத்தியார்:** பண்டிதர் ஐயா, நீங்கள் இதைச் சொல்லுறியள். ஏன்? எங்கட யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு இன்னமும் வேந்தர் நியமிக்கப்படவில்லை. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின்ர வளர்ச்சியில பெரும் பங்காற்றிய முன்னாள் துணைவேந்தர் ஒருவரை வேந்தராக நியமிக்க வேண்டும் என்ர கோரிக்கை வலுத்த போது, அதற்கு எதிராக சில விரிவுரையாளர்கள் கொழும்புக்குக் கடிதம் அனுப்பியதாகக் கேள்வி.

**பண்டிதர்:** அது தான் இனி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு ஒரு சிங்களவர் வேந்தராக நியமிக்கப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

**வாத்தியார்:** பண்டிதர் ஐயா! அதுமட்டுமல்ல, இன்னும் பத்து வருடங்கள் போக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின்ர பேரவை உறுப்பினர்களில சிங்களவர்கள் ஐம்பது வீதத்திற்கு வந்துவிடுவினம். பிறகென்ன சிங்களப் பேராசிரியர் ஒருவர் துணைவேந்தராக வருவார்.

**பண்டிதர்:** சிங்களவர் ஒருவர் துணைவேந்தராக இருந்தால் என்ன எண்டு கேட்கக்கூடிய சில விரிவுரையாளர்களும் எங்கட யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில இருக்கத் தான் செய்யினம்.

**விதானையார்:** எங்களுக்கு நாங்கள் தானே எதிரிகள். இன்னும் கொஞ்சக் காலம் போக, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில அரசியல் சார்ந்து விரிவுரையாளர்கள் கன்னை பிரிந்து நிற்பினம். அவையளுக்கு ஏற்ற மாதிரி மாணவர்களும் பக்கம் சார; பகிஷ்கரிப்பு, போராட்டம் என்பனதான் பொன் விழாப் பரிசாக இருக்கப் போகுது.

இவ்வாறு விதானையார் கூற, அதனைத் தானும் ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

அதித்தன்



## சிங்கள மயமாகிறது கிழக்குப் பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இன்றைய காலகட்டத்தில் எது முக்கியம் வியாசரே?


அன்பு வாசகர்களே!

உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை

0076 097 3126

என்ற இலக்கத்திற்கு SMS, Whats App செய்யுங்கள்




உள்ளக விசாரணை எவ்வாறு சாத்தியப் படும் வியாசரே?

**பிறர் வாழ்வில் விளையாடிய அனுபவம் வியாசருக்கு உண்டா?**

கர்ஷிக்-வவுனியா

என் வாழ்வில் விளையாடுவதே இறைவனுக்கு வேலை என்றாகிய போது நான் எப்படி பிறர் வாழ்வில் விளையாட முடியும்.

**கானல் நீருக்கு ஆசைப்படலாமா வியாசரே?**

மகாலட்சுமி-கொக்குவில்

இருக்கும் இடத்தை விட்டு இல்லாத இடம் தேடி எங்கெங்கோ அலைகிறான் ஞானத்தங்கமே... என்றொரு பாடல் உண்டல்லவா?

எம் சமுதாயத்தில் இருக்கும் பெரும் பிரச்சினையே இது தான். பாலைவனத்தில் கானல் நீர் தெரிவது இயல்பான ஒன்று.

அதைத் தெரிந்தும் கூட கானல் நீரை உண்மை நீர் என்று மதி மயங்கி அதன்பால் ஓடிக் களைத்து மடிந்து போகின்றது மனிதம்.

எம் கைக்கு எது எட்டுமோ அதற்கு ஆசைப் படுவது தான் முறையானது.

இல்லையேல் எம் எல்லைக்கு அப்பால் இருப்பதை அண்ணார்ந்து பார்த்து, கொட்டாவி விடுவதுடன் வாழ்க்கை முடிந்து விடும்.

**வியாசர் தத்துவம் சொல்வதில் கில்லாடியாமே. உண்மையா?**

ரிதுஷ்-வதிரி

வாழ்க்கையில் முன்னேற்றப்படி எதுவுமே தேவையில்லை என்று கூறும் கும்பல் போன்று இன்னொரு கும்பலும் உண்டு.

அந்தக் காலத்தில் கையிலே பத்து சதம் இருக்காது. ஆனால் நாம் சந்தோஷமாகவும் நிம்மதியாகவும் வாழ்ந்தோம் என்று கூறிக் கொள்வார்கள்.

என்னைப் பொறுத்தவரை வாழ்வில் நிம்மதியாக இருக்க வேண்டும் என்றால் கையில் மட்டுமல்ல வங்கியிலும் பணம் இருக்க வேண்டும். கையில் பணம் இருக்கும் போது வரும் நம்பிக்கை போன்று வேறு எதிலும் இருக்காது.

அந்த நம்பிக்கைக்காகவேனும் நாம் வாழ்வில் பணம் சேர்த்தாக வேண்டும்.

இதுவே நூறு வீதம் உண்மையானது.

**வாழ்வைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் வியாசரே?**

ஆர்.வை.சற்-யாழ்ப்பாணம்

மனிதன் ஒவ்வொருவனும் இரட்டைக் கதைகளோடு வாழ்ந்து கொண்டிருக்கிறான். ஒன்று அவன் வாழ்ந்து கொண்டிருக்கும் கதை. மற்றையது அவன் வாழ நினைத்த கதை.

வாழும் கதை அவன் வாழ நினைத்த கதையை சூறையாடி விட அவனின் வாழ நினைத்த கதை வெறும் கனவாய் போய்விடுகிறது.




**உள்ளக விசாரணை எவ்வாறு சாத்தியப் படும் வியாசரே?**

சுதன்-குப்பிளான்

என் மகனை அயல்வீட்டுக்காரரின் மகன் அடித்து விட்டான். அயல் வீட்டுக்காரரிடம் நான், என்ன நடந்தது என்று உங்கள் மகனை விசாரியுங்கள் என்று கூறினேன்.

அடுத்த நாள் காலை அவர் என்னைச் சந்தித்தார்.

அது வந்து பாருங்கோ எங்கட மகன் எந்தத் தவறும் செய்யவில்லை. அவன் உங்கட மகனுக்கு அடிச்சதெண்டு சொல்லுறது தவறு. அவன் உங்கட மகனை நேற்று முழுவதும் காணவே இல்லையாம்.

எதுக்கும் உங்கட மகனை ஒருக்கால் விசாரியுங்கோ. உங்கள் மகன் பொய் சொல்கிறான் என்றார். ஆனால் எனது மகனுக்கு அவரின் மகன் அடித்தது உண்மை. அவன் அடித்ததில் என் மகனுக்கு காயம் கூட ஏற்பட்டிருக்கிறது.

இப்போது கூறுங்கள் உள்ளக விசாரணை நியாயமானதாக இருக்குமா?

**சிலர் சடுதியாகக் கோபப்பட்டு விடுகிறார் களே. ஏன் வியாசரே?**

சாரங்கன்-இத்தாவில்

ஒருவனிடம் உண்மையும் நியாயமும் இருக்குமானால் அவன் உணர்ச்சி வசப்படுவான். உரையாடலில் நிதானம் இழக்கவே செய்வான்.

தன் பக்கம் உண்மை நியாயம் இருந்தும் புரிந்து கொள்ளாமல் எதிர்த்து நிற்கிறீர்களே என்ற ஆதங்கம் அவனிடம் கோபமாய் வெளி வந்து விடுகிறது.

அதில் தவறேதும் இல்லை.

**இன்றைய காலகட்டத்தில் எது முக்கியம் வியாசரே?**

விஜயகுமார்-முகமாலை

சிலருக்கு மது முக்கியம்
சிலருக்கு மாது முக்கியம்
சிலருக்கு சூது முக்கியம்

இன்னும் சிலருக்கோ மது, மாது, சூது இவை மூன்றும் முக்கியம்.

மண்ணாசை, பொன்னாசை, பொண்ணாசை இவை மூன்றையும் எவன் துறக்கிறானோ அவனே மாமனிதன் ஆகிறான்.

**இனவாதம் இந்த நாட்டை விட்டு விலகி விடுமோ வியாரே?**

குமார்-எழுதுமட்டுவாழ்

ஒரு நாளும் விலகாது. இந்த நாட்டில் சிறுபான்மை தமிழினத்துக்கும் உரிமையுண்டு என்று எப்போது தெற்கிலிருந்து ஒரு குரல் எழுகிறதோ, அதற்கு எதிர்க்குரலாய் ஆயிரம் குரல்கள் எழும்.

அந்த எதிர்க்குரல்கள் அனைத்தும் இனவாதக் குரல்களாகவே இருக்கும்.

தெற்கு அரசியல்வாதிகளின் இரத்தத்தில் ஊறியது இனவாதம். அதை அழிக்க வேண்டும் என்று யார் நினைத்தாலும் அவர்களையே அழித்து விடுவார்கள். அவ்வளவுக்கு இனவாதம் பவரானது.

**பெண் என்பவள் அன்பானவளா? வம்பானவளா?**

பாலச்சந்திரன்-சாந்தை

பெண்மை என்பது உலகின் அச்சாணி. முழுமுதற் கடவுள் சிவனாக இருப்பினும் எம்மை தாங்கும் பூமியை பூமாதேவி என்றே போற்றுகின்றோம்.

இது உலக தோற்றத்திற்கு பெண்ணே முதன்மை என்பதை நிறுவுகிறது.

பெண்களை மின்சாரத்திற்கு ஒப்பிட்டனர் எம் முன்னோர். ஏன் தெரியுமா? முறை தவறித் தொட்டால் மின்சாரம் உயிரையே எடுத்துவிடும். இது போலத்தான் பெண்மையும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காலம் பல கண்ட யாழ்.கோட்டை

51

செங்கை ஆழியான்

யாழ்ப்பாணக் கோட்டையிலிருந்து துப்பாக்கிச் சூடுகளும் இடைக்கிடையே நிகழும். கண்மூடித்தனமாகத் துப்பாக்கிகள் முழங்கும். விடுதலைப் புலிகளின் எதிர்த்தாக்குதலுக்குப் பலியாகிக் கோட்டைக்குள் இராணுவத்தினரும் சரிந்தனர்.

கொட்டடிப்பகுதியில் ஷெல் தாக்கியதால், மாணவன் ஒருவனும் ஆலயத்தில், வழிட்டுக் கொண்டிருந்த பாக்கியம் என்ற பெண்ணும் அவ்விடத்தில் பலியாகினர்.

12 பேர் வரையில் கடும் காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டனர். அனுமதிக்கப்பட்டவர்களில் இருவர் பின்னர் மரணமடைந்தனர். அன்று காலையிலிருந்து மாலைவரை கோட்டையிலிருந்து ஷெல் தாக்குதல்கள் நடந்தன.

10. ஒகஸ்ட். 1986 இல் யாழ்கோட்டைக்கு முன் காங்கேசன்துறை வீதியில் 15 அடி உயரமான அரண் ஒன்றினை புளொட் இயக்கத்தினர் அமைத்துக் கொண்டிருந்தனர். அவர்களை நோக்கிச் சரமாரியாகச் துப்பாக்கிச் சூடுகள் மேற்கொள்ளப்பட்டன.

அவர்களை நோக்கி மேற்கொள்ளப்பட்ட ஷெல் ஒன்று. யாழ்ப்பாணம் வாழைப்பழக் கடைப் பகுதியில் விழுந்து சிதறியதால் செ.ராமமூர்த்தி, ச. பாலச்சந்திரன், ச. ஞானலிங்கம் ஆகிய மூவரும் அவ்விடத்தில் கொல்லப்பட்டனர். 11 பேர் வரையில் கடும் காயங்களுக்குள்ளாகினர்.

7.செப்டம்பர், 1986 அதிகாலையே யாழ்ப்பாணக் கோட்டையிலிருந்து ஷெல் தாக்குதல்கள் ஆரம்பமாகின. கஸ்தூரியார் வீதியில் விழுந்த ஷெல்லிற்குப் பலர் பலியாகினர். வீடுகள் சேதமடைந்தன. மத்திய கல்லூரிக் கட்டடங்களும் வேம்படி மகளிர் கல்லூரிக் கட்டடங்களும் சேதமுற்றன.

போராளிகளின் றொக்கட் தாக்குதல்களால் இரு இராணுவத்தினர் சொல்லப்பட்டனர்.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி பலதடவைகள் யாழ்ப்பாணக் கோட்டையிலிருந்து ஏவப்பட்ட ஷெல்களினால் தாக்கப்பட்டிருக்கின்றது. 8. செப்ரெம்பர், 1986 இல் பெரும் சத்ததுடன் குழந்தைகள் வார்ட்டின் மேல் ஷெல் ஒன்று விழுந்து வெடித்தது. குழந்தைகளை வைத்திருந்த தாய்மார்கள் தம் குழந்தைகளை அணைத்துக்கொண்டு கீழே விரைந்து இறங்கி விட்டதால் உயிர்ச் சேதம் தடுக்கப்பட்டது.

அதற்கு ஒரு காரணம், தளபதி கிட்டுவின் முன்னெச்சரிக்கையான செயற்பாடாகும். யாழ்ப்பாணக் கோட்டையில் ஷெல் குத்தப்படுகிறது என்ற சத்தம் எழுந்ததும் உடனடியாக அபாய மணி - சைரன் ஒலிக்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

அந்த ஒலியைக் கேட்டதும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு ஓடிச் செல்ல முடிந்தது. 29, ஒக்டோபர், 1986 இல் ஆஸ்பத்திரி முன்றலில் ஷெல் ஒன்று விழுந்தது.

(தொடரும்)

# மரக்கலமல்ல.. மனக்கலம்

இரண்டாம்பாகம்




அவள் சித்தம் சதா புரியாத பல விடயங்களாலும் கேள்விகளாலும் தினம் தினம் பீடிக்கப்பட்டதால் அவள் அவற்றை அலசி அவற்றுக்கு விடை கண்டுபிடிக்கவே முயன்று கொண்டிருந்தாளாகையால் சுற்றுலகத்தை அவள் அடியோடு மறந்தாள்.

கடற்சிப்பியைத் தன் வாயில் பொருத்தி இப்படி ஊத வேண்டும் என்று இளைய பல்லவன் காட்டியதையும், தான் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதைப் பற்றியெல்லாம் அவன் உத்தரவிட்டதையும் எண்ணி எண்ணிக் குழம்பினாள் அவள்.

அந்தக் கடற்சிப்பியை ஊதியபிறகு அதன் மர்மம் பெரிதும் உடைந்து விட்டதனாலும், அது உடைந்த விதத்தை மட்டும் அவனால் மறக்க முடியவே இல்லை, கடற்சிப்பியை ஊதினதும் திடீரென்று மாளிகைக்குள் கதவொன்று பெரும் சத்தத்துடன் திறந்ததும், சில விநாடிகளுக்கெல்லாம் யாரோ ஓடிவரும் காலடியோசை கேட்டதும் ஏதோ சொப்பனத்தில் நடப்பது போல சதா அவள் சித்தத்தில் வலம் வந்துகொண்டிருந்தன.

அந்தக் காலடியோசை தனது தந்தையின் காலடியோசை தான் என்பது அவர் தோட்டத்துக்குள் வந்த பின்பு அறிந்ததும் வியப்பு பன்மடங்காகி விட்டதன்றி அவர் காட்டிய கலவரமும் கேள்விகளைக் கேட்டுத் தன்னைத் திணறடித்து விட்டதையும் எண்ணிப் பார்த்த அவள் அவற்றுக்கெல்லாம் காரணம் தெரியாமல் தவித்தாள்,

கடற்சிப்பி ஊதப்பட்டதும் ,ஆந்தைகள் அலறும் சத்தம் எழுந்ததே விசித்திரமாயிருந்தது. அவளுக்கு அந்தச் சத்தத்தைக் கேட்டுத் தந்தை ஓடி வந்தது அதை விட விசித்திரமாயிருந்தது மஞ்சளழகிக்கு. அப்படி ஓடி வந்த தந்தை கேட்ட கேள்விகள் அப்போது அவள் சித்தத்தில் எழுந்தன.

மாளிகையிலிருந்து பலவர்மன் வேகமாகத் தோட்டத்துக்குள் வந்தவன், நேராக அந்த மரத்தை நாடி வந்தது அவள் மனக்கண்முன் நன்றாக எழுந்தது. ஆஹா! அவர் முகத்தில் தான் எத்தனை கலவரம்? எத்தனை குழப்பம்? அப்படி பலவர்மன் நிலை குலைந்ததை அவள் கண்டதே இல்லை. முகத்தில் குழப்பம், திகில், சந்தேகம் ஆகிய பல உணர்ச்சிகள் கலந்துபாய நேராக மரத்தடியை நோக்கி வந்த பலவர்மன் அங்கிருந்தது தன் மகளென்பதை அறிந்தவுடன், "யார்? நீயா? இங்கே எதற்காக வந்தாய்" என்று கோபம் கொழுந்துவிட்டெரிய சொற்களைக் கொட்டினான்.

## கடற்புறா

"ஏன்? நான் இங்கு வரக் கூடாதா " என்று கேட்டாள். "வரலாம், வரலாம். இரவில் ஏன் வர வேண்டும்?" என்று குழ றினான் பலவர்மன்.

"இரவில் நான் இங்கு வருவது வழக்கம் தானே புதிதல்லவே?" "புதிதல்ல, புதிதல்ல, இருப்பினும் இந்த மரத்தடி, இந்த மரம்..."

"இந்த மரத்துக்கென்ன? நீண்ட நாளாக இருக்கிறது! "இருக்கிறது இருக்கிறது! இருந்தாலும் அதில் ஏன் சாய்ந்து கொண்டிருக்கிறாய்?"

"ஏன், சாயக்கூடாது?" "சாயலாம். சரி சரி, இங்கு யார் வந்தார்கள்?"

"யாரும் வரவில்லையே!" பலவர்மன் கோபம் கட்டுக்கடங்காததாயிற்று. "பொய்! பொய்! சுத்தப் பொய். ஆந்தை அலறிய சத்தம் என் காதில் விழுந்தது." என்றான் பலவர்மன், சொற்களில் உஷ்ணம் ஊடுருவி நிற்க. "பட்சியைச் சொல்கிறீர்களா? பட்சி வந்திருக்கலாம்," என்றாள் அலட்சியத்துடன் மஞ்சளழகி.

"பட்சியல்ல, வந்தது மனிதன். ஆந்தைக் குரல் கேட்டது எனக்கு." என்று சீறினான் பலவர்மன்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அற்பம் என்று எதுவும் இல்லை!



திருநாவுக்கரசரின் ஒரு தேவாரப் பதிகம் நம் உடலமைப்பை இப்படி விபரித்தபடி தொடங்குகிறது.

"புழுப் பெய்த பண்டி தன்னை புறம் ஒரு தோலால் மூடி ஒழுக்கு அறா ஒன்பது வாய் ஒற்றுமை ஒன்றும் இல்லை"

புழுக்களை உள்ளே அடக்கிவைத்திருக்கும் உடலைத் தோலால் மூடிவைத்திருக்கிறோம். அவ்வளவுதான். புழுவைப்போலப் பார்த்தான் என்று யாராவது சொல்லக் கேட்டிருப்போம். உலகில் இறைவனின் படைப்பு ஒவ்வொன்றுக்கும் அர்த்தமுண்டு. எதுவும் அற்பமானதல்ல.

அரசன் ஒருவன் தன் பரிவாரங்களுடன் வேட்டைக்குப் போனான். ஓரிடத்தில் தன் குதிரையை நிறுத்தியவன், தரையில் யானையின் சாணத்தைப் பார்த்தான். அதில் புழுக்கள் நெளிந்துகொண்டிருந்தன. எதையோ யோசித்தவன், மந்திரியிடம் குரலில் வெறுப்பு தொனிக்க சொன்னான்.

இந்தப் புழுக்களைப் பார்த்தீரா. ஒன்றுக்கும் உதவாதவை. இவையெல்லாம் உலகில் வாழவே லாயக்கில்லாதவை." பிறகு, வேட்டையை முடித்துக்கொண்டு நாட்டுக்குத் திரும்பினான் அரசன்.

என்ன நேரமோ. அடுத்தநாள் காலையில் அரசனின் பார்வை மங்கத் தொடங்கியது. அன்று மாலைக்குள் முழுப் பார்வையும் பறிபோயிருந்தது. அரசன் அழுதான், அரற்றினான். மந்திரி ஆட்களை அனுப்பினார். எத்தனையோ வைத்தியர்கள் வந்தார்கள். சிகிச்சையளித்துப் பார்த்தார்கள். பார்வை மட்டும் வரவில்லை.

எந்த நோயையும் குணப்படுத்தக்கூடிய துறவி ஒருவர் பக்கத்து தேசத்தில் இருக்கிறார் என்ற தகவல் மந்திரிக்கு வந்தது. அவரே கிளம்பிப் போனார். துறவியிடம் விடயத்தைச் சொன்னார். உடன் வரும்படி அழைத்தார். துறவி, ஐயா, என்னால் வர இயலாது. உங்கள் அரசருக்காக நான் வந்தால், என்னைத் தேடி வருபவர்கள் ஏமாந்துபோவார்களே என்றார்.

மந்திரி கிளம்பிப் போனார். அரசனிடம் நடந்ததைச் சொன்னார். அரசனே துறவியிடம் வந்தான். அரசனின் கண்களைப் பரிசோதித்த துறவி ஒரு சிறு குடுவை ஒன்றைக் கொடுத்தார்.

"இதிலிருக்கும் பொடியை நீரில் கரைத்து, ஒரு நாளைக்கு மூன்று வேளை கண்ணில் இடுங்கள்" என்றார். அரசன் அரண்மனைக்கு வந்தான். துறவி சொன்னபடி செய்தான். ஒரே வாரத்தில் முழுப் பார்வையும் மீண்டுவிட்டது.

ஏராளமான வெகுமதியுடன் துறவியின் ஆசிரமத்துக்கு வந்தான். அதையெல்லாம் வேண்டாம் என்று மறுத்துவிட்டார் அந்தத் துறவி. தயங்கித் தயங்கி அரசன் கேட்டான். மகானே. எனக்கு நீங்கள் கொடுத்த மருந்தை, எந்த மூலிகையில் தயாரித்தீர்கள்?

மூலிகையெல்லாம் இல்லை. யானையின் சாணத்தை மொய்க்கும் ஒருவகைப் புழுக்களை எடுப்பேன். அவற்றை வெயிலில் காயவைத்து, அரைத்துப் பொடியாக்குவேன். அதுதான் இந்த மருந்து. கேட்ட அரசன் நெடுஞ்சாண்கிடையாகத் துறவியின் காலில் விழுந்தான்.

இறைவனின் படைப்பில் எதுவும், எதற்காவது பயன்படும். "இப்போதுதான் புரிந்தது மகானே!" என்றான்.



# ஆச்சி அறிவுரை

## வீதி விதிகளைக் கடைப்பிடிக்க வேணும்

## பேராண்டி...

மாவை.நா.கஜேந்திரன்

நேற்றையில இருந்து, நீ பள்ளிக்கூடத்துக்கு சைக்கிளில போறனி எண்டு கொம்மா சொன்னாள்.

ரொம்ப சந்தோசமா இருந்தது பேராண்டி.

நான் பொத்திப் பொத்தி மடிக்குள்ள வைச்சிருந்த என்ர செல்லம், சைக்கிள்ல பள்ளிக்கூடம் போறாய் எண்டு நினைக்க மனம் பூரிச்சுப் போயிட்டுது.

வீதியில போறது கவனம். எப்பவும் அவதானத்தோடதான் வீதியில போகவேணும். ஏனெண்டால், வீதி விதிகளைப் பின்பற்றி நாங்கள் சரியாய் போனாலும் அதுகளை இம்மியும் மதிக்காமல் வாற சிலதுகளாலை விபத்துக்கள் ஏற்பட்டு விடும்.

அதோட எங்கட பிரதேசத்தில வீடுகளில வளர்க்கிற நாய்களை உரிமையாளர்கள் வீதியிலைதானே வைச்சு வளர்க்கினம்.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில விபத்துப் பிரிவில இருக்கிற ஆக்களைப் போய் விசாரிச்சால், நாயோட அடிபட்டு கால் முறிஞ்சு, கை முறிஞ்சு, இடுப்பெலும்பு முறிஞ்சு கிடக்கிறவதான் அதிகம்.

முந்திக் கட்டாக்காலி நாய்களைப் பிடிச்சு சாக்காட்டினவை. ஆனால் அதுகளைச் சாக்காட்டக் கூடாது எண்டொரு சட்டம் வந்ததாலை, அதுகள் மனிசரைச் சாக்காட்டுதுகள்.

கட்டாக்காலி நாய்களைச் சாக்காட்ட வேண்டாம். அதுகளப் பிடிச்சு தடுப்பூசி போட்டாலே போதுமே. இதுகள எங்கட உள்ளூராட்சி மன்றங்கள் செய்யவேணும். ஆனால் அவைகளுக்கு அதுக்கு நேரமில்லையே.

இதுபோக வீதியில போட்டி போட்டு ஓடுற பேருந்துகள் படுமோசம் பேராண்டி.

ஏதோ வீதி முழுக்க தங்களுக்குத்தான் சொந்தமெண்டுற நினைப்பு அவைக்கு.

மற்றவைக்கு வழி விட்டுக் கொடுக்காமல் நடு வீதியால ஆமை வேகத்தில போவினம். இல்லாட்டி நீயா? நானா? எண்டு போட்டி போட்டு றேஸ் ஓடுவினம்.

இதைவிட, ஏன், எதுக்கு இவ்வளவு வேகமா மோட்டார் சைக்கிளை ஓட்டுறம் எண்டு தெரியாமல் முறுக்கிற ஒரு கூட்டம்.

இவர்களை எல்லாம் தாண்டி பாதுகாப்பா போக வேண்டிய இடத்துக்குப் போய்ச் சேருறது பெரும்பாடெல்லோ?

அதுதான் பேராண்டி, வீதியில போறது கவனம், யார் என்ன செய்தாலும், உனக்கு எவ்வளவு அவசரம் எண்டாலும், விதி எதுவோ அதன்படி நடக்கவேணும்.

ஏனெண்டால் எங்கட உயிர் மட்டும் சம்பந்தப்பட்ட விடயம் இல்லை இது. இன்னொரு உயிர் சம்பந்தப்பட்ட விடயமும்.

நான் சொன்னதுகளை மனதில் வைச்சுக் கொண்டு பயணம் செய். ஆரோக்கியமான பயணம் நிறைய நல்ல நினைவுகளைத் தரும் பேராண்டி.

ஆச்சி வருவா..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுவாழ்வு பெற்ற வல்லி சோழ இ

# மாவிட்டபுரம் ஸ்ரீ கந்

## மஹா கும்பாபிஷேக பெருவிழ







### மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோவில்

இதன் வரலாற்றினை ஆராய்ந்த தொல்லியல் வல்லுநர்கள் கி.பி 300 ஆண்டுகளுக்கு முற்பட்ட திருவுருவங்களைக் கண்டு உறுதிப்படுத்தி உள்ளனர். இத்திருத்தலத்தின் அற்புதத்தை, புராண இதிகாச சான்றுகள் கொண்டு ஆராய்ந்து சதாவதானி கதிரவேற்பிள்ளை அவர்கள் தாம் இயற்றிய "சுப்பிரமணிய பராக்ரமம்" என்ற நூலில் மாவைக் கந்தப் பெருமான் அற்புதத்தை ஓர் அத்தியாயமாக பதிவிட்டுள்ளார்.

இத்திருக்கோவில் 7 ஆம் நூற்றாண்டுக்கு முன் வரலாற்றுக்கு முற்பட்டு வாழ்ந்த சோழ இளவரசி இங்கு வந்து வழிபட்டுச் சாப விமோச்சனம் பெற்றதை உறுதிப்படுத்தி வருகின்றது. அதற்கான சான்றுகள் இன்றும் மிளிர்ந்து கொண்டு இருக்கின்றது. அன்று சோழ இளவரசியின் வேண்டுகோளை நிறைவேற்றும் பொருட்டு சோழ அரசன் உக்கிரப் பெருவழுதி அங்கிருந்து சிப்பந்தியர்களை கொணர்ந்து ஐந்து திருவீதிகளும் ஆறு கோபுரங்களும் கொண்டு பிரம்மாண்டமான கோவிலை நிறுவியதுடன் தில்லைவனம் என்ற சிதம்பரம் திருக்கோவிலில் இருந்து விக்கிரகங்கள் மற்றும் வேண்டிய உபசாரப்பொருட்கள் சகிதம் எமது முன்னோர் பரம்பரையினராகிய தீக்ஷிதர்களையும் அனுப்பி, திருக்குடமுழுக்கு பெரும் சாந்தி விழா நடாத்தியதை எமது சந்ததியினர் வழிவழியாக நினைவு கூருவர். இன்றுவரை ஆதீனக்கர்த்தாக்களும், இசைக்கலைஞர்களும், ஏனைய சிப்பந்திகளும் தலைமுறை தலைமுறையாக ஆதீனப்பேரரசுவை வழிநடத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

13ஆம் நூற்றாண்டு தொடக்கம் யாழ்ப்பாணத்தை ஆட்சி புரிந்த யாழ்ப்பாண அரசர்கள் இத்திருத்தலத்தை தரிசித்து வந்தனர். இவ்வாறு இலங்கை என்று அழைக்கப்படும் ஈழத்தில் உள்ள மக்களை அருளாட்சி செய்து வந்த மாவைத் திருத்தலம் அந்நியர் படையெடுப்பினால் 16ஆம் நூற்றாண்டு பறங்கியரால் அழிக்கப் பெற்றது. அதன் தடயங்கள் இன்றும் காணப்படுகின்றது. பிரிட்டிஸ்காரர் ஆட்சியில் எமது முன்னோர்கள் இத்திருத்தலத்தை செம்மையாக புனரமைப்பு செய்து, முன்னர் போல் நித்திய பூஜைகளும், 31 நாட்கள் சிறப்பான மகோற்சவ திருவிழாக்களும் நடாத்தி வந்தன.

இந்நிலையில் இலங்கையில் நடந்தேறிய உள்நாட்டுப் போரினால் 1990 ஆம் ஆண்டு இப்பிராந்திய மக்கள் அனைவரும் வெளியேற, கோவிலின் பெரும்பகுதியும், தங்க விக்கிரகங்கள், வெள்ளி கொடித்தம்பம், பஞ்ச இரதங்கள் முதலான சகல வாகனங்களும், பல கோடிரூபா பெறுமதியான அசையும் அசையாச் சொத்துக்களும் அழிவுற்றன. கொள்ளையடிக்கப்பட்டன, அவை விபரிக்க முடியாத பேரழிவு.

கடந்த பல ஆண்டுகளாக, நலிவுற்ற மக்கள் துணை கொண்டு, கோயில் வேலைகள் நடைபெற்று வந்த வண்ணம் உள்ளன. மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி திருக்கோவில் பண்டு தொட்டு பாரததேசத் திருநாட்டிற்கும் ஈழத் திருநாட்டிற்கும் இடையேயான சமய கலாசார பிணைப்புகளுக்கு ஆதார சக்தியாக உள்ளது.

மேலும் தங்களது ஆலோசனைகளையும், கருத்துக்களையும், ஆதரவுகளையும் தந்துதவுமாறு இத்தால் அன்புடன் விண்ணப்பிக்கிறேன். வாழ்க வளர்க தமிழும் சமயமும் பண்பாடுகளும் ஒற்றுமையும் சமாதானமும் சாந்தியும்

மஹாராஜஸ்ரீ து.ஷ.இரத்தினசபாபதிக்குருக்கள்
மாவை ஆதீனப் பேரரசு, ஆதீனக்கர்த்தா, மாவை ஆதீனம், மாவிட்டபுரம்.



கந்தப்பெருமானின் கும்பாபிஷேக நிகழ்வு சிறப்புற நடைபெற வாழ்த்துகின்றோம்
ஹர ஹர சிவாய-சிவாய நம ஓம்!

**S.Subramaniam & Co. (Pvt) Ltd.**

கோயில் அபிஷேகம், பூசை, திருமணம், புதுமனைப் புகுதல் போன்ற விசேஷ வைபவங்களுக்குத் தேவையான வாசனைத் திரவியங்கள், விபூதி, சந்தனம், குங்குமம், புனுகு ஜவ்வாது, குங்குமப்பூ, கஸ்தூரி போன்றவைகளும், மின்சார மருந்து, குழந்தைகளுக்குத் தேவையான கோரோசனை, முக்கூட்டு மாத்திரை போன்றவைகளுக்கும் கரிசலாங்கண்ணித் தைலம்-பொன்னாங்கண்ணித் தைலம், பிரமி (வல்லாரை) தைலம் போன்ற கூந்தல் தைலங்கள், கோயில் பட்டுக்குடை போன்ற அனைத்தையும் பெற்றுக் கொள்ளக்கூடியதும் ஆயுர்வேத மருந்து பொருட்களும் கிடைக்கும் பெயர் பெற்ற ஒரே ஸ்தாபனம்.

No160, Sea Street, Colombo 11. Tel: 011 243 5825

கந்தப்பெ
கா
K
உங்கள் வீட்டுக்குத் தே
பொருட்களையும் எம்மி
021 222
KKS ROA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ழ இளவரசி மாருதப்புரவீகவல்லியின்

# ந்தசுவாமி கோவில்

# விழா சிறப்பு மலர் 11.04.2025



(சி-2621)

## மாருதப்புரவீகவல்லியும் மாவிட்டபுரமும்-வரலாறு

இறைவன் தன்னளவில் எங்கும் வியாபித்துள்ளான். அத்துடன் நமக்காக உலகின் பல்வேறு இடங்களில் விளங்கித் தோன்றிக்கொண்டுமுள்ளான். அவ்வவ்விடங்களில் தான் விளங்கித் தோன்றுதற்கு ஏற்ற ஓர் ஆலயம். ஓர் ஊர் அமைத்தற்கும் இறைவன் தானே ஒவ்வொருவரைப் பிரேரித்து விடுகின்றான். இவ் வகையில் இறைவனது பிரேரகம் பெற்ற ஒரு பேரருட் செல்வியே மாருதப்புரவீகவல்லி என்க.

மாருதப்புரவீகவல்லியை விட்டு மாவிட்டபுரம் என்பதை விளங்கிக்கொள்வது துர்லாபமாகும். மாவிட்டபுரம் என்ற பெயரின் காரணத்தை ஆராய்கின்றவருக்கும். மாவைக் கோயிலின் அரசகளை வாய்ந்த கட்டிட அமைப்பை உற்றுநோக்குபவருக்கும். மாவைப் பெருமானின் ராஜ கம்பீரத் தோற்றத்தினைக் கண்டு நயப் போருக்கும் இது சொல்லவேண்டாத விடயமாகும். இவ்வளவுக்கு மாவிட்டபுரத்தோடு ஐக்கியமாய்விட்ட மாருதப்புரவீகவல்லிக்கு அவள் பெயரால் ஒரு மடமோ. மண்டபமோ. ஒரு சிலையோ அர்ப்பணிக்கப்படாமையை நினைந்து நாம் வெட்கப்படத்தான் வேண்டும். தற்போதைய கோயிலுக்குக் கிழக்குத் திசையில் குமாரத்தி பள்ளம் என ஒரு இடப்பெயர் இன்னும் வழங்கி வருவது மட்டும் ஒருவகையில் ஆறுதல் தருகின்றது.

மாருதப்புரவீகவல்லியைப் பற்றியும் மாவிட்டபுரத்தைப் பற்றியும் நமக்கு அறிவிக்கும் பூர்வநூல்கள் "வையாபாடல்". "கைலாயமாலை". "யாழ்ப்பாண வைபவமாலை" என்பன. அவை பற்றிய பிற்கால நூல்கள். "வைபவ விமர்சனம்". "யாழ்ப்பாணச் சரித்திரம்" என்பன. இவ் வைந்தில் "விமர்சன" மொன்றொழிய ஏனைய நூல்கள் குறித்த விடயம் சம்பந்தமாக வரலாற்று அநுபவரீதியான குறிப்புக்களைத் தருகின்ற விமர்சன நூலாசிரியர் வரலாற்றனுபவ உண்மையைப் புலப்படுத்த ஆராய்ச்சி நிகழ்த்தும் மரபைக் கைவிட்டு. தம் ஆராய்ச்சித் திறமையை மிகுத்துக் காட்டுவதற்காகவோ வேறுமேதுங் காரணம் பற்றியோ அநுபவரீதியான வரலாற்றுண்மையை அழித்துச் சிதைக்க முயன்றுள்ளார். "மா" என்னும் சொல் குதிரையென்றே பொருள்படும். எந்நிலையிலும் அது குதிரைமுகம் எனப் பொருள்படாது. மாவிட்டபுரம் என்பதற்குக் குதிரைமுகம் விட்ட இடம் என்ற பொருள் எப்படிப் பொருந்தும்? என்பது அவர் கூற்று. கங்கைக்கண் இடைச்சேரி எனில் கங்கைக் கரைக்கண் இடைச்சேரி எனவும் யாழ் பயின்றான் எனில் யாழிசை பயின்றான் எனவும் இவைபோற் பல்லாயிரம் வழக்குள்ள தமிழ் மொழியில் மாவிட்டபுரமென்பதற்குக் குதிரைமுகம் விட்டபுரம் என்று பொருள் கோடல் பழுதென்னும் அவர் கருத்தொன்றே. அவர் அறியாமை முழுவதையும் அம்பலப்படுத்தி விடுகின்றது. தாம் கருதியதைச் சாதிப்பதற்காகக் குதிரைக்கு முகமில்லையென்று இவர் வாதிக்க முயலினும் ஆச்சரியமடைதற்கில்லை. அவரை விட்டு அப்பாற் செல்வதே மேல்.

மற்றைய நூல்கள் நான்கில் 'வையா பாட"லின் கண் மாவிட்டபுரமென்னும் பெயர். "கீரிமாமலையிலாடினள் தீர்த்தம். அம்முகமகன்றது. அன்னதால் மாவிட்டபுரம்" என்ற செய்யுளடியில் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. அரசகுமாரியின் பெயர் "மாருதப்பிரவை உவமையில் வல்லி" என வந்துள்ளது. இதன்படிக்கு மாருதப்பிரவல்லி என்பதே அவள் பெயர் என்பது தெளிவாகின்றது. "வையாபாடல்" எல்லாவற்றிற்கும் முந்திய நூல் அதன் வழிவந்த மற்றைய நூல்களிலும் அப்பெயர் அவ்வாறே வழங்கி வந்துள்ளது. மாருதப்பிரவல்லி என்னும் இப்பெயர் மாருதப்பிரவீகவல்லி. மாருதப்புரவீகவல்லி எனக் காலகதியிற் பேச்சு வழக்கில் மாறுதலுற்றிருத்தல் கூடும். விமர்சனநூலுடையார் மாருதப்பிரவாகவல்லி என்பது இப்பெயரின் பழையரூபம் எனக் கூறிக் காற்றினால் தள்ளுண்டு கடற்பிரவாகத்தில் மிதந்து வந்தவள் எனப் பொருள் விரிப்பர். கடற்பிரவாகத்தில் மிதந்துவந்த அவளைக் கீரிமலைப்பக்கம் வரவிடாது தடுத்து வேறெங்கோ கரையேற்றிவைத்துள்ளது அவர் புத்திப்பிரபாவம். விரிவு வேண்டுமேல் அவர் நூலிற் காண்க.

மாருதப்பிரவல்லியின் வருகைக்குமுன் இப்போதைய மாவிட்டபுரப் பிரதேசம் கோயிற்கடவை என்னும் பெயரால் வழங்கி வந்துள்ளது. "வைபவமாலை" யில் இப்பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. இற்றைக்கு ஏறக்குறைய நூறு வருடங்களுக்கு முன் வாழ்ந்த சுன்னாகம் முத்துக்குமாரக் கவிராயர் மாவைப் பெருமான் பெயரிற் பாடிய பாடல்களிலும் இப்பெயரே வந்துள்ளமை காண்க.

மாருதப்பிரவல்லி திசை உக்கிரசோழன் மகள் எனவும். கீரிமலைக்கு வந்து குதிரைமுகம் மாறி மாவிட்டபுரமும் அமைத்த பின் அவள் கதிரைமலையிலிருந்து அரசாண்ட உக்கிரசிங்கசேனன் என்பவனை மணந்திருந்தாளென்றும் "வையாபாடல்" கூறும். "வைபவமாலை" இவ்வரலாற்றை இன்னும் விளக்கமாகக் கூறும். மாவிட்டபுரத்திற் கோயிலமைந்த செய்தி இதன்கண் விரிவாகக் கூறப்பட்டுள்ளது. மாருதப்பிரவல்லியின் விருப்பத்திற்கிணங்கத் தந்தையாகிய திசையுக்கிர சோழன் கோயிலமைத்தற்கு உதவி செய்தான். சோழநாட்டிலிருந்தே சுவாமி விக்கிரகமும் பெரிய மனத்துளார் என்ற ஒரு குருக்களும் அவனாற் கப்பலேற்றி அனுப்பப்பட்டனர். கப்பல் வந்து தங்கிய இடம் அந்நாளிற் காசாத் துறையென வழங்கியது. காங்கேயனாகிய சுவாமி வந்திறங்கியதால் பின் அது காங்கேயன்துறை என்று வழங்கலாயிற்று என்பது அந்நூற் செய்தி. "விமர்சன" காரர் இப்பெயர்க் காரணத்தையே வேண்டுமென மறுத்து காங்கேயன் என்ற ஒருமனிதன் பெயரால் அது ஏற்பட்டிருக்கலாமென்பர். ஒரு தனிமனிதன் பெயராற் சமய சம்பந்தமான ஓர் இடத்தின் பெயர் விளங்குதற்கும் ஒரு சுவாமியின் பெயரால் அது விளங்குதற்குமிடையே தாரதம்மியம் உணரமாட்டாத அவர்தம் மதித்திறனை யார்தான் என் செய்வது!

மாருதப்பிரவல்லி சம்பந்தமாக புலோலி. வித்வான் நா. கதிரவேற்பிள்ளையவர்கள் எழுதிய வரலாறொன்று அவர் எழுதிய "சுப்பிரமணிய பராக்கிரமம்" என்னும் நூலிற் காணப்படுகின்றது. அவர் கூறும் வரலாற்றுச் சுருக்கத்தினையும் இங்கே குறிப்பிடுதல் தகும்.

கலிங்கதேசத்து அரசனொருவனுக்குக் கனகசுந்தரி என்னும் மகளொருத்தி இருந்தாள். அவள் மூர்த்தி. தல. தீர்த்த சேவையை விரும்பிப் பல தலங்களைத் தரிசித்து வந்தாள். பொதியமலைச் சாரலில் தாம்பிரபரணி நதிக்கரைக்கு நீராட வந்தபோது அங்கே பஞ்சாக்கினி நடுவிற் கடுந்தவம் புரிந்த அயக்கிரீவ முனிவரைப் பார்த்து நகைத்தாள். அதனாற் சினந்த முனிவர் 'நீ மறுபிறப்பிற் பலருமிகழுங் குதிரை முகத்தைக் கொள்ளுவாய்" என்று சாபமிட்டார். கனகசுந்தரி அவர் சாபத்தைக் கேட்டு வருந்தி அவர் பாதங்களில் வீழ்ந்து மன்றாடி. தன் சாபம் நீங்குதற்கு உபாயந் தெரிவிக்கவேண்டும் என்று இரந்தாள். முனிவர் சினந்தணிந்து. "பெண்ணே. சாபப்படியே நீ குதிரைமுகம் பெற்றிருக்கையிற் கடற்றுறைகள் தோறுஞ் சென்று தீர்த்தமாடுவாய். அங்ஙனம் ஆடிவருகையில் ஓரிடத்திற் கந்தசுவாமியின் அருளால் நின் குதிரை முகம் மாறும்"என்று சாப விமோசனங் கொடுத்தார்.

பின்னர் கனகசுந்தரி அப்பிறப்பு நீங்கி மறுபிறப் பெய்தினாள். அப்பிறப்பில் மதுரை அரசனாகிய உக்கிரப் பெருவழுதிக்குப் புத்திரியாகப் பிறந்தாள். பேரழகியாய் விளங்கியமையின் அங்கசுந்தரியென வழங்கப்பெற்றாள். சிலநாள் செல்ல அங்கசுந்தரி குதிரை முகமுடையவளாயினாள். "குதிரைமுகம் மாற வேண்டில். தீர்த்த யாத்திரை செய்க" என அசரீரி கூறிற்று. அதற்கிசைய அங்கசுந்தரி இந்தியா முழுவதிலும் தீர்த்தயாத்திரை செய்து முடிவில் இலங்கையை அடைந்து கதிர்காமத்தில் வழிபாடு செய்து கொண்டிருந்தாள். "இந்நாட்டின் வடகோடியிலே கடற் கரையில் திவ்விய தீர்த்தமொன்றுள்ளது. ஆங்கு சென்று காங்கேயனை அன்புடன் நினைந்து முழுகுவையேல் உன் குதிரை முகம் அகலும்" என அங்கும் அசரீரி கூறிற்று. பெருமகிழ்வுற்ற அங்கசுந்தரி அதன்படியே வந்து கீரிமலை அடிவாரத்தில் ஊறிப் பெருகும் திவ்விய தீர்த்தத்தில் மூழ்கியபோது குதிரைமுகம் மாறிற்று. அதனாற் பெருவியப்புற்ற அவள் பரிவாரங்கள் உடனே அவள் தந்தையாகிய உக்கிரப்பெருவழுதிக்கு அறிவித்தார்கள். காங்கேயப்பெருமான் திருவருளினால் அவள் குறை நீங்கியமையால் அவ்விடத்திற் சுப்பிரமணியப் பிரதிஷ்டை செய்ய விரும்பினார்கள். அரச செல்வ இயல்புக்கேற்றபடி ஆலயமும். பிரதிஷ்டையும் நிறைவேறின என்பது அவ் வரலாறு.

குறித்த வரலாறு திருச்செந்தூர்ப்புராணத்திலும் இடம் பெற்றுள்ளது. கனகசுந்தரி. அயக்கீரிவன். உக்கிரப் பெருவழுதி. அங்கசுந்தரி என்ற இதே பெயர்கள் அங்குமுள்ளன.

இஃது இவ்வாறாகத் திருகோணமலையிலுள்ள கல்வெட்டில் ஆடகசவுந்தரி என்னுமொரு பெயர் காணப்படுவதாக ஆராய்ச்சியாளர் கூறுவர். குறித்த வரலாற்றிலுள்ள கனகசுந்தரி. அங்கசுந்தரி என்னும் பெயர்களோடு இப்பெயர் தனித்தனி ஒன்றுபடக் கூடியதாய்க் காணப்படுகிறது. கனகம் பொன் ஆடகம் என்பன ஒருபொருட் சொற்கள். சுந்தரி -சௌந்தரி - சவுந்தரி என்பன ஒரேசொல்லின் வெவ்வேறு ரூபங்கள். அங்க என்ற சொல் பேச்சு வழக்கிலே தவறுதலாக உச்சரிக்கப்பட்டு ஆடக என மாறி யிருத்தல்கூடும். இது பொருந்துவதாயின் கல்வெட்டு சாசனமும் கதிரவேற்பிள்ளையவர்கள் தரும் வரலாறும். திருச்செந்தூர்ப் புராணச் செய்தியும் ஒன்றுபடுமாறு காணலாம்.

"விமர்சன" நூலாசிரியர் இப்பெயர் கல்வெட்டில். முன்முலை ஆடகசவுந்தரி என உள்ளதாகக் கூறி முன்முலை என்பதற்குப் பிறக்கும்போதே இருந்த முலையெனக் கருத்துப்பண்ணி. அவ் வழியே அவள் வரலாற்றைக் கற்பித்து மாருதப்பிரவாகவல்லி என்று அவளுக்குத் தாமிட்ட பெயருக்குக் காரணமுங் கண்டு கூறுவர். அவர் கூறும் அக்கூற்றுக்கு அவர் தாமேயன்றி வேறெத்தகைய ஆதாரமுமின்றாம். கல்வெட்டில் முன்முலை ஆடகசவுந்தரியென்றுளதேல் அது ஆராய்தற்பாலது. அவ்வாராய்ச்சியும் நம் நாட்டின் அநுபவரீதியான வரலாற்றுண்மைக்கு விரோதமாகாத வகையில் நிகழ்தற்பாலது. அதற்குப் போதிய ஆதாரம் உடனடியாகக் கிடைக்காதிருப்பின் இன்னும் பொறுத்திருந்து முயன்று ஆராய்தற்பாலது. "விமர்சன" காரருடைய குறித்த ஆராய்ச்சி இவ்வகையில் எவ்வித கணியமுமின்றி வெற்றெனத் தொடுத்தலாகி விபரீத உணர்வை விளைத்து நாட்டின் அநுபவரீதியான வரலாற்று உண்மைக்குப் பங்கம் விளைப்பதாகும். அதுநிற்க.

மாருதப்புரவீகவல்லியின் முக்கியத்துவம் கோயில். மாவிட்டபுரம் என்ற அளவில் மட்டுந் தங்கிவிடவில்லை பூர்வ நூல்கள் எல்லாம் ஒப்புகின்றவாறு இலங்கைத் தமிழரச பரம்பரையும் அவளாலேயே நிலைபெறுத்தப்பெறுமாறு கண்டு யாமெல்லாம் இறும்பூதடைதல் வேண்டும். கி. பி. எட்டாம் நூற்றாண்டு தொடக்கம் போர்த்துக்கேயர் வரும் வரையில் நிலை பெற்றிருந்த தமிழரச பரம்பரையின் முதல்வி மாருதப்புரவீகவல்லியேயாம். அவளை அந்நாட் கதிரைமலையில் ஆட்சி புரிந்த உக்கிரசிங்கன் என்பவன் மணந்தான். பாலசிங்கன் என்பான் அவர்கள் புத்திரனாய்த் தோன்றித் தந்தைக்குப்பின் ஆட்சி புரிந்தான். காலகதியில் அப்பரம்பரை சந்ததியற்றுப் போகவே மீளவும் திசையுக்கிரசோழன் மரபிலே தோன்றிய சிங்கையாரியன் இங்கு அழைக்கப்பட்டு ஆரியச் சக்கரவர்த்திகள் பரம்பரை உருவாயிற்று. இவ்வெல்லாவகையாலும் பொதுவாக ஈழமும். சிறப்பாக யாழ்ப்பாணமும் மாருதப்புரவீகவல்லியை நினைவுகூர வேண்டிய கடப்பாடு என்றுமுண்டு.

வரலாற்றில் மாருதப்புரவீகவல்லிக்கு அடுத்த படியாக முக்கியத்துவம் பெற்றுள்ளது மாவிட்டபுரம். கீரிமலை. காங்கேசன்துறை என்ற இரண்டும் இதன் பகுதிகள். ஆகவே. ஸ்தலஸ்தாபன ரீதியில் மற்றைய இரண்டு பெயர்களைவிட இப் பெயர் பிரபலமாக வழங்கப்பட்டு வருவதற்கு எல்லாவிதமான தகுதிப்பாடுகளுமுண்டு. மூர்த்தி. தலம். தீர்த்தம் மூன்று முடையதாய்ச் சைவத் தமிழ்க் கலாசார நிலையமாய் உள்ள ஓர் இடத்தைக் குறிக்கும் இப்பெயர் அவ்வகையில் வழங்கப்பட்டு வருமேல் அதன் பழைமை மேலும் மேலும் விளக்கமுறுவதுடன் நம் பிற்சந்ததியார்பால் அது தன் சுயமதிப்போடு விளங்குதற்கும் வாய்ப்பாகும் என்பது எமது எண்ணம். சம்பந்தப்பட்ட அன்பர்கள் இதனைக் கருத்திற் கொள்ளத் திருவருள் துணைபுரிவதாக.

சுபமஸ்து !

இலக்கிய கலாநிதி பண்டிதர் மு.கந்தையா,
(மாவைப் பிள்ளைத் தமிழ்)


ந்தப்பெருமானே எமக்கருள்வாயே!

காங்கேயன் அங்காடி

KANKEYAN SUPERMART

ட்டுக்குத் தேவையான அனைத்து விதமான மளிகைப்
ளையும் எம்மிடம் நிர்ணய விலையில் பெற்றுக்கொள்ளலாம்.

222 3639/ 075 222 3936

ROAD, MAVIDDAPURAM





ஓம் சரவணபவ!

மாவிட்டபுரம் ஸ்ரீ கந்த சுவாமி கோயில் மகா கும்பாபிஷேக பெருவிழா
சிறப்புற வாழ்த்துகிறோம்

இந்துமா சமுத்திரத்தின் முத்தெனத் திகழும் ஈழத்திருநாட்டின் சிகரத்தின் கோவிற்கடவையில் வீற்றிருந்து நல்லாட்சி புரிபவனே அழகும் இளமையும் என்றேன்றும் கொண்ட முருகா! அடியவர்களின் குறை தீர்க்கும் அபிஷேகக் கந்தா! தரணிதனில் சாந்தியும், சமாதானமும் ஏற்பட வந்து காத்தருள்வாய் முருகா!

K.M.V.R பவன் ஆயுர்வேத மருந்தகம் & பல்பொருட்சாலை

ஆலய மஹாகும்பாபிஷேக திரவியங்கள், அபிஷேக ஆராதனைப் பொருட்கள், சித்த ஆயுர்வேத மூலிகைகள், மருந்துவகைகள், மருந்து சரக்குகள், சுத்தமான தேன், பசுநெய், எண்ணைவகைகள், நாள்அத்திவார, அலங்கார, ஆடம்பர அன்பளிப்பு பொருட்களையும், பாடசாலை மாணவர்களுக்கான அப்பியாசக் கொப்பிகள், பயிற்சிப் புத்தகங்கள், உபகரணங்களையும், பிளாஸ்ரிக் பொருட்கள் மற்றும் கையடக்க அலைபேசிக்கான சிம் அட்டைகள் (Airtel, Dialog, Hutch, Mobitel) இவற்றுக்கான Reload, Card, bill Payments, Ez-Cash, M-Cash, photo copy, Printing, Binding, Scanning, Laminating மற்றும் NEWS PAPERS (வலம்புரி, வீரகேசரி, தினகரன், ஈழநாடு, தினக்குரல், தமிழன், Daily News, Sunday Times, Sunday Observer) என்பவற்றை பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய நம்பிக்கையான ஒரே ஸ்தாபனம்

K.M.V.R பவன் ஆயுர்வேத மருந்தகம் & பல்பொருட்சாலை

K.K.S Road, Maviddapuram, T.P - 021 224 3676
076 913 2049


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்க்கு பிரசவம் பார்த்தி 13 வயது மகன்



தாய்க்கு எதிர்பாராத விதமாகப் பிரசவ வலி ஏற்பட்ட போது, துணிச்சலுடன் செயற்பட்டு பிரசவம் பார்த்து தனது தம்பி பூமிக்கு வர உதவியிருக்கிறார் 13 வயதுச் சிறுவன்.

மருத்துவப் பணியாளர் மொபைலில் தொடர்பில் இருக்கும்போது அவரது அறிவுறுத்தல்களைக் கேட்டு, கவனமாகச் செயற்பட்டு மருத்துவ உதவியாளர் வரும்வரை தாய் சேய் நலத்தைக் காத்துள்ளார்.

**விவேகத்துடன் செயற்பட்ட சிறுவன்**

சீனாவின் புஜியான் மாகாணத்தில் இந்தச் சம்பவம் நடைபெற்றுள்ளது. 13 வயதுச் சிறுவன் அவசர மையத்துக்கு அழைப்பு விடுத்து கர்ப்பமாக இருக்கும் தனது தாய்க்குப் பனிக்குடம் உடைந்து விட்டதாகவும், அவர் அதீத வலியில் துடிப்பதாகவும் கூறியுள்ளார்.

சிறுவனுக்குப் பதிலளித்த சென் சாயோஷ்ன் என்ற மருத்துவ உதவியாளரிடம், தன்னால் ஏற்கெனவே குழந்தையின் தலையைப் பார்க்க முடிவதாகவும், அம்மாவின் நலன் கவலையளிப்பதாகவும் கூறியுள்ளார்.

அவசரமாக அன்புலன்ஸில் சென்றபடி, சிறுவனுக்கு அறிவுறுத்தல்களை வழங்கியுள்ளார் சென். அம்மாவை அமைதிப்படுத்துமாறும் பிரசவத்துக்கு உதவுமாறும் கூறியுள்ளார்.

மருத்துவ உதவியாளர் கூறிய அறிவுறுத்தல்களைச் சரியாகப் பின்பற்றி ஆரோக்கியமான ஆண் குழந்தையைப் பெற்றெடுக்க உதவியுள்ளார். ஆனால் தொப்புள் கொடியை வெட்டச் சுத்தமான கயிறோ ஷ் லேஸோ சிறுவனுக்குக் கிடைக்கவில்லை.

விரைவாகச் சிந்தித்து, மருத்துவ உதவியாளர் ஆலோசனையுடன் முகக் கவசத்தில் இருக்கும் கயிற்றைப் பயன்படுத்தியுள்ளார். இதனால் தொற்று ஏற்படுவதும் அதிகபடியான இரத்தம் வெளியேறுவதும் தடுக்கப்பட்டது.

மருத்துவ உதவியாளர் வந்த உடனேயே தாயையும் குழந்தையையும் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று பரிசோதித்துள்ளனர். இருவரும் நலமாக இருப்பதாகத் தெரிய வந்துள்ளது.

சீன சமூக வலைத்தளங்களில் இந்தச் செய்தி பரவி, பரவலான பாராட்டைப் பெற்றான் அந்தச் சிறுவன்.

# குடும்ப பட்ஜெட்



நம் முன்னோர்கள் கடன் இல்லாத நிம்மதியான வாழ்க்கையை வாழ்ந்தார்கள். காரணம், குடும்ப பட்ஜெட் (Family Budget) போட்டு செலவு செய்ததே. வரவு மற்றும் செலவை ஒவ்வொரு நாளும் எழுதிவைத்து, மாதக் கடைசியில் அதைப் பார்த்து தேவையில்லாமல் செய்த செலவுகளைக் கண்டறிந்து, அடுத்தடுத்த மாதங்களில் அந்தச் செலவுகளைத் தவிர்க்கும் வழக்கம் அவர்களிடம் இருந்தது. இதனால், அவர்களிடம் பணம் சேர்ந்தது. அதைவைத்து, தங்கம், நிலம், தோட்டம் என வாங்கிப் போட்டு வசதியாக வாழ்ந்தார்கள். ஆனால், இன்றைக்கு நிலைமை தலைகீழாக இருக்கிறது.

**பணத்திட்டம்..!**

குடும்ப பட்ஜெட் என்பதை பணத் திட்டம் என்று குறிப்பிடலாம். பட்ஜெட் போட்டு செலவு செய்யும்போது நம் பணம் உருப்படியாகத்தான் செலவாகிறதா, தேவையில்லாத செலவா என்பதைச் சுலபமாகக் கண்டுபிடித்து விட முடியும்.

சம்பளம் வந்ததும் குடும்பத்தினர் அனைவரும் சேர்ந்து, கலந்து பேசி முதலில் அத்தியாவசிய தேவைகளுக்கான பணத்தை தனியே ஒதுக்க வேண்டும். அடுத்து அவர்களின் எதிர்கால தேவைக்கு பணத்தை ஒதுக்க வேண்டும். இறுதியாக, ஆசைப்பட்ட விஷயங்களுக்கு செலவிட பணம் ஒதுக்க வேண்டும். இவற்றுக்கான தொகைகளை ரூபாயாக ஒதுக்கீடு செய்வதற்குப் பதில் சதவிகித கணக்கில் ஒதுக்கீடு செய்வதன் மூலம் கடன் வாங்குவதைத் தவிர்ப்பதோடு குடும்பத்தின் முக்கிய நிதி இலக்குகளான பிள்ளைகளின் உயர்கல்வி, திருமணம் ஆகியவற்றைச் சரியாக மேற்கொள்ள முடியும்.

குடும்ப பட்ஜெட் என்கிற போது 50:30:20 - அவசியத் தேவை: ஆசை: எதிர்கால தேவை என்கிற ஃபார்முலா உலகம் முழுக்க பயன்படுத்தப்படுகிறது. இதில் **50%** என்பது உடை, உணவு, உறைவிடம், மருத்துவம், கல்வி, போக்குவரத்து சார்ந்த செலவுகளாக உள்ளன. அதாவது, ஆடைகள், மளிகைப்பொருட்கள், வீட்டு வாடகை ஆகியவற்றுக்கு சம்பளத்தில் **50%** தொகையை முதலில் தனியே ஒதுக்கி வைக்க வேண்டும்.

வெளியில் சென்று ஹோட்டலில் சாப்பிடுவது, வார விடுமுறை நாட்களில் சிறிய சுற்றுலா செல்வது, திரையரங்கு சென்று சினிமா பார்ப்பது ஆகியவற்றுக்கு சம்பளத்தில் **30%** தொகையை ஒதுக்கலாம். மீதி உள்ள **20%** தொகையை எதிர்காலத் தேவைகளுக்கு முதலீடு செய்ய பயன்படுத்த வேண்டும்.

# இது புகையல்ல...



வானத்தில் விமானங்கள் பறந்து செல்லும் போது அதற்குப் பின்னால் வெள்ளைக் கோடுகள் தோன்றும், அதனை பலரும் விமானத்திலிருந்து வரும் புகை என்று நினைத்திருப்போம். ஆனால் அது உண்மையில் புகையல்ல.

பொதுவாக ஜெட் விமானங்கள் வானில் கடந்து செல்லும் போது வெள்ளை நிறத்தில் கோடுகள் தென்படுவதை புகை என்று நினைத்துக் கொண்டிருக்கிறோம்.

ஆனால் விமானத்தில் இருந்து புகை வெளியாவது இல்லை. ஜெட் போன்ற அதிவேக என்ஜின் கொண்ட விமானங்களில் இருந்து நீராவி வெளியேற்றப்படுகிறது.

இந்த நீராவி வானின் குளிர்ந்த காற்றுடன் கலந்து பனித்துளியாக மாறி நமக்கு வெள்ளைக் கோடுகளாக காட்சியளிக்கின்றன. பூமியில் இருந்து பல்லாயிரம் அடி உயரத்தில் குளிர்ந்த சூழல் நிலவும். அதிவேகமாக செல்லும் ஜெட் விமானங்கள் சூடான நீராவியை வெளியேற்றும் போது இந்த குளிர்ந்த காற்றால் உறைந்து போய் இவ்வாறு காட்சியளிக்கின்றன.

இதனைக் கீழிலிருந்து பார்க்க விமானத்தில் இருந்து வெளியாகும் புகை போல் தெரிகிறது. அதே சமயத்தில் குளிர்ச்சியான சூழல் இல்லாதபோது இதுபோன்ற வெள்ளை கோடுகள் ஏற்படாது என்பது குறிப்பிடத்தக்கது.

## சமைப்போம் சுவைப்போம்

### புரோட்டீன் தோசை



**தேவையானவை :**

1. முட்டை – ஒன்று
2. முருங்கைக்கீரை – ஒரு கைப்பிடி அளவு
3. பொட்டுக்கடலை – 150 கிராம்
4. வெங்காயம் – ஒன்று (பெரியது)
5. பச்சை மிளகாய் – காரத்துக்கேற்ப
6. பூண்டு – 4 பல்
7. இஞ்சி – சிறிதளவு
8. கொத்தமல்லித்தழை, கறிவேப்பிலை – சிறிதளவு
9. உப்பு, நல்லெண்ணெய் – தேவைக்கேற்ப

**செய்முறை**

பொட்டுக்கடலையுடன் உப்பு, முட்டை, பச்சை மிளகாய், இஞ்சி, பூண்டுப் பல் சேர்த்து நீர் விட்டு அரைக்கவும். தோசை செய்யும் பதத்துக்கு மாவைக் கரைத்துக்கொண்டு அத்துடன் சிறிதளவு எண்ணெயில் வதக்கிய முருங்கைக்கீரை, வெங்காயம், கறிவேப்பிலை, கொத்தமல்லித்தழையைச் சேர்த்து, உடனே தோசை வார்க்கலாம்.

பற்கள், எலும்புகளின் ஆரோக்கியத்துக்கு அவசியமான [illegible] உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம்: பாசமலர்
இயற்றியவர்: கவிஞர் கண்ணதாசன்
இசை: விஸ்வநாதன் ராமமூர்த்தி
பாடியவர்: பி. சுஷீலா மற்றும் ஸ்ரீநிவாஸ்



பெண் : ஆஹா ஆஅ ஹாஹா ஹாஹா ஆஹா ஆஆ
ஹாஹா ஹாஹா ஆஹா ஆஆ ஹாஹா ஆஆ

ஆண் : ஹாஹா ஹாஹா ஹஹஹஹ்ஹஹா ஆஆ
ஹோ ஹோ ஹோ ஹோ ஹோ ஹோ ஹோ ஓ..ஓ

ஆண் : யார் யார் யார் அவள் யாரோ
பெண் : ஊர் பேர் தான் தெரியாதோ..ஓ..
ஆண் : யார் யார் யார் அவள் யாரோ
பெண் : ஊர் பேர் தான் தெரியாதோ..ஓ..

ஆண் : சலவைக்கல்லே சிலையாக தங்க பாளம் கையாக
மலர்களிரண்டும் விழியாக
பெண் : மயங்கவைத்தாளோ

ஆண் : யார் யார் யார் அவள் யாரோ...

ஆண் : முத்து மணித்திரள் ரத்தினமோ மொய்குழல் மேக சித்திரமோ
முத்து மணித்திரள் ரத்தினமோ மொய்குழல் மேக சித்திரமோ

பெண் : செக்கச்சிவந்த இதழாலே சிந்தும் புன்னகை மந்திரமோ
செக்கச்சிவந்த இதழாலே சிந்தும் புன்னகை மந்திரமோ

ஆண் : யார் யார் யார் அவள் யாரோ....

ஆண் : கண்கள் மயங்கும் கண்ணானாள்
பெண்கள் மயங்கும் பெண்ணானாள்
கண்கள் மயங்கும் கண்ணானாள்
பெண்கள் மயங்கும் பெண்ணானாள்

பெண் : நினைவில் மயங்கும் பொருளானாள்
நிலவில் மயங்கும் இருளானாள்
நினைவில் மயங்கும் பொருளானாள்
நினைவில் மயங்கும் இருளானாள்

ஆண் : யார் யார் யார் அவள் யாரோ....

ஆண் : அஞ்சனம் கொண்டாள் நகை கொண்டாள்
அச்சம் நாணம் மடம் கொண்டாள்
அஞ்சனம் கொண்டாள் நகை கொண்டாள்
அச்சம் நாணம் மடம் கொண்டாள்

பெண் : மஞ்சள் குங்குமம் மலர் கொண்டாள்
மனதை சேர்த்து ஏன் கொண்டாள்

ஆண் : யார் யார் யார் அவள் யாரோ
பெண் : ஊர் பேர் தான் தெரியாதோ..ஓ..
ஆண் : யார் யார் யார் அவள் யாரோ
பெண் : ஊர் பேர் தான் தெரியாதோ..ஓ..

ஆண் மற்றும் பெண் : ஆஹா ஹா ஹா ஹா..(4)
ஓஹோ ஓஹோஓ...(4)

# நான் பட்டிமன்ற பேச்சாளர் ராஜா பேசுகிறேன்

ஒன்பதாம் வகுப்புத் தொடங்கி எஸ்.எஸ்.எல்.சி வரைக்கும் எங்கள் வகுப்பாசிரியர் ஹென்றி அல்மெய்தா சார். என் வாழ்வில் மிகவும் முக்கியமான மனிதர்களில் ஒருவர். இப்போதும் அவரோடு தொடர்பில் இருக்கிறேன். பள்ளிக்காலத்தில் அவர் அடிக்கடி ஒரு விடயம் சொன்னார். 'Alert Always' (எப்போதும் தயாராக இரு) என்பார்.

1980இற்குப் பிறகு சாலமன் பாப்பையா ஐயாவுடன் நிறையப் பயணம் செய்திருக்கிறேன். பட்டிமன்றங்கள் கேட்க எனக்கு ரொம்பப் பிடிக்கும். ஆனால் பட்டிமன்றத்தில் பேசவேண்டும் என்று நான் நினைத்ததில்லை. எனக்கு அதற்கான தகுதி இருப்பதாகவும் நான் நம்பியதில்லை. 1991 ஜூலை 15ஆம் திகதி மதுரையில் ஒரு பட்டிமன்றம். நான் சாயங்காலமே ஐயா வீட்டுக்குப் போய் வாசலில் உட்கார்ந்துவிட்டேன். பேச்சாளர் ஒருவரால் அன்று வரமுடியவில்லை. மணி இரவு 10 ஆகிவிட்டது. ஐயா வெளியில் வந்தார். என்னைப் பார்த்து, "பட்டிமன்றத்துக்கு வர்றியா" என்றார். "அதுக்குத்தானே உட்கார்ந்திருக்கேன்" என்றேன். "பேச வர்றியா" என்று கேட்டார். பூமி என்னை மட்டும் வைத்துச் சுற்றுவது போலிருந்தது. அவர் எனக்குத் தந்தது. பத்து விநாடிகள். "வர்றேன்" என்று சொன்னவுடன், "போய் நல்ல சட்டை போட்டுட்டு வா" என்றார்.

ஐயா வீட்டிலிருந்து எங்கள் வீடு 1 கி.மீ. சைக்கிளில் வேகவேகமாக வீட்டுக்குப் போனேன். "பட்டிமன்றம் பாக்கப்போறேன் என்று சொன்னாய் வந்திட்டாயா" என்று கேட்டார்கள். "பாக்கப் போகவில்லை, பேசப்போகிறேன்" என்றேன். அரைகுறைத் தூக்கத்தில் இருந்த என் அப்பா எழுந்துவிட்டார். "நீ என்கிட்ட பேசும்போதே உளறுவியேடா. மேடையில போய் என்னத்த பேசப்போறாய், இந்தப் பாப்பையா நல்லாத்தானே இருந்தார், எதற்கு உன்னைக் கூப்பிட்டிருக்கார்" என்று கேட்டது இன்னும் என் நினைவில் இருக்கிறது.

சாலமன் பாப்பையா அவர்களின் மனைவி, சமீபத்தில் மறைந்த ஜெயாபாய் அவர்களை நிறைய பேருக்குத் தெரிந்திருக்காது. அவர்கள் வீட்டில் நானும் ஒரு பிள்ளையாக வளர்ந்தவன். அவரது கையால் பல நாட்கள் சாப்பிட்டிருக்கிறேன். என் திருமண விடயத்தில் எனக்கும் என் அப்பாவுக்கும் பிரச்சினை ஆகிவிட்டது. 'உன் கல்யாணத்துக்கு ஒரு ரூபாய் கூட செலவு செய்யமாட்டேன். நீயே கல்யாணத்தை நடத்திக்கோ" என்று சொல்லிவிட்டார். நமக்கும் அது சின்ன வயது தானே. அதைச் சவாலாக எடுத்துக் கொண்டேன்.

கொஞ்சம் கலக்கமாக ஐயா வீட்டில் உட்கார்ந்திருந்தேன். ஐயாவின் மனைவி வந்து, "கவலைப்படாதே, என்னிடம் கொஞ்சம் நகை இருக்கிறது. அதை அடகு வைத்து கல்யாணம் செய்துகொள் பின்பு திருப்பிக் கொடு" என்று சொன்னார். எனக்குக் கொஞ்சம் தைரியம் வந்தது. உடனே, 'இன்று சாயங்காலம் வாருங்கள். திருமணத்துக்கான புடவை, வேட்டி சட்டை எல்லாம் வாங்கிவிடலாம்" என்று பெண் வீட்டுக்காரர்களை வரச் சொல்லி விட்டேன். அன்று காலையில் ஐயா வீட்டுக்குப் போனேன். ஐயாவின் மனைவிக்கு அவசரமாக ஓர் அறுவை சிகிச்சை, ஆஸ்பத்திரிக்குப் போய்விட்டார் என்றார்கள். பதறிப்போய் விட்டேன். அவர் தருகிற நகையை அடகு வைத்தால் தானே முகூர்த்த ஆடைகள் வாங்க முடியும். என்ன செய்யப்போகிறோம் என்று அழுகையே வந்து விட்டது.



மருத்துவமனைக்கு ஓடினேன். அப்போது தான் ஸ்ட்ரெச்சரில் வைத்து ஓபரேஷன் தியேட்டருக்கு ஐயாவின் மனைவியை அழைத்துச் சென்று கொண்டிருந்தார்கள். அரை மயக்கத்தில் இருந்தார். ஓரமாக நின்று கவலையுடன் அவரைப் பார்த்தேன். என்னைக் கைகாட்டி அழைத்தார். "உனக்குக் கொடுக்க வேண்டிய நகைகளை பொட்டலம் போட்டு தங்கச்சியிடம் கொடுத்திருக்கின்றேன். வாங்கிக்கொள். எல்லாமே நல்லா நடக்கும்" என்றார். அப்போதும் எனக்கு அழுகைதான் வந்தது. அறுவை சிகிச்சைக்குப் போகும்போதும் "வாக்குக் கொடுத்துவிட்டோமே" என்று நகைகளை மகளிடம் தந்துவிட்டு மருத்துவமனைக்குச் செல்கிற மனது யாருக்கு வரும்?

தொலைக்காட்சிப் பட்டிமன்றங்களில் கொஞ்சம் கூடுதலாகக் கேலி, கிண்டல் இருக்கும். நான் வழக்கம்போல பேசிக்கொண்டிருந்தேன். 'பெண்களுக்கு என்ன பெரிய உலக அறிவு இருக்கு. தொலைக்காட்சியில நியூஸ் பார்த்தாக்கூட, வாசிக்கிறவங்க என்ன சேலை கட்டியிருக்கிறார்கள் என்று தான் பார்ப்பார்கள். அதிலயும் எங்க வீட்டு அம்மா நியூஸ் பேப்பரைக் கையில எடுத்தா, மாவு சலிக்கப் போறாள் என்று அர்த்தம்" என்று நான் பேச, எல்லோரும் கைதட்டிச் சிரித்தார்கள். பட்டிமன்றம் முடிந்து, சிறப்பாகப் பேசிவிட்டோம் என்ற மனநிறைவோடு மேடையை விட்டு இறங்கினேன்.

பாரதி பாஸ்கர் வந்தார். நீங்க சொன்னது உங்களுக்கே மரியாதையாக இருக்கிறதா. உங்க வீட்டம்மாவைக் கேலி செய்வதாக நினைத்து எல்லோரையும் கிண்டலாகப் பேசுகிறீர்கள். இந்தச் சமுதாயத்தில் எத்தனை பெண்கள் எவ்வளவு உயரங்களில் இருககிறார்கள். அவர்கள் சாதிச்சதெல்லாம் நிறைய இருக்கிறது" என்று சண்டையே பிடித்துவிட்டார். நான் திகைத்துவிட்டேன். ஆனால் அந்தக் கேள்வியில் இருந்த நியாயம் 'சுருக்" என்று தைத்தது. இவ்வளவு காலம் பட்டிமன்றம் என்ற அருமையான ஊடகத்தைக் கேலி, கிண்டலென்று வீண் செய்துவிட்டோமே என்று தோன்றிக்கொண்டே இருந்தது. நகைச்சுவை என்ற பெயரில் மற்றவர்கள் மனதைக் காயப்படுத்துவது சரியல்ல என்பதை உணர்ந்தேன். பாரதி பேசியது மிகப்பெரிய கண் திறப்பாக இருந்தது. மேடைப் பேச்சில் என்னைத் திசைமாற்றிய சம்பவம் இது!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# டோனி எனும் மாய விம்பம்



டோனி என்ற பெயரைக் கேட்டவுடனேயே நமக்குள் ஒரு சித்திரம் உருவாகும். அசாத்தியமான ஒரு ஸ்கோரை மிகக்குறைந்த எண்ணிக்கையிலான ஓவர்களுக்குள் எடுக்க வேண்டியிருக்கும். ஒவ்வொரு பந்திலும் எதைச் செய்ய வேண்டும் என்பதைத் திட்டமிட்டு அதன்படி ஆடி, கடைசியில் ஒரு பெரிய வின்னிங் ஷாட்டோடு போட்டியை முடித்துக் கொடுப்பார். டெத் ஓவர்களை நெருங்குகையில் ஆட்டத்தின் முக்கியமான கட்டத்தில் டோனி உள்ளே வருகிறார் என்றாலே எதிரணி வீரர்கள் பதறுவார்கள்.

அதுதான் டோனியின் அடையாளம். காலம் காலமாக அவரை அப்படித் தான் பார்த்திருக்கிறோம். ஆனால் கடந்த வாரத்தில் அதற்கு அப்படியே நேர்மாறான டோனியைப் பார்க்க முடிந்தது. பெங்களூர் அணிக்கு எதிரான போட்டியில் சேஸிங்கில் சென்னை அணி விக்கெட்டுகளை இழந்து கொண்டே இருக்கிறது. போட்டி கையை மீறிச் சென்றுகொண்டிருக்கிறது. ஆனால், டோனி களத்திற்கு வரவே இல்லை.

ஒரு கட்டத்தில் சென்னை ஜெயிக்கவே வாய்ப்பில்லை எனும் கட்டத்தில் 9ஆவது வீரராக பட்டை வீசிக் கொண்டு வந்தார். டோனி எத்தனையோ சவால்மிக்க போட்டிகளை ஒற்றை ஆளாக வென்று கொடுத்துப் பார்த்திருக்கிறோம். வெல்ல முடியவில்லையெனினும் கடைசி வரை களத்தில் நின்று போராடுவார். ஆனால், முதல்முதலாக அன்றைக்கு பெவிலியனிலிருந்து அணியின் தோல்வியை வேடிக்கை பார்த்த டோனியைக் கண்டோம்.

இந்தச் சம்பவத்துக்குப் பின்னால் நிறையக் கேள்விகள் எழுகின்றன. டோனிக்கு இப்போது 43 வயதாகிறது. தன் உச்சக்கட்ட ஆட்டத்தையெல்லாம் ஆடி முடித்துவிட்டார். 2020இற்குப் பிறகே அவரால் பெரிய இன்னிங்ஸ்களை ஆட முடியவில்லை. வயோதிபம் காரணமாக நிறைய காயமடைந்தார். தன்னால் முன்பு போல நின்று பெரிய இன்னிங்ஸ்களை துல்லியமாக ஆடி, போட்டிகளை வென்று கொடுக்க முடியாது என்பதை அவரும் உணர்ந்தார். அதனாலேயே பட்டிங் ஓடரில் தன் முக்கியத்துவத்தைக் குறைத்துக்கொண்டார்.

அணி வலுவாக இருக்கும்போது, எல்லா வீரர்களும் பார்மில் இருக்கும்போது டோனி அப்படி ஆடுவதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால், இப்போதைய சென்னை அணி அப்படி இல்லை. கொஞ்சம் தடுமாறிக்கொண்டிருக்கிறது. அப்படியிருக்க டோனி மாதிரியான ஒரு வீரர் மேல் வரிசையில் வந்து பொறுப்பை ஏற்று ஆட வேண்டும். ஆனால், டோனியே நினைத்தாலும் அதைச் செய்ய முடியாத நிலையில் அவரின் உடல் தகுதி இருக்கிறது.

"டோனியின் உடற்தகுதியும் முழங்காலும் முன்பு போல இல்லை" அவர் களத்தில் துடிப்பாகத்தான் செயற்படுகிறார். ஆனாலும் அவருக்கு முழங்காலில் நீண்ட நாட்களாகப் பிரச்சினை இருக்கிறது. அவரால் 10 ஓவர்களுக்கு நின்று பட்டிங் ஆடி ஓடி ஓடி ரன்கள் சேர்க்க இயலாது என சென்னை அணியின் பயிற்சியாளர் ஸ்டீபன் ஃப்ளெமிங் வெளிப்படையாகப் பேசியிருக்கிறார்.

டோனி நீண்டகாலமாகக் கப்டனாக இருந்தவர். தன் அணியில் முழுமையான உடல்தகுதி இல்லாமல் வெறுமனே ரசிகர்களின் விசில் சத்தத்துக்காகவும் டிக்கெட் விற்பனைக்காகவும் ஒரு வீரரை ஆட வைக்கச் சொன்னால் டோனியே அதைச் செய்திருக்க மாட்டார்.

தனது ஓய்வு அறிவிப்பைத் தள்ளிப் போட்டுக்கொண்டே இருப்பதன் மூலம் டோனி உருவாக்கி வைத்திருக்கும் கலாசாரமும் அபாயகரமானதாகவே இருக்கிறது. சென்னைச் சேப்பாக்கம் மைதானத்தில் கூடும் கூட்டத்தை புத்திக்கூர்மைமிக்க ரசிகர் கூட்டம் என வெளிநாட்டு வீரர்களே பாராட்டுவார்கள்.

டோனி கடைசியில் வந்து ஆடும் அந்த இரண்டு பந்துகளுக்காக தங்களுடைய சொந்த அணியின் வீரரையே அவுட் ஆகச் சொல்லிக் கூச்சலிடுகின்றனர். அணி தோற்றாலும் தோனி அடிக்கும் இரண்டு சிக்சர்கள் எங்களுக்குப் போதும் என அதிலேயே திருப்திப்பட்டுக் கொண்டு ஆர்ப்பரிக்கிறார்கள்.

நாயகர்களுக்காக உருவாக்கப்படும் மாயப்பிம்பத்தில் சிக்கித் தவிக்கும் ரசிகர்களைப் போல கிரிக்கெட் ரசிகர்களும் மாற்றப்பட்டிருக்கிறார்கள். விளையாட்டால் ஒரு மனிதரின் வாழ்க்கையை மாற்ற முடியும். விளையாட்டால் மக்களை ஒன்றிணைக்க முடியும். அதை வெறுமனே வழிபாட்டு மனநிலையோடு அணுகுவது பேராபத்து.

# தெளிவே என் சிந்தனையுள்... 4

அடர்ந்த காடுகளில் முதலைகள் நிறைந்த குளத்தில் தான் மான்களும் தண்ணீர் குடிக்கின்றன.

அந்தக் குளத்துக்குள் முதலைகள் இருக்கிறது. அதனால் தமக்கு ஆபத்து இருக்கிறது என்று மான்களுக்கு தெரியும்.

ஆயினும் அவை தமது தாகத்தைத் தீர்த்துக் கொண்டாக வேண்டும். அவை அவ் நீர்நிலைகளில் நீர் அருந்தும் போது எச்சரிக்கையுடனேயே நீரை அருந்துகின்றன. பலமுறை முதலையின் தாக்குதலிலிருந்து சாதுரியமாக தவறினாலும் சிலவேளைகளில் அவை முதலைகளுக்கு இரையாகி விடுகின்றன.

**2010 - 2011ஆம் ஆண்டுகளில் எனக்கு நடந்த சம்பவமொன்று :** அது கார்த்திகை மாதம். நான் எனது அலுவலக வேலைகளை முடித்து விட்டு வீடு செல்ல நள்ளிரவு 11.30 ஆகிவிட்டது. சரியான மழை. மழையில் நனைந்தவாறு மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருக்கிறேன். மானிப்பாய் சந்தியை அண்மிக்கும் நேரம் எனது மோட்டார் சைக்கிள் திடீரென நின்றுவிட்டது. அரை மணி நேரப் போராட்டம். மோட்டார் சைக்கிள் இயங்க மறுத்தது. வீதியோரமாகச் சென்ற ஒருவர் இந்த ஒழுங்கையில் கடைசி வீடு மோட்டார் சைக்கிள் திருத்துநருடைய வீடு என்றார்.

நான் எனது மோட்டார் சைக்கிளையும் தள்ளிக் கொண்டு சென்று அந்த வீட்டை உறுதிப்படுத்திக்கொண்டேன். மோட்டார் சைக்கிளை நிறுத்தி விட்டு "வீட்டுக்காரர்...! வீட்டுக்காரர்...!" என அழைத்தேன்.

நேரம் 12ஐத் தாண்டியதும் மழையின் வீரியமும் அவர்கள் விழிக்கவில்லை. சரி கேற்றில் (படலை) தட்டுவோம் என மனம் சொல்ல ஓங்கிய கணப்பொழுது... **"கேற்றில் தொடாதீர்கள்"** என ஒரு குரல் ஓங்கி ஒலித்தது.

ஓடிவந்த வீட்டு உரிமையாளர் இனம் தெரியாத ஆட்கள் நடமாட்டம் அதிகரித்திருக்கிறதால் கேற்றில் மின்சாரம் பாய்ச்சப்பட்டிருக்கிறது. நல்லவேளை நீங்கள் கேற்றில் தொடவில்லை என்று பெரும் மூச்சு விட்டார்.

**அன்பானவர்களே!** விதிப்பயன் என்பதை நீங்கள் நம்புபவரா என்பது எனக்குத் தெரியாது. நான் அதை பலமாக நம்புபவன். அன்று அந்த இறைகுரல் ஒலிக்காது விட்டிருந்தால் இப்போது நான் குர்ஜியாய் உங்களுடன் பேசிக் கொண்டிருக்க மாட்டேன்.



குருஜி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமா CINEMA

## இசையே என் உயிர் பாடகி ஜென்ஸி



"ஜானி" படத்தின் "ஒரு இனிய மனது" பாடல் மட்டுமல்ல... "காதல் ஓவியம்", "தம்தன தம்தன', "இதயம் போகுதே", "ஆயிரம் மலர்களே..", "தெய்வீக ராகம்...", "என் உயிர் நீதானே", "என் வானிலே", "அடி பெண்ணே" போன்ற பல பாடல்களின் வழி தமிழர்களின் பெருவிருப்பக் குரலாய் இருப்பவர்.

எண்ணிக்கையில் குறைவான பாடல்களைப் பாடியிருந்தாலும், இன்று வரை உலகம் முழுவதும் ஜென்ஸியின் குரலுக்கென்று தனி ரசிகர்கள் இருக்கிறார்கள். இசைஞானி இளையராஜா சமீபத்தில் லண்டனில் நிகழ்த்திய சிம்பொனி நிகழ்வில் "புதிய வார்ப்புகள்" படத்தில் ஜென்ஸி பாடிய "இதயம் போகுதே..." பாடலை இசைத்து எல்லோரையும் ஆச்சரியத்தில் திளைக்க வைத்தார்.

இசை ஆசிரியை பணியிலிருந்து ஓய்வுபெற்றாலும் இப்போதும் பாட்டுதான் என்னை உயிர்ப்போடு வைத்திருக்கு. ராஜா சேரைக் கடைசியாக, அவருடைய 1000ஆவது படப் பாராட்டு விழாவில் சந்தித்தது. வாழ்த்துகளோடு அவரிடம் பேச வேண்டும்! - நெகிழ்ச்சியோடு பேச ஆரம்பித்தார் ஜென்ஸி.

"சிம்பொனி நிகழ்வில் "இதயம் போகுதே" பாடலை ராஜா சார் வாசிக்கும் போது ஏற்பட்ட சந்தோஷத்தை வார்த்தைகளால் விபரிக்கவே முடியாது. ஆயுள் முழுக்க அவருக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருககிறேன்!" என்றவர் மலரும் நினைவுகளுக்குள் மூழ்கினார்.

ராஜா சேர் இசையில், நாலஞ்சு பாட்டு பாடிய பிறகுதான், "இதயம் போகுதே" சான்ஸ் வந்தது. அன்றைக்கு ஸ்டூடியோல சுசீலாம்மாவும் இருந்தார். ராஜா சேர் அழகாகச் சொல்லிக் கொடுத்தார். பாடும்போதே மனசு வலிச்சது. பாடி முடிச்சதும் என்னைப் பார்த்த சுசீலாம்மா, "இந்தப் பொண்ணு சூப்பரா பாடுதே!" என்று பாராட்டினார்.

நான் பாடிய பாடல்களில் எனக்கு எப்பவுமே பேவரிட், நானும் ராஜா சாரும் பாடிய "காதல் ஓவியம" பாட்டுதான்.

"40 வருடங்களுக்குப் பிறகும் என்னுடைய பாடல்களை ரசிகர்கள் கொண்டாடுகிறார்கள் இல்லையா. அதுதான் எனக்குக் கிடைத்த பெரிய விருது. ஜானகி அம்மா, சித்ரா, சுஜாதா என்று எல்லோருடனும் நட்போடுதான் இருக்கிறேன்.

எனக்கு "புதிய வார்ப்புகள்" படத்தில் "தம்தன தம்தன தாளம் வரும்..." பாடலைப் பாடும் போது ரொம்ப கஷ்டமா இருந்தது. தம் பிடித்துப் பாடினேன். எனக்கு ஒரேயொரு ஆசைதான் இருக்கு. அடுத்த ஜென்மத்திலும் நான் பாடகியாகப் பிறக்க வேண்டும்.

## TV-பக்கம்







ஒரு காலத்தில் ஷபானா, சைத்ரா, ரேஷ்மா மூவரும் ஜீ தமிழ் சேனலில் அடுத்தடுத்த ஸ்லாட்டுகளில் பிஸியாக இருந்தனர். இவர்களில் ஷபானா, சைத்ரா இருவரும் ஏற்கனவே சன் டி.விக்கு வந்து விட்டனர். தற்போது ரேஷ்மாவும் சன் பக்கம் வந்திருக்கிறார்.

சப்போர்ட் கேரக்டர்களில் நடித்து வந்த ஜனனி அசோக்குமாருக்குப் பெரிய ரீச் தந்தது "இதயம்" தொடர். ஆனால் தொடரின் இரண்டாவது சீசனில் தான் நடிக்கப்போவதில்லை என்று சொல்லி விட்டார். விரைவில் அடுத்த தொடரில் சந்திப்பதாகவும் கூறி விடை பெற்றிருக்கிறார். இரண்டு குழந்தைகளுக்குத் தாயாக நடிக்கச் சொன்னதாகவும் அதில் விருப்பம் இல்லாததாலேயே இந்த முடிவை எடுத்துள்ளார் எனவும் உலாவுகிறது ஒரு தகவல்.

கடந்த ஆண்டு திருமணம் செய்து கொண்ட ஸ்ரீகோபிகா சீரியல்களில் இருந்து ஓய்வுபெறப்போவதாக அறிவித்துள்ளார்.

## "Tourist Family" படம் குறித்து மனம் திறந்த சசிகுமார்



இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியைச் சமாளிக்க முடியாமல் அங்கிருந்து வந்து சென்னையில் குடியேறுகிறது எங்கள் குடும்பம். அந்த ஏரியாவே விரும்பும் ஓர் குடும்பமாக எப்படி மாறுகிறோம் என்பதுதான் கதை. ஈழத்தமிழர்கள் என்றால் அவர்கள் பட்ட கஷ்டத்தையும் வலியையும் பற்றித்தான் பேசுவார்கள். இதில் அவர்களின் கஷ்டத்தை எவ்வளவு தூரம் சந்தோஷமாக மாற்றிக் கொண்டு வாழ்கிறார்கள் என்று சொல்லியிருக்கிறோம். முதலில் ஈழத்தமிழாகவே போயிடலாம் என்று நினைத்தோம். அப்புறம், அதை இன்னும் எளிமையாக எல்லோருக்கும் போய்ச் சேருகிற மாதிரி மாற்றிக்கொண்டோம்.

சமீப காலத்தில், அழகாய் சொன்ன விதத்தில் முழுத் திருப்தியாகக் கேட்டது இந்தக் கதைதான். சமயங்களில் "இந்த இடத்தை மாற்றுங்கள்"என்று சொல்வோம். அப்படி ஒரு இடமே இயக்குநர் அபிஷன் கொடுக்கவே இல்லை. அவர் கதையைச் சொல்லும் போதே, படம் மனதில் அப்படியே ஓடியது. அவரை அப்படியே இமிடேட் பண்ணினால் போதும் என்று முடிவுக்கு வந்து விட்டேன். இந்தப் படத்தில் வித்தியாசமா பண்ணியிருக்கேன்னு யாராவது சொன்னால், "நான் இயக்குநரைப் பார்த்துதான் நடிச்சிருக்கேன்" என்று சொல்வேன். என்னை மாதிரி, எந்த அளவு என்று அவரது வார்த்தைகளையும், உடல் மொழியையும் பார்த்துச் செய்திருககிறேன். அவரோடு சேர்ந்து வேர்க் செய்வது மிகவும் சந்தோஷமா இருக்கிறது.

## அடுத்த படைப்பு தலைவர் பிரபாகரனின் வரலாறு இயக்குநர் கௌதமன் பெருமிதம்



ஈழத்தின் வலிகளை சந்தணக்காடு திரைப்படத்தின் மூலம் உலகறியச் செய்தவர் இயக்குநர் வ.கௌதமன். பழ.நெடுமாறன் எழுதிய "பிரபாகரன் - தமிழர் எழுச்சியின் வடிவம்" புத்தகத்தை அடிப்படையாக வைத்து பிரபாகரனின் வரலாற்றைப் படமாக எடுப்பதாக அறிவித்தீர்களே..? என்ற பத்திரிகையாளர்களின் கேள்விக்குப் பதிலளித்த அவர் உண்மைதான். "சந்தனக்காடு" முடித்துவிட்டு "வன்னிக்காடு"தான் கொண்டு வர விரும்பினேன். தலைவர் பிரபா கரனின் வீரம் செறிந்த போராட்ட வரலாற்றைத் திரட்டவும், கருப்பொருட்களைத் திரட்டவும் ஐ.நாவுக்கு மூன்று முறை சென்றிருக்கிறேன்.

கென்யா, சுவிஸ், கனடா, பிரிட்டன், பிரான்ஸ், ஜேர்மனி எனப் பல இடங்களுக்குச் சென்றிருக்கிறேன். 15 ஆண்டுகளாக சம்பவங்களைத் தேடித்தேடிக் கோத்துக்கொண்டிருக்கிறேன். இந்த உலகம் ஒரு அறமான இனத்தை அழித்ததை வேடிக்கை பார்த்த நாடுகளும் வெட்கித் தலைகுனிந்து கண்ணீர் சிந்தும் படைப்பாகவும், தமிழனின் மாண்பை உச்சமாகக் கொண்டு வரும் படைப்பாகவும் அது நிச்சயம் அமையும். இனிவரும் என் ஆயுள் முழுக்க அதற்காகத்தான்! எனக்கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

## சுகமான விடியல் 444

வலம்புரியின் மருத்துவச்சுடர்

# தனது பிள்ளைகளை நேசிக்கின்ற ஒவ்வொரு அப்பாக்களுக்கும்...

பொதுவாக அப்பாக்கள் அதிசயமானவர்கள். அபூர்வமானவர்கள். ஆர்ப்பாட்டமில்லாதவர்கள். மௌனமே அவர்கள் மொழி. மனதால் பேசுபவர்கள். வரலாறுகளுக்கூடாக வழிகாட்டுபவர்கள். பொறுப்புகளைச் சுமப்பவர்கள். அதனைக் குடும்பத்தாரோடு பகிர்வதில்லை.உணர்வுகள் இருந்தும் அதனை வெளிப்படுத்தாத உத்தமர்கள். மொத்தத்தில் சொல்வதானால் அவர்கள் ஞானிகள்.

எமது வீட்டின் பிரதான மண்டபத்தில் தொங்கும் அப்பாவின் நிழற்படத்தைப் பார்க்கும் போது எனக்குள் தோன்றும் நினைவலைகள் அவை. எனது வளர்ச்சிக்கும் நான் கொண்ட வலுவுக்கும் காரணமானவர் அவர் என்பதுதான் எனது முடிவு. என் பெயர் சிவன்சுதன். கடந்த 20 வருடங்களுக்கு மேலாக. யாழ் போதனா வைத்தியசாலையில் பொது வைத்திய நிபுணராகக் கடமையாற்றிக் கொண்டிருக்கிறேன். எனக்கு ஆசிரியராய். ஆலோசகராய். எனது கல்லூரியின் அதிபராய். அன்புக்குரிய தோழனாய் இருந்த என்னுடைய அப்பா. என்னிடம் கேட்ட ஒரு கேள்வி என்னால் மறக்க முடியாத ஒரு துயரகரமான சம்பவமாக அமைந்துவிட்டது.

என் அப்பா. உரும்பிராய் இந்துக் கல்லூரியிலே கல்வி பயின்று. அங்கேயே இரசாயனவியல் ஆசிரியராக. அதிபராக. பின் அந்தக் கோட்டத்தின் கொத்தணி அதிபராக இருந்து ஓய்வு பெற்றவர். என்னையும் அங்கேயே படிக்க வைத்து மருத்துவப் பீடத்துக்கு அனுப்பியவர். நான் உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாசாலையிலே ஆரம்பக் கல்வியைப் பயின்று கொண்டிருந்த காலத்தில் அப்பாவுடன் கோயிலுக்கு செல்வது வழக்கம். அக் கோயிலுக்கு வரும் எனது ஆசிரியர்கள். நான் படிப்பிலே முற்றாகக் கவனம் செலுத்துவதில்லை. நான் வகுப்பில் அதிகம் குழப்படி போன்ற விடயங்களை அப்பாவிடம் சொல்லுவார்கள். "ஆ! ஓ!! பார்க்கிறன்" என்று பதிலளிப்பாரே தவிர அது பற்றி என்னிடம் கேட்டதில்லை.

அப்பாவை எண்ணும் போது விசித்திரமாக இருக்கும். மௌனம். பேச்சிலும் பலமானது என்று அவர் எண்ணி இருக்கக் கூடும். அல்லது பிள்ளைகள் என்றால் சிறு வயதில் அப்பிடித்தான் இருப்பார்கள் என்று நினைத்திருக்கக் கூடும். இல்லாவிடில் அப்பா என்ற கோணத்தில் அல்லாது ஒரு நல்ல ஆசிரியர் என்ற கோணத்தில் இருந்து அதனைப் பார்த்திருக்கக் கூடும். எனது எண்ணங்கள் ஊகங்களாகிக் கொண்டன. எனது அப்பா ஒரு விசித்திரமானவர் என்றதற்கு இன்னும் ஒரு உதாரணம் இது. அந்த நாட்களில். ஐந்தாம் ஆண்டுப் புலமைப்பரிசில் பரீட்சை இரண்டு கட்டங்களாக நடைபெறும். முதலாவது கட்டப் பரீட்சையில் சித்தி பெற்றால் மட்டுமே இரண்டாம் கட்ட பரீட்சை எழுத முடியும். நான் முதலாம் கட்டப் பரீட்சையில் சித்தி எய்தவில்லை என்றதனால் இரண்டாம் கட்டப் பரீட்சை எழுதச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. அதையிட்டு நான் கவலைப்பட்டேன். ஆனால். அப்பா அந்தப் பரீட்சையில் தான் அக்கறை கொள்ளாதவர் போலக் காட்டிக் கொண்டார்.

மாறாக என்னை யாழ் இந்துக் கல்லூரியின் ஆறாம் வகுப்பிற்கான அனுமதி பரீட்சையை எடுக்கச் செய்தார். அதில் நான் சித்தி பெற்றேன். இருந்தும் அவர் என்னை யாழ் இந்துக் கல்லூரிக்கு அனுமதிக்கவில்லை. தான் உப அதிபராக இருந்த உரும்பிராய் இந்துக் கல்லூரியிலே என்னை சேர்த்துக் கொண்டார். என்னை யாழ் இந்துக் கல்லூரியின் அனுமதிப் பரீட்சையை எழுத வைத்ததன் நோக்கம் என்ன என்பதைப் பின்னாளில் நான் புரிந்து கொண்டேன். என்னை வலுப்படுத்துவதற்கும். எனக்கு நம்பிக்கையூட்டுவதற்காகவும் அதைச் செய்திருக்கக் கூடும் ..? எமது வீட்டின் முன்புறம் இன்றும் நினைவில் உண்டு. ஓய்வு நேரங்களில் அது தான் அப்பாவின் இருப்பிடம். பிரம்பால் பின்னப்பட்ட பிரத்தியேகக் கதிரை ஒன்று அங்கு இருந்தது. ஒரு அரசனின் சிம்மாசனத்தைப் போல அதில் அவர் அமர்ந்திருப்பார். அதற்கு முன்னால் ஒரு சீடனைப் போல நான் நிலத்தில் அமர்ந்திருப்பேன்.

மகாபாரத. இராமாயணக் கதைகளைத் தொடராக எனக்குக் கூறுவார். சொந்தக் கற்பனையிலும் உருவான பல கதைகளைச் சேர்த்துக் கொள்ளுவார். அதிலே அவரது கற்பனாசக்தி வெளிப்படும். அவரிடம் பஞ்ச தந்திரக் கதைகளைக் கேட்பதில் எனக்கு அதிக விருப்பம். அர்த்தமுள்ள ஆசைகளை அவர் வரவேற்பதுண்டு. சிறு வயதிலே வீட்டுத் தோட்டம் செய்ய நான் ஆசைப்பட்டேன். சிறு தோட்டம் ஒன்றை அமைத்து. எனது பராமரிப்பிலேயே விட்டார். பிராணிகள் வளர்ப்பதிலே எனக்கு இருந்த ஆர்வத்தை அவதானித்து. என்னை முயல். கிளி. வாத்து. மைனா. கோழி. மீன் எனப் பலவற்றை வளர்ப்பதற்கு அனுமதித்து. அதற்கு ஊக்கமும் உதவியும் தந்தார். அப்பாவின் தோட்டம் என்னுடையதிலும் பார்க்க மிகவும் பெரியது. அதிலே முந்திரிகை. வாழை. சிறு பயிர்கள். ஆடு. மாடுகள் எனப் பல இருக்கும்.

எனது அப்பாவின் உயரிய சிந்தனைக்கு அவரது அனுபவமே காரணம் எனலாம். அப்பாவின் தந்தை மலையகத்திலுள்ள தலவாக்கலை என்ற இடத்திலுள்ள பசு மலை என்ற தேயிலைத் தோட்டம் ஒன்றிலே கணக்காளராக வேலை செய்தார் எனவும். அந்தக் காலப்பகுதியிலே கல்வி கற்பதற்காகத் தான் தனது பெற்றோரைப் பிரிந்து யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டதையும் சொல்வார். தான் இள வயதிலே பெற்றோரைப் பிரிந்திருந்த துயரம் பற்றி அடிக்கடி என்னிடம் கூறுவார்.

அதனால். எப்பொழுதும் தன்னுடைய நான்கு பிள்ளைகளும் தன்னுடனேயே இருக்க வேண்டும் என்பதில் மிகுந்த அக்கறையாக இருந்தவர். தனது இளம்பிராயத்துப் புகைப்படங்கள் பலவற்றை அப்பப்போ காண்பிப்பார். ஒவ்வொரு புகைப்படத்திற்குப் பின்னாலும் பல கதைகள் ஒளிந்திருக்கும். அந்தக் காலத்திலே எவ்வாறு இவ்வளவு புகைப்படங்களையும் எடுத்துக் கொண்டீர்கள் என நான் கேட்டு ஆச்சரியப்பட்டதுண்டு. தனது தந்தை ஒரு சிறந்த கணக்காளர் மட்டுமல்ல. ஒரு சிறந்த புகைப்படக் கலைஞரும் கூட என்று கூறிப் பெருமைப்பட்டுக் கொள்வார்.

அப்பா எனக்கு இரசாயனவியல் கற்பித்தார். அவரின் கற்பித்தல் முறை வேறுபட்டதாக இருக்கும். எப்படி ஒரு விடயத்தை அணுகுவது. எப்படிக் கற்பது என்பது சம்பந்தமாகவே இருக்கும். எப்படி கற்றுக்கொள்ள கொள்ள வேண்டும் என்பதை முதலில் கற்றுக்கொள். அது உனக்கு என்றும் உதவியாக இருக்கும் என்று சொல்லுவார். அவருடைய அறிவுறுத்தல்கள் இன்றும் எனக்கு உதவியாக இருக்கின்றன. முதலில் ஒரு நல்ல மனிதனாக இருக்கக் கற்றுக்கொள். அது தான் உலகில் மிக உயர்ந்த கல்வி என்று சொல்லுவார். ஒருவன் தானாகப் படிப்பதே சிறந்ததென்பது அவர் கருத்து. மேலதிக வகுப்புகளுக்கு செல்வதில் அவருக்கு உடன்பாடு இல்லை. மாணவர்களின் மிகப்பெரிய சொத்தான பரந்துபட்டு சொந்தமாக சிந்திக்கும் ஆற்றல் சிதைவடைந்து போகும் என்ற சிந்தனை அவருக்கு இருந்தது. அதனால் என்னை மேலதிக வகுப்புகளுக்கு அனுப்பவில்லை.எனது அப்பா. வாழ்விலே பல சவால்களை எதிர்கொண்டவர். சிக்கனமான வாழ்வை மேற்கொண்டவர். பழைமையான பொருட்களை சேமிப்பதில் ஆர்வம் கொண்டவர்.

பழைமையான பொருட்கள் என்றதும் எனக்கு 1987 ஆம் ஆண்டில் நடைபெற்ற அந்தச் சம்பவம் ஞாபகத்துக்கு வரும். அவர் சிறுகச் சிறுக சேர்த்து வைத்த அத்தனை பொருட்களுடனும் எங்கள் வீடு எரியூட்டப்பட்ட போது. நானும் எனது மூன்று சகோதரர்களும். அம்மாவும் பெரிதும் துயருற்றோம். அழுதோம். அப்பாவின் சிம்மாசனமும் எரியூட்டப்பட்டிருந்து.

ஆனால் அப்பா அழவில்லை. துயருற்றவர் போலக் காட்டிக் கொள்ளவுமில்லை. அந்தக் காலப்பகுதியில் உரும்பிராயில் நடந்த பெரும் போரிலே எமது நெருங்கிய உறவினர்கள் உட்பட பலர் கொல்லப்பட்ட சம்பவங்களுடன் ஒப்பிட்டுப் பார்த்து தனக்கு நேர்ந்த இழப்பை ஒரு பெரிய விடயமல்ல என அவர் கருதியிருக்கக்கூடும். அப்பா. அநாவசியமாக எதையும் பேசமாட்டார். ஆனால், அவர் பேசுகின்ற வார்த்தை அப்படியே பசுமரத்தாணி போல எல்லார் நெஞ்சங்களிலும் பதிந்து விடும்.

அப்பா அரசியல் என்ற விடயத்தில் மிகவும் தெளிவாக இருந்தார். அந்தக் காலத்தில் தமிழர் பரப்பை உலுக்கிய சம்பவம் அது. அப்பாவின் உடன் பிறவாச் சகோதரியின் மகனான பொன். சிவகுமாரனின் மரணம். அவர் உடல் உரும்பிராயில் வைக்கப்பட்டிருந்தது. அவரது ஈமைக்கிரிகைகளுக்கான பொருட்கள் வாங்குவதற்காக அப்பா யாழ்ப்பாணம் செல்ல முற்பட்டபோது. அவருடன் நானும் கூடவே சென்றிருந்தேன். அப்பொழுது எனக்கு ஒன்பது வயது. அப்பா யாழ்ப்பாணம் பெரிய கடையில் காரை நிறுத்த முற்பட்டபோது அங்குள்ள கடைக்காரர்கள் பலர் காரைச் சூழ்ந்து கொண்டார்கள். காரை விட்டு இறங்க வேண்டாம். நாங்கள் அதற்குரிய பொருட்களைக் கொண்டு வந்து தருகிறோம் என்றனர்.

சந்தனக்கட்டைகள் காரினுள் குவிக்கப்பட்டன. வாசனைப் பொருட்கள் உட்பட இன்னும் பல பொருட்களை தாமாகவே வந்து ஏற்றி விட்டனர். ஏன் இவ்வளவு பொருட்களையும் எந்தவித பணமும் வாங்காமல் அவர்களாகவே வந்து தருகிறார்கள் என நான் அப்பாவிடம் கேட்டேன். திரவியண்ணன் தங்களுக்காக தான் இறந்ததாக அவர்கள் நினைக்கிறார்கள் என அப்பா கூறினார். பொன். சிவகுமாரன் அவர்களை திரவியண்ணன் என்று தான் அழைப்பார்கள்.

அவர் அன்று கூறியது. எனக்கு புரிந்தும் புரியாமலும் இருந்தது. நான் மருத்துவக் கல்வியை முடித்துக் கொண்டது அவருக்கு மகிழ்சியைக் கொடுத்த விடயம். மருத்துவ பீடத்திலிருந்துவெளியேறிய போது! நான் யாழ்ப்பாணத்திலேயே பணி புரிய வேண்டும் என்று மிகவும் ஆசைப்பட்டார். அதனால் இங்கேயே எனது பணியை ஆரம்பித்தேன். ஆனால், தொடர்ந்து வந்த காலப்பகுதிகளில் நான் உயர் கல்வி கற்பதற்காக தென்பகுதி செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டபோது அவர் கவலைப்பட்டார். இந்த இக்கட்டான சூழ்நிலையில். மருத்துவர்களுக்கும் மருந்துகளுக்கும் தட்டுப்பாடு நிலவிய அந்த யுத்த சூழ்நிலையில். இப்போது இது தேவைதானா? என அவர் நினைத்திருக்கக்கூடும். ஆனால். நான் போவதை அவர் தடுக்கவில்லை.

துயரத்துடன் என்னை வழியனுப்பி வைத்தார். நான் புறப்பட்டுச் சில மாதங்களிலே. யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த அந்த மாபெரும் இடப்பெயர்விலே அவரும் இந்த பிரதேசத்தை விட்டு வெளியேற வேண்டிய நிலை ஏற்பட்டது. அவருடைய குடும்பம். உறவுகள் என்ற அந்தக் குருவிக் கூடு சிதைக்கப்பட்டது. ஊர் வெறிச்சோடிப் போனது. அந்த இக்கட்டான சூழ்நிலையிலும் எனக்கு. தொடர்ந்து கடிதம் எழுதுவதை நிறுத்தவில்லை. யுத்த சூழ்நிலை அவரை வெகுவாகப் பாதித்திருக்கக்கூடும். மெல்ல மெல்ல அவரது உடல் அசௌகரியப்படத் தொடங்கியது. அதில் Dementia எனும் நோயின் அறிகுறிகள் தென்பட ஆரம்பித்தன. அந்த நோய் ஏற்பட்டால் ஒருவரின் நினைவுகளும் மூளையின் பதிவுகளும் படிப்படியாக அழிந்து கொண்டு போகும். அதனைத் தடுத்து நிறுத்தும் மருந்துகள் எதுவும் இன்னும் கண்டறியப்படவில்லை. அதனால் நான் மிகவும் வேதனைப்பட்டேன். நான் யாழ்ப்பாணத்திலேயே பணிபுரிய வேண்டும் என்ற அவரின் விருப்பத்தை நிறைவேற்ற முடியவில்லையே என்ற குற்ற உணர்வு எனக்குள் தொற்றிக் கொண்டது.

அவரின் நினைவுகள் அழிந்து போவதற்கு முன்னர். எனது உயர்கல்வியை முடித்துக்கொண்டு யாழ்ப்பாணம் திரும்பி விட வேண்டும் என்ற எண்ணம் என்னைப் பற்றிக்கொண்டது. நான். எனது உயர்கல்வியின் இறுதிக்கட்டத்தை முடிப்பதற்கு. வெளிநாடு செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. அதனை அப்பாவிடம் கூறினேன். போய் வா என்று வழியனுப்பினார். இருந்தாலும். நான் திரும்பி வருவதற்குள் எல்லாவற்றையும் மறந்து விடுவாரோ என்ற ஏக்கம் என்னுள் எரிந்து கொண்டிருந்தது.

"நீ திரும்பி வரும் வரையில். எனது ஊரான உரும்பிராயில் நாம் மீண்டும் இருப்பதற்கு ஒழுங்கு செய்து விடுவாயா? என்று மட்டும் கேட்டார். அதன்படியே. நான் வெளிநாட்டிற்கு பயணமாக. அப்பாவும் அம்மாவும் உரும்பிராய்க்கு மீண்டும் சென்றார்கள். அந்த ஊர் அழிந்து போய் இருந்தாலும். அது அவருக்கு ஒரு சுவர்க்கமாகவே இருந்தது. அப்பாவின் நினைவுகள் அழிவதற்கு முன். யாழ்ப்பாணம் மீண்டும் வந்துவிடுவேன் என்று நம்பிக்கையுடன் சென்ற நான். மீண்டும் 2003 இல் வீடு திரும்பினேன். எமது உரும்பிராய் வீடு சேதமாக்கப்பட்டிருந்தது.அந்த வீட்டிலே அப்பாவை சந்தித்த அந்தப் பதற்றமான நாளை என்னால் இன்றும் மறக்க முடியவில்லை. அப்போது என்னைக் கண்டதும் அவர் சந்தோசப்பட்டார். சுகம் விசாரித்தார். பின் அம்மாவிடம் என்னைக் காட்டி. இவர் யார் என்று கேட்டார். இவனை உங்களுக்கு அடையாளம் தெரியவில்லையா என்று கேட்டு அம்மா அழுதார். அப்பாவுக்கு என்னை அடையாளம் தெரியவில்லை என்ற உண்மை எனக்குப் புரிய ஆரம்பித்தது. நான் முற்றாகத் தோற்றுப் போனதை உணர்ந்தேன்.

அவருக்கு எது தெரிகிறது? எது புரிகிறது? என்று விளங்காமலேயே பலமணி நேரங்கள் அவருடன் கதைத்துக் கொண்டிருப்பதை வழக்கமாக்கிக் கொண்டேன். அப்பாவின் அடி மனதிற்கு என்னை அடையாளம் தெரியும் என்றும். நான் திரும்பி வந்து விட்டதை அவர் அறிவார் என்றும் நினைத்து என்னுள் திருப்திப்பட்டுக் கொண்டேன். தோல்வியிலும் திருப்தியைக் கண்டுகொள் என் அவர் கூறியதைத்தான் இன்றும் கடைப்பிடித்துக் கொள்கிறேன்.

அப்பாவைப் பற்றி எண்ணித் திருப்திப்படுவதெல்லாம் அவர் ஆயிரக்கணக்கான நல்ல மனிதர்களையும் அறிஞர்களையும் உருவாக்கி இருக்கிறார். பல்கலைக்கழக மாணவர்களுக்குப் பல இரசாயனவியல் நூல்களை எழுதி இருக்கிறார். புதிய கற்பித்தல் செயற்பாடுகளை அறிமுகப்படுத்தி அதனைச் செயற்படுத்திக் காட்டியுமிருந்தார். ஒரு எளிமையான வாழ்க்கை முறையை வடிவமைத்துக் கொண்டு அழகாக வாழ்க்கையை அமைத்துக் கொண்டதே அவர் வெற்றி.

அதன் வழி அவரின் விருப்பப்படியே. அவரின் இறுதிச்சடங்கு எமது சொந்த ஊரிலேயே நடைபெற்றது. அமைதியாக. ஊர் உறவுகள் புடைசூழ. மேளதாளங்கள் எதுவு மின்றி அவரின் உடல் நடைபவனியாக எடுத்துச் செல்லப்பட்டது. அவரின் நட்புகளாலும். உறவுகளாலும் காவிச் செல்லப்பட்ட அவரது பூதவுடல் உரும்பிராய் மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இப்போது அப்பா என்னுடன் இல்லை என்றாலும் என்னுடன் வாழ்ந்து கொண்டிருப்பதாகவே எண்ணிக் கொள்கிறேன். தவறாமல் அவரின் படத்திற்குப் பூ வைத்து வணங்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அவருடன் பேசிக் கொள்கிறேன். இன்றும் அவர் என்னை வழிநடத்தும் உணர்வு என்னுள் இருந்து கொண்டு தான் இருக்கிறது. என்னைப் பொறுத்தவரை அப்பாக்கள் என்றும் விசித்திரமானவர்கள்!

**Dr. சி. சிவன்சுதன்**
**பொது வைத்திய நிபுணர்,**
**யாழ். போதனா**
**வைத்தியசாலை,**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏப்ரல் மாத இராசி பலன்கள்



**கிரகநிலை** - பஞ்சம ஸ்தானத்தில் புதன், சனி - ரண ருண ரோக ஸ்தானத்தில் ராகு, சுக்கிரன்(வ), சூரியன் - களத்திர ஸ்தானத்தில் சந்திரன் - அஷ்டம ஸ்தானத்தில் குரு - பாக்கிய ஸ்தானத்தில் செவ்வாய் - அயன சயன போக ஸ்தானத்தில் கேது என வலம் வருகிறார்கள்.

**கிரகமாற்றங்கள்:** 07.04.2025 அன்று செவ்வாய் பகவான் பாக்கிய ஸ்தானத்தில் இருந்து தொழில் ஸ்தானத்திற்கு மாறுகிறார். 10.04.2025 அன்று புதன் பகவான் பஞ்சம ஸ்தானத்தில் இருந்து ரண ருண ரோக ஸ்தானத்திற்கு மாறுகிறார். 14.04.2025 அன்று சூரிய பகவான் ரண ருண ரோக ஸ்தானத்தில் இருந்து களத்திர ஸ்தானத்திற்கு மாறுகிறார். 26.04.2025 அன்று ராகு பகவான் ரண ருண ரோக ஸ்தானத்தில் இருந்து பஞ்சம ஸ்தானத்திற்கு மாறுகிறார். 26.04.2025 அன்று கேது பகவான் அயன சயன போக ஸ்தானத்தில் இருந்து லாப ஸ்தானத்திற்கு மாறுகிறார். 30.04.2025 அன்று புதன் பகவான் ரண ருண ரோக ஸ்தானத்தில் இருந்து களத்திர ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்கள்:** கூர்மையான தராசு என்பதற்கேற்ப புத்தியோசனையுடனும் அதே வேளையில் கவர்ச்சியாகவும் பேசி அனைவரிடமும் காரியங்களை சாதித்துக் கொள்ளும் துலாம் ராசி நேயர்களே. இந்த மாதம் குடும்பத்தில் நல்ல முன்னேற்றம் உண்டு. நீங்கள் பேசும் வார்த்தைகள் மற்றவர்களுக்கு அக்னியைப் போல சுடலாம். ஆனால் வார்த்தைகள் வழி காட்டும் ஒளி நிறைந்திருக்கும். நல்ல செய்கைகளினால் மட்டுமே புகழைத் தக்க வைக்க முடியும். வீடு மனை வாகன வகைகளில் திருப்தியான நடைமுறைகள் இருக்கும். உங்களுக்கு துரோகம் செய்தவர்கள் வெட்கி தலைகுனிந்து திரும்பி போய்விடுவார்கள். கணவன் மனைவி ஒற்றுமை சிறக்கும்.

**உத்தியோகத்தர்கள்** அரசு ஊழியர்கள் பொதுமக்களின் கண்டனத்திற்கு ஆளாகும் நிலைகள் உருவாகும். தனியார்துறை ஊழியர்கள் தெய்வ பலத்தை நம்புங்கள். பொருளாதாரம் சரளமாக கிடைக்கும். இருக்கும் புகழைத் தக்க வைக்க நேரம் சரியாக இருக்கும். வியாபாரிகள் தங்கள் தொழிலில் மிகுந்த ஆர்வமுடன் செயற்பட்டு தகுந்த பொருளாதாரம் பெறுவார்கள். தொழிலில் நல்ல முன்னேற்றம் ஏற்படும். கடந்த காலங்களில் ஆதாயமாய் கிடைத்த பொருளாதாரம் சுபமங்களச் செலவுகளை உருவாக்கித் தரும்.

**பெண்கள்** அரசு மற்றும் தனியார் துறைகளில் பணிபுரியும் பெண்கள் தங்கள் கை சேமிப்பை குடும்பச் சுப செலவுகளுக்காக பயன்படுத்தும் புதிய வாய்ப்புகள் ஏற்படும். தெய்வ காரியங்களில் பங்கெடுக்கும் மார்க்கங்கள் நிரம்பவே உண்டு. **கலைத்துறையினர்** சிறந்த சாதனை படைத்து பாராட்டுகளும் விருதுகளும் பெறுவார்கள். மனம் ஆன்மிக வழியை அதிகம் நாடும். பேசும் வார்த்தைகளில் அனல் வீசும். நற்செயல்கள் செய்வதினால் புகழ் பலம் பெறுவீர்கள்.

அரசியல், பொது வாழ்வில் இருப்பவர்




களுக்கு நல்லநிலை ஏற்படும். மற்றவர்களிடத்தில் மதிப்பு மரியாதை கிடைக்கும். பணத்தை இழக்க நேரிடலாம். நம்பிக்கையானவர்களிடம் மட்டும் பணத்தைக் கொடுப்பது நல்லது. **மாணவர்கள்** மெக்கானிக்கல் பயிற்சிபெறும் மாணவர்கள் நல்ல முறையில் படித்து தேர்ச்சி பெறுவார்கள். நண்பர்கள் எல்லா வகையிலும் உதவி புரிவார்கள். ஆயுள் பலம் பெறும். தந்தை மகன் உறவு சீராக இருக்கும்.

**சித்திரை 3, 4 ஆம் பாதங்கள்:** இந்த மாதம் தொழிலில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். பகைகள் விலகும். அடுத்தவர்களால் இருந்தபிரச்சினைகள் சரியாகும். பணவரத்து எதிர்பார்த்தபடி இருக்கும். ராசிநாதன் சந்திரனின் சஞ்சாரத்தால் எல்லா வசதிகளும் கிடைக்கும். தர்மசிந்தனை அதிகரிக்கும். நண்பர்கள் மூலம் உதவிகள் கிடைக்க பெறுவீர்கள்.

**சுவாதி:** இந்த மாதம் அக்கம் பக்கத்தில் இருப்பவர்களுடன் இருந்த தகராறுகள் நீங்கும். நீங்கள் செய்யும் காரியங்களுக்கு எல்லா தரப்பினரிடம் இருந்தும் ஆதரவு கிடைக்கும். நன்மை தீமைகளை பற்றி கவலைப்படாமல் செயலாற்றுவீர்கள். உத்தியோகம் தொடர்பான பிரச்சினைகள் நீங்கும். திறமை வெளிப்படும். சகஊழியர்களிடம் இருந்த கருத்து வேற்றுமை நீங்கும்.

**விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்:** இந்த மாதம் உத்தியோகத்தில் இருப்பவர்கள் நிர்வாக திறமை வெளிப்படும். மேலதிகாரிகளின் ஆதரவு கிடைக்கும். எழுத்து தொழிலில் இருப்பவர்கள் முன்னேற்றம் அடைவார்கள். குடும்பத்தில் சுப காரிய நிகழ்ச்சிகள் நடக்கும். திருமணம் தொடர்பான பேச்சு வார்த்தை சாதகமான பலன்தரும். கணவன், மனைவிக்கிடையே சந்தோஷம்நிலவும். பிள்ளைகளுக்காக செய்யும் பணிகள் திருப்தி தரும்.

**பரிகாரம்:** வெள்ளிக்கிழமை தோறும் குலதெய்வ பூஜை மற்றும் முன்னோர் வழிபாடு செய்யுங்கள்

**அதிஷ்ட கிழமைகள்:** ஞாயிறு, வியாழன், வெள்ளி

**சந்திராஷ்டம தினங்கள்:** 2, 3, 29, 30

**அதிஷ்ட தினங்கள்:** 23, 24

## காரியங்களை சாதித்துக் கொள்ளும் துலாம் இராசி நேயர்களே!



**கிரகநிலை** - சுக ஸ்தானத்தில் புதன், சனி - பஞ்சம ஸ்தானத்தில் ராகு, சுக்கிரன் (வ), சூரியன் - ரண ருண ரோக ஸ்தானத்தில் சந்திரன் - களத்திர ஸ்தானத்தில் குரு - அஷ்டம ஸ்தானத்தில் செவ்வாய் - இலாப ஸ்தானத்தில் கேது என வலம் வருகிறார்கள்

**கிரக மாற்றங்கள்:** 07.04.2025 அன்று செவ்வாய் பகவான் அஷ்டம ஸ்தானத்தில் இருந்து பாக்கிய ஸ்தானத்திற்கு மாறுகிறார். 10.04.2025 அன்று புதன் பகவான் சுக ஸ்தானத்தில் இருந்து பஞ்சம ஸ்தானத்திற்கு மாறுகிறார் 14.04.2025 அன்று சூரிய பகவான் பஞ்சம ஸ்தானத்தில் இருந்து ரண ருண ரோக ஸ்தானத்திற்கு மாறுகிறார். 26.04.2025 அன்று ராகு பகவான் பஞ்சம ஸ்தானத்தில் இருந்து சுக ஸ்தானத்திற்கு மாறுகிறார். 26.04.2025 அன்று கேது பகவான் இலாப ஸ்தானத்தில் இருந்து தொழில் ஸ்தானத்திற்கு மாறுகிறார். 30.04.2025 அன்று புதன் பகவான் பஞ்சம ஸ்தானத்தில் இருந்து ரண ருண ரோக ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்கள்:** புகழ் ஒன்றையே குறிக்கோளாக கொண்டு செயற்பட்டு பொன்னான வாழ்க்கையை அமைத்து நடுநிலைமையுடன் நடக்கும் எண்ணம் கொண்ட விருச்சிக ராசி நேயர்களே. இந்த மாதம் நீங்கள் செய்கிற எல்லா செயல்களும் ஒன்றுக்கு பத்தாக இலாபத்தை தரும். சாதனைகள் பல நிகழ்த்தி புகழ் பெறும் யோகம் உண்டாகும். வாழ்க்கைத் துணை வகையில் தகுந்த ஒத்துழைப்பும் கிடைக்கும். பொருளாதார நிலை உயர்வு தருவதாக அமையும். வீடு மனை வாகனம் தொடர்பான இனங்களில் அனுகூலமான நிகழ்வுகள் நடக்கும்.

**உத்தியோகத்தர்களுக்கு** அரசு மற்றும் தனியார் துறைகளில் பணிபுரிபவர்களுக்கு மனதிற்கு மகிழ்ச்சி தரும் வகையிலான பணிவாய்ப்புகளைப் பெறுவார்கள். அரசு சுற்றுலாத்துறையில் பணிபுரியும் அதிகாரிகளும் தனியார் சுற்றுலா நிறுவன அதிகாரிகளும் பயணிகளுக்கு தேவையான வசதிகளை செய்துகொடுத்து பொருளாதார நிலை உயரப் பெறுவர்.

**தொழிலதிபர்கள்** சிறந்த முன்னேற்றம் காண்பார்கள். நல்ல வியாபார வாய்ப்புகள் பெற்று முன்னேற்றம் பெறுவார்கள். புதிய சந்தை வாய்ப்புக்களைப் பெற்று பொருளாதார முன்னேற்றம் அடைவர். வியாபாரத்திற்கு புதிய வாகனம் வாங்குவீர்கள்.

**பெண்கள்** சக ஊழியர்களின் மறைமுக நெருக்கடிக்கு உள்ளாவார்கள். உங்கள் வார்த்தைகளுக்கு மதிப்பு குறைவாக இருக்கும். [illegible] பணி செய்வ[illegible] வேலையில் இடர்களை எதிர்கொள்ள முடியும்.

**கலைத்துறையினருக்கு** டெக்னிக்கல் துறையில் சார்ந்தவர்கள் மேன்மை அடைவர். பிற நாடுகளுக்கு சென்று பணியாற்ற வாய்ப்பு இருக்கிறது. புகழ் பாராட்டு கிடைக்கவில்லையே என்று வருத்தப்பட வேண்டாம். காத்திருந்து கடமைகளை சரியாக செய்பவர்களுக்கு வெற்றிக்கனி கிடைக்கும்.

**அரசியலில்** இருப்பவர்களுக்கு நல்ல நிலை கிடைக்கும். மற்றவர்களிடத்தில் மதிப்பு மரியாதை கிடைக்கும். பணத்தை




இழக்க நேரிடலாம். நம்பிக்கையானவர்களிடம் மட்டும் பணத்தைக் கொடுப்பது நல்லது. உயர் பதவிகளை எதிர்பார்த்து காத்திருப்பவர்களுக்கு நல்ல நிலை வந்து சேரும்.

-படிப்பினில் சிறப்பான பலனைக் காணலாம். இந்தக் கல்வி ஆண்டில் நீங்கள் விரும்பிய பாடம் உங்களுக்குக் கிடைக்கும். அதிக உழைப்பும், விடாமுயற்சியும், தன்னம்பிக்கையும் இருந்தால் படிப்பில் சாதனைகள் புரியலாம்.

**விசாகம் 4 ஆம் பாதம்:** இந்த மாதம் [illegible] கௌரவமும் அதிகரிக்கும். [illegible]ரிடம் இருந்தும் ஆதரவு கிடைக்கும். நன்மை தீமைகளை பற்றி கவலைப்படாமல் தலைநிமிர்ந்து நடப்பார்கள். தொழில் வியாபாரம் முன்னேற்றமடையும். போட்டிகள் குறையும். தொழில் தொடர்பான தகராறுகள் நீங்கும். எதிர்பார்த்த இலாபம் கிடைக்கப் பெறுவீர்கள். கடன் பிரச்சினை தீரும்.

**அனுஷம்:** இந்த மாதம் குடும்பத்திற்கு தேவையான பொருட்கள் வாங்குவதன் மூலம் செலவு உண்டாகும். சகோதரர்கள் மூலம் உதவி கிடைக்கும். உறவினர்கள் வருகை இருக்கும் அதே நேரத்தில் அவர்களுடன் வாக்குவாதம் செய்வதை தவிர்ப்பது நல்லது. கணவன், மனைவிக்கிடையே மனம்விட்டு பேசுவதன் மூலம் கருத்து வேற்றுமை வருவதை தவிர்க்கலாம். பிள்ளைகளிடம் அனுசரணையாக நடந்து கொள்வது நன்மை தரும்.

**கேட்டை:** இந்த மாதம் தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்களுக்கு கீழே உள்ளவர்களால் இலாபம் கிடைக்க பெறுவீர்கள். சரக்குகளை பாதுகாப்பாக வைத்துக்கொள்வது நல்லது. உத்தியோகத்தில் இருப்பவர்கள் எந்த ஒரு வேலையையும் செய்து முடிப்பதில் வேகம் காட்டுவார்கள். சக ஊழியர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும்.

**பரிகாரம்:** செவ்வாய்க்கிழமை தோறும் அம்பாள் கோவிலுக்குச் சென்று காலையில் 3 முறை வலம் வரவும்

**அதிஷ்ட கிழமைகள்:** வியாழன், வெள்ளி

**சந்திராஷ்டம தினங்கள்:** 4, 5

**அதிஷ்ட தினங்கள்:** 25, 26

## புகழ் ஒன்றையே குறிக்கோளாக கொண்ட விருச்சிக இராசி நேயர்களே!

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இந்தியப் பிரதமர் மோடிக்கு சுதந்திர சதுக்கத்தில் வரவேற்பு






(கொழும்பு)

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் அழைப்பை ஏற்று அரச விஜயமாக இலங்கைக்கு வருகை தந்திருக்கும் இந்திய பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடிக்கு வரவேற்பளிக்கும் உத்தியோக பூர்வ நிகழ்வு ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் தலைமையில் சுதந்திர சதுக்க வளாகத்தில் நேற்று முற்பகல் நடைபெற்றது.

இதன்போது கௌரவ வேட்டுக்கள் தீர்க்கப்பட்டு இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு வரவேற்பளிக்கப்பட்டதை தொடர்ந்து. இந்தியப் பிரதமர் இராணுவ அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக்கொண்டார். (நி-8)

## யாழ்.பல்கலைக்கழக மாணவர்கள் மாவட்ட செயலகத்திற்கு களவிஜயம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக் கழக புவியியல் துறையினைச் சேர்ந்த இரண்டாம் வருட கலைப்பீட மாணவர்கள் நேற்றுக் காலை மாவட்டச் செயலகத்திற்கு யாழ்.பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் வாழ்நாள் பேராசிரியர் பொன். பாலசுந்தரம் பிள்ளை தலைமையில் களவிஜயம் செய்தார்கள்.

இதன்போது யாழ். மாவட்ட அரசாங்க அதிபரை சந்தித்தார்கள்.

இச் சந்திப்பின் போது வாழ்நாள் போராசிரியர் பொன். பாலசுந்தரம் பிள்ளையினை அரசாங்க அதிபர் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். (நி-8-33)

## மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி ஆலய மஹா கும்பாபிஷேக பெருவிழா

(யாழ்ப்பாணம்)



மாவிட்டபுரம் ஸ்ரீ கந்த சுவாமி ஆலய மஹாவல்லி கஜவல்லி சமேத ஸ்ரீ கந்த சுவாமியாரது மஹா கும்பாபிஷேகப் பெருவிழா எதிர்வரும் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8.07 மணிமுதல் 10.09 மணி வரை உள்ள சுபமுகூர்த்தத்தில் இடம்பெறவுள்ளது.

இதற்கு முன்னதாக நாளை திங்கட்கிழமை முதல் 9 ஆம் திகதி புதன் கிழமை வரை தினமும் அதிகாலை 4 மணி முதல் இரவு 10 மணி வரையும், 10 ஆம் திகதி வியாழக் கிழமை அதிகாலை 4 மணி முதல் பிற்பகல் 2 மணி வரையும் பக்தர்கள் எண்ணெய்க்காப்பு சாற்ற முடியுமென ஆதீன கர்த்தா மஹாராஜ ஸ்ரீ து.ஷ.இரத்தினசபாபதிக்குருக்கள் தெரிவித்துள்ளார். (நி-8)

## இலங்கையின் அதியுயர் விருது இந்தியப் பிரதமருக்கு வழங்கி வைப்பு





(கொழும்பு)

இலங்கைக்கு வருகை தந்துள்ள இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு, மாநில தலைவர்கள் மற்றும் அரசுத் தலைவர்களுக்கான இலங்கையின் மிக உயர்ந்த விருதான இலங்கை மித்ர விபூஷண விருதை ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வழங்கி வைத்துள்ளார்.

இலங்கை மக்களுக்கு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அளித்துள்ள அசைக்க முடியாத ஆதரவைப் பாராட்டி இந்த விருது வழங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி செயலகத்தில் இன்று பல கூட்டு இந்திய-இலங்கைத் திட்டங்களைத் தொடங்கியதைத் தொடர்ந்து இந்த விருது வழங்கி வைக்கப்பட்டுள்ளது. (நி-8)



முல்லைத்தீவு மாவட்டம் வெலிஓயா பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட அத்தாவெட்டுனுவெவ வித்தியாலயத்தில் கண்ணிவெடிகள் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வு நேற்று முன்தினம் நகர அபிவிருத்தி நிர்மாணிப்பு மற்றும் வீடமைப்பு அமைச்சின் மேலதிக செயலாளரும் இலங்கையின் தேசிய கண்ணிவெடிகள் அகற்றும் செயலகத்தின் பணிப்பாளருமான எம்.எம்.நஷ்முதீன் தலைமையில் இடம்பெற்றிருந்தது. (படம்:சதீஸ்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பளுதூக்கல் மத்தியஸ்தர் பரீட்சையில் வடக்கில் 5 பேர் சித்தி

(யாழ்ப்பாணம்)

தேசிய தரத்திலான பளுதூக்கல் மத்தியஸ்தர் பரீட்சையில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உட்பட வடமாகாணத்தில் ஐந்து பேர் சித்தியடைந்துள்ளனர்.

இவர்களுக்கான பரீட்சை அண்மையில் கொழும்பில் நடைபெற்றது.

இதில் யாழ்.பளுதூக்கும் கழகத்தைப் பிரதிநிதித்துவம் செய்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஆர்.விஜய பாஸ்கர், வி.சங்கர், மற்றும் வி.ஆர்ஷிகா உட்பட ஏ.விதன், செல்வி.எஸ்.நிதர்ஷினி ஆகியோரும் சித்தியடைந்துள்ளனர்.

ஏற்கனவே டினேஜா என்பவர் மாத்திரம் சித்தியடைந்த நிலையில் இவ்வாண்டு வடமாகாணத்தைச் சேர்ந்த 5 பேர் சித்தியடைந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-8-90)

# இரத்ததான முகாம்

(யாழ்ப்பாணம்)

சத்திய சாயி சர்வதேச நிறுவனம் நடத்தும் இரத்ததான முகாம் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் நண்பகல் 12 மணி வரை யாழ்ப்பாணம், திருநெல்வேலி இராமநாதன் வீதியிலுள்ள சத்திய சாயி சேவா நிலையத்தில் இடம்பெறவுள்ளது. (நி-8)

# மஹா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தென்மராட்சி குடமியன் வரணி அருள்மிகு தான்தோன்றி கண்ணகை அம்மன் ஆலய மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 10 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9.10 மணி முதல் 10.10 மணிவரையிலான சுபமுகூர்த்த வேளையில் நடைபெறவுள்ளது.

மஹா கும்பாபிஷேகம் பூர்வாங்கக் கிரியைகள் எதிர்வரும் 7 ஆம் திகதி திங்கட்கிழமை அதிகாலை 06 மணி முதல் ஆரம்பமாகித் தொடர்ந்து வரும் நாட்களில் கிரியைகள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 9 ஆம் திகதி மதியம் 12 மணிமுதல் மாலை 6 மணி வரையில் எண்ணெய்க்காப்பு இடம்பெற்று மறுநாள் 10 ஆம் திகதி மஹா கும்பாபிசேகம் இடம்பெறவுள்ளது என ஆலய பூசகரும் தர்மகர்த்தாவுமாகிய பஞ்சாட்சரம் சுதர்சன் ஐயா தெரிவித்துள்ளார். (நி-8)

# கலட்டி வீரகத்திப் பிள்ளையார் வருடப்பிறப்பு உற்சவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வண் வடகிழக்கு கலட்டி வீரகத்திப் பிள்ளையார் தேவஸ்தானத்தில் விசுவாவசு வருடப்பிறப்பு உற்சவம் எதிர்வரும் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பின் இரவு 12.30 மணிக்கு அபிஷேகமும், வருடப்பிறப்பு நேரமாகிய 2.29 மணிக்கு மூலமூர்த்திக்கு விஷேட பூஜை, வசந்த மண்டபப் பூஜை நடைபெற்று விநாயகப் பெருமான் திருவீதி வலம் வருவார்.

அன்றைய தினம் மாலை 3.30 மணி தொடக்கம் மருத்து நீர் வழங்கப்படும் என்பதனையும் பிரதமகுருக்கள் சிவஸ்ரீ து.விவேகானந்தக் குருக்கள் அறியத்தருகிறார். (நி-8)

# தேர்தல்கள் ஆணைக்குழுவின் திட்டமிடல் பணிப்பாளர்-தெரிவத்தாட்சி அலுவலர் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை தேர்தல் ஆணைக்குழுவின் திட்டமிடல் பணிப்பாளர் சந்தன டி சில்வா அவர்கள் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபரும் தெரிவத்தாட்சி அலுவலருமான மருதலிங்கம் பிரதீபனை நேற்றைய தினம் காலை 9 மணிக்கு அரசாங்க அதிபர் அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

இதன்போது தேர்தல் ஆணைக்குழுவின் பிரதி ஆணையாளர் கே.ஜே.எஸ். மகாதேவ மற்றும் உதவித் தேர்தல் ஆணையாளர் இ.சசீலன் ஆகியோரும் உடனிருந்தார்கள். (நி-8-33)

# சந்தைகளில் நேற்றைய விலை



| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 420 | 350 | 450-550 | 500 |
| உருளைக்கிழங்கு | 190 | 180 | 165 | 200 |
| பச்சைமிளகாய் | 500 | 600 | 500-600 | 700 |
| தக்காளி | 280 | 250 | 400-450 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 300 | 220 | 250-300 | 200 |
| கோவா | 300 | 350 | 220 | 300 |
| கரட் | 550-700 | 700 | 540 | 700 |
| பூசணி | 200 | 160 | 200-220 | 200 |
| புடோல் | 300 | 250 | 200-250 | 320 |
| வாழைக்காய் | 100 | 120 | 80-100 | 120 |
| சின்ன வெங்காயம் | 100-300 | 250 | 150-300 | 250 |
| பெரிய வெங்காயம் | 200 | 250 | 145 | 180 |
| பாகற்காய் | 550 | 500 | 500-600 | 600 |
| வெண்டைக்காய் | 350 | 200 | 300-350 | 400 |
| கருணைக் கிழங்கு | 300 | 250 | -- | 300 |
| பயற்றங்காய் | 250 | 250 | 350-400 | 400 |
| லீக்ஸ் | 260 | 300 | 240 | 300 |
| பீற்றூட் | 400 | 250 | 250 | 400 |
| கறிமிளகாய் | 550 | 500 | 500-600 | 600 |
| முருங்கைக்காய் | 2500 | 2000 | 1500-2000 | 2400 |
| போஞ்சி | 550 | 550 | 450 | 700 |
| கத்தரிதம்புள்ள | 400 | 200 | -- | 480 |
| கீரை - 1 பிடி | 80-120 | 150 | 80-100 | 120 |
| தேசிக்காய் | 200 | 150 | 100-150 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 280 | 160-200 | 150-200 | 200-240 |
| இராசவள்ளி | 400 | 550 | 400 | 600 |
| வெங்காயப்பூ | 300 | 200 | -- | 480 |
| முள்ளங்கி | 150 | 150 | 150 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 100 | 100 | 50 | 80 |
| ஈரப்பலா | -- | 100 | 150 | 240 |

# இராசிபலன்

06.04.2025
பங்குனி 23, ஞாயிற்றுக்கிழமை
நவமி பின்னிரவு 12.24 மணிவரை
புனர்பூசம் முற்பகல் 10.32 மணிவரை

சுபநேரம் 9.08-10.38 மணிவரை
இராகுகாலம் -4.38-6.08 மணிவரை
ஸ்ரீராம நவமி

சந்திராஷ்டமம்
கேட்டை, மூலம்

வளவன்




வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், சுபநிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, பெற்றோரின் ஆதரவால் பெருமை கூடும் நாள்.




தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், பொது வாழ்வில் கௌரவம் அந்தஸ்து உயரும், வழிபாடு குதூகலம் தரும், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும்.




வழிபாடு காரிய வெற்றிதரும், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், இனிய செய்திகள் வந்து சேரலாம், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், போசன சுகமுண்டு.




விருப்பங்கள் நிறைவேற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், கொடுக்கல்-வாங்கல்களில் கவனம் தேவை, பயணங்களால் பலனுண்டு, போசன சுகமுண்டு




காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும், சுபகாரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், உடல்நலனில் அக்கறை காட்ட வேண்டிய நாள்.




வருங்கால நலன்கருதி புதிய திட்டம் தீட்டுவீர்கள், செல்வ நிலை உயரும் நாள், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், விரதங்களில் நம்பிக்கை கூடும்.




பிரியமான சிலரின் சந்திப்புகள் இடம்பெறலாம், முத்தான வாய்ப்புக்கள் இல்லம் வந்து சேரலாம், குடும்பத்தினரின் ஒத்துழைப்பு கிடைக்கும், போசன சுகமுண்டு.




தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், சுறுசுறுப்போடு செயற்படுவீர்கள், ஆன்றோர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம்.




மறதியால் சில தொல்லைகளுக்கு ஆட்படலாம், குடும்ப பெரியவர்கள் உங்களின் செயற்பாடுகளில் குறை கண்டு கூறலாம், பொறுமையால் பெருமை காண வேண்டிய நாள்.




நண்பர்களால் வளர்ச்சி கூடும், நினைத்த காரியம் நிறைவேறும் வாய்ப்புண்டு, நட்பு வட்டம் விரிவடையும் நாள், புதிய பொருட் சேர்க்கையுண்டு.




குடும்பத்தில் ஏற்பட்ட கருத்து முரண்பாடுகள் அகலும், செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், போசன சுகமுண்டு.




பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வில் இன்பம் துன்பம் மாறி மாறி வரும்.

# ராஜஸ்தான் இரண்டாவது வெற்றி

## பஞ்சாப்புக்கு முதல் தோல்வி



பஞ்சாப் அணியை 50 ஓட்டங்களால் வீழ்த்திய ராஜஸ்தான் அணி இந்தியன் பிரீமியர் லீக் கிரிக்கெட் தொடரில் 2ஆவது வெற்றியைப் பதிவு செய்தது.

சண்டிகரில் நடைபெற்ற இப் போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற பஞ்சாப் அணி முதலில் பந்துவீச்சை தேர்வு செய்தது.

அதன்படி ராஜஸ்தான் அணிக்கு ஜெய்ஸ்வால் மற்றும் அணித் தலைவர் சஞ்சு சாம்சன் களமிறங்கினர். இருவரும் அதிரடியாக ஆடினர். 10.2 ஓவர்களில் அணியின் ஓட்ட எண்ணிக்கை 89ஆக இருந்த போது சாம்சன் (38) ஆட்டமிழந்தார்.

மறுமுனையில் அதிரடியாக ஆடிய ஜெய்ஸ்வால் அரைச்சதம் அடித்து (67) ஆட்டமிழந்தார். பின்னர், வந்த வீரர்களும் ஓரளவுக்கு ஓட்டங்களைக் குவித்தனர். ரியான் பராக் கடைசி வரை ஆட்டமிழக்காமல் 25 பந்துகளில் 43 ஓட்டங்களைக் குவித்தார்.

20 ஓவர்கள் முடிவில் ராஜஸ்தான் 4 விக்கெட்டுக்களை இழந்து 205 ஓட்டங்களைக் குவித்தது.

206 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்குடன் களம் இறங்கிய பஞ்சாப் அணியில் பிரியன்ஷ் ஆர்யா ஓட்டம் எதுவும் எடுக்காமலும், பிரமாஸிம்ரன்சிங்17, ஸ்ரேயாஸ்ஐயர் 10, மார்கஸ் ஸ்டோனிஷ் ஒரு ஓட்டங்களிலும் ஆட்டமிழந்து ஏமாற்றினர்.

எனினும் பொறுப்பாக ஆடிய நெஹால் வத்ஹிரா 62, மக்ஸ்வெல் 30 ஓட்டங்கள் எடுத்து நம்பிக்கை அளித்தனர்.

இறுதியில் பஞ்சாப் 20 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 155 ஓட்டங்கள் மட்டும் எடுத்து 50 ஓட்டங்களால் வீழ்ந்தது. (ம-7)

## இலங்கை...

இலங்கை விஜயம் மேற்கொண்டுள்ள பாரதப் பிரதமர் நரேந்திர மோடி நேற்று மாலை தமிழ்த் தலைவர்களை சந்தித்துப் பேசினார்.

சுமார் நாற்பது நிமிடங்களாக கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது. இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம், பதில்பொதுச் செயலாளர் எம்.ஏ.சுமந்திரன், பாராளுமன்றக் குழுத் தலைவர் சிவஞானம் சிறீதரன், பாராளுமன்றஉறுப்பினர் இரா.சாணக்கியன் மற்றும் ரெலோ தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன், புளொட் தலைவர் த.சித்தார்த்தன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திர குமார் பொன்னம்பலம் ஆகிய ஏழு பேரும் இந்தச் சந்திப்பில் கலந்து கொண்டனர்.

சுமந்திரன், சித்தார்த்தன், கஜேந்திர குமார் பொன்னம்பலம் ஆகிய மூவரும் தமிழர் தரப்பின் நிலைப்பாடுகளை எடுத்துரைத்தனர். "இலங்கையின் இனப் பிரச்சினை விவகாரத்தில் இந்தியாவே நேரடியாகத் தலையிட்டது. தொடர்ந்து இந்த விடயத்தில் காத்திரமாகப் பங்களித்தது, அந்த முயற்சி முழுமையாக நிறைவு பெறுவதற்கான நடவடிக்கையை இந்தியா தொடர்ந்து எடுக்க வேண்டிய கடப்பாடு உள்ளது. இந்த விவகாரத்தை ஒட்டி இலங்கை - இந்தியா ஒப்பந்தம் கைச்சாத்தான போதிலும், அதிலுள்ள அதிகாரப்பரவலாக்கல் விடயங்கள் முழுமையாக 13 ஆவது திருத்தத்தில் கொண்டு வரப்படவில்லை. 13 ஆவது திருத்தத்தில் கொண்டுவரப்பட்ட அதிகாரப் பரவலாக்கல் விடயங்கள் மேலும் வலுவூட்டப்பட்டு முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதை 2010, 2011, 2012 கூட்டு அறிக்கைகள் மூலம் இலங்கை, இந்தியா ஆகிய இரு நாடுகளுமே ஒப்புக்கொண்டிருக்கின்றன.

அரசியல் தீர்வை மேலும் வலிமையாக்க நடவடிக்கை எடுக்கும் அதே நேரம், சட்டத்திலுள்ள 13 ஆவது திருத்தத்தை முழுமையாக, முறையாக நடை முறைப்படுத்தவும் மாகாண சபைத் தேர்தலை விரைந்து நடத்தவும் இந்தியா தொடர்ந்து இலங்கையை வலியுறுத்த வேண்டும்.

இது தொடர்பில் இன்று (நேற்று) காலை தன்னுடைய கூட்டறிக்கையில் இந்தியப் பிரதமர் வலியுறுத்தியமைக்காக தமிழர்களின் சார்பில் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம் என்று சுமந்திரன் குறிப்பிட்டார்.

இந்தியாவையும் இலங்கையையும் இணைப்பதற்குத் தரை வழிப்பாதை, விமான வழித்தடங்கள், கப்பல் பயணப் போக்குவரத்து ஆகியவை மேம்படுத்தப்படுவதை தமிழ்ப் பிரதிநிதிகள் வரவேற்றனர். இலங்கையும் இந்தியாவும் நெருங்கி வருவது இலங்கையில் தமிழர்களுக்குப் பாதுகாப்பானது என்று அவர்கள் கருத்து வெளியிட்டனர்.

அரசியல் தீர்வைப் பொறுத்த வரை இலங்கை - இந்திய ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட அதிகாரப் பகிர்வு முழுமையாக முன்னெடுக்கப்பட வேண்டும் என்றுகுறிப்பிட்ட சுமந்திரன், அது சமஷ்டி அடிப்படையில் அமைய வேண்டும் என்பது தங்கள் கட்சியின் நிலைப்பாடு என்று குறிப்பிட்டார்.

ஒற்றையாட்சி முறைமையின் கீழ் இணக்கமான தீர்வு சாத்தியமில்லை என்பதைச் சுட்டிக்காட்டிய கஜேந்திரகுமார் பொன்னம்பலம், சமஷ்டி அடிப்படையிலான தீர்வு தான் நிரந்தரமான, நீதியான, நிலையான சமாதானத்தை ஏற்படுத தும் என்பதையும் சுட்டிக்காட்டினார். இந்தியாவின் பாதுகாப்புக்குக் குந்தகமாக இலங்கையில் - தமிழர்பிரதேசத்தில் சீனா காலூன்றுவதற்குத் தமிழர்கள் ஒரு போதும் இடமளிக்கமாட்டார்கள் என்றும் அவர் உறுதிபடத் தெரிவித்தார்.

மீனவர் பிரச்சினை குறித்து விவரித்த சுமந்திரனும், கஜேந்திரகுமாரும் இந்தப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வுகாண்பதற்கான வழிமுறைகளைக் குறிப்பிட்டனர். இந்த மீனவர் பிரச்சினைக்கு அடிப்படைக் காரணமாக இருப்பது பாரம்பரிய முறைகளுக்கு மாறாக கடல் அடி ஆழத்தில் இருக்கும் மீன் வளத்தை அள்ளி எடுக்கும் இரட்டை மடிவலை மீன் பிடி முறைமையை தடுப்பாரின்றி தொடர்வது தான் என்பதைச் சுட்டிக்காட்டிய சுமந்திரன், அதனைத் தடுப்பதற்கு 2017 இந்திய அரசு ஒப்புக்கொண்ட போதிலும் அது இன்னும் நடைமுறைப்படுத்தப்படாமல் இருப்பதுதான் பிரச்சினை நீடிப்பதற்கான காரணம் என்பதைத் தெளிவுபடுத்தினார்.

தமிழகத்தில் தஞ்சம் புகுந்துள்ள ஈழத் தமிழ் அகதிகள் மீள இலங்கைக்குத் திரும்புவதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது உட்பட பல விடயங்களைச் சுமந்திரன் முன்வைத்தார்.

இந்தப் பேச்சுவார்த்தைகளில் இந்தியப்பிரதமரோடு இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர், இந்திய தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அஜித் டோவல், வெளிவிவகாரச் செயலாளர் விக்ரம்மிஸ்றி, இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா மற்றும் அதிகாரிகள் பங்குபற்றினர்.

ஆங்கிலத்தில் உரையாடல் இடம் பெற்றது. இந்தி மொழியில் மொழிபெயர்ப்பு வழங்கப்பட்டது. (ம-7)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதியின் உண்மைச் சொரூபம் மனதில் இருந்து வெளிப்படும்போது அன்பின் உணர்வும் தானே வெளிப்படும்.

– யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## திருக்கோணேஸ்வரப் புனரமைப்பு திருவாய் மலர்ந்த பிரதமர் மோடி

இலங்கையின் ஆதிக் குடிகள் தமிழர்கள் என்பது மறுக்க முடியாத உண்மை. இலங்கையை இராவணேஸ்வரன் ஆட்சி செய்தான் என்பதற்குப் போதிய ஆதாரங்கள் உண்டு. அதில் மிகவும் உன்னதமான சான்று, திருகோணமலை திருக்கோணேஸ்வரர் ஆலயமும் கன்னியா வெந்நீரூற்றும் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இதில் சிவபக்தனாகிய இலங்கை வேந்தன் இராவணேஸ்வரன் அமைத்த திருக்கோணேஸ்வரம் காலத்தால் முந்திய பாடல் பெற்ற திருத்தலம்.

எனினும் திருக்கோணேஸ்வரர் ஆலயத்தைப் புனரமைப்புச் செய்வதில் தொல்லியல் திணைக்களம் செய்கின்ற நிட்டூரம் சொல்லி மாளா.

அங்கு பௌத்த ஆதிக்கத்தை ஏற்படுத்தி விட வேண்டும் என்பதிலும் ஆலயத்தின் வளாகத்தில் சிங்களவர்கள் வியாபார நிலையங்களை நடத்துவதற்கு உதவும் பொருட்டும் தொல்லியல் திணைக்களம் பல்வேறு இடைஞ்சல்களை திருக்கோணேஸ்வரர் ஆலயத்துக்கு ஏற்படுத்தி வருகிறது.

இந்நிலையில் தமிழ் மக்களின் வரலாற்றுப் பொக்கிசமாக இருக்கக்கூடிய இராமாயண காலத்து திருக்கோணேஸ்வரர் ஆலயத்தை இந்திய மத்திய அரசு புனரமைப்புச் செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை அகில இலங்கை இந்துமாமன்றத்தின் சார்பில் அதன் இணைத் தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்களும் ஆலய பரிபாலன சபையும் இந்திய மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதா ராமனிடம் கோரியிருந்தனர்.

அதன் பயனாக திருக்கோணேஸ்வரர் ஆலயப் புனரமைப்புக்கு நிதி வழங்கப்படும் என இலங்கைக்கு வருகை தந்துள்ள பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் அறிவித்திருப்பது மிகுந்த மன ஆறுதலைத் தருகிறது.

அதேவேளை பிரதமர் மோடி அவர்கள் திருக்கோணேஸ்வரர் ஆலயத்துக்குச் சென்று அங்கு வழிபாடுகளை நடத்துவதுடன் ஆலயப் புனரமைப்புக்கான திருப்பணியையும் அவர் ஆரம்பித்து வைப்பதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன.

எனினும் இந்தியப் பிரதமர் மோடி திருகோணமலைக்குச் செல்வது பாதுகாப்பானது அல்ல என இலங்கை அரசாங்கம் அறிவித்ததன் பிரகாரம் பிரதமர் மோடி அவர்கள் திருக்கோணேஸ்வரர் ஆலயத்துக்குச் செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

இருந்தும் திருக்கோணேஸ்வரர் ஆலயப் புனரமைப்புக்கு இந்தியா நிதி வழங்கும் எனப் பிரதமர் மோடி இலங்கையில் வைத்து திருவாய் மலர்ந்தருளியதன் மூலம், எங்கள் தமிழ் மக்களின் வரலாற்றுப் பொக்கிசமாகிய திருக்கோணேஸ்வரம் உரியவாறு பாதுகாக்கப்படும் என்ற அசைக்க முடியாத நம்பிக்கை ஏற்பட்டுள்ளது.

எல்லாவற்றுக்கும் மேலாக, பிரதமர் மோடியின் இலங்கை வருகை தமிழ் மக்களின் அபிலாசைகளையும் நிறைவேற்றும் என்ற பெரு நம்பிக்கையோடு நம் தமிழ் மக்கள் காத்திருக்கின்றனர்.

# இலங்கை - இந்திய பாதுகாப்பு ஒப்பந்தம் நாட்டின் இறையாண்மையை பாதிக்காது

### பாதுகாப்புச் செயலாளர் உறுதி

இலங்கை - இந்தியா இடையிலான பாதுகாப்பு ஒப்பந்தம் நாட்டிற்கு ஆபத்தை ஏற்படுத்தும் என்ற ரீதியில் பல அரசியல் கட்சிகள் தமது எதிர்ப்பை வெளியிட்டுள்ள நிலையில்,

இரு நாடுகளுக்கிடையேயான குறித்த ஒப்பந்தத்தினால் நாட்டின் இறையாண்மைக்கு எதுவித பாதிப்பும் ஏற்படாது எனப்பாதுகாப்புச் செயலாளர் சம்பத் துய்ய கொந்தா தெரிவித்துள்ளார்.

இது குறித்து மேலும் கருத்துரைத்த அவர், பாதுகாப்பு ஒப்பந்தம் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டு முறையான அனுமதி பெறப்பட்டுள்ளது.

அது ஒருபோதும் இலங்கையினதோ இந்தியாவினதோ தேசிய கொள்கைகள்சட்ட அமைப்புகளை பாதிக்காது.

இலங்கை மற்றும் இந்தியா ஆகிய இரு நாடுகளும் பல தசாப்தங்களாக பாதுகாப்பு உறவுகளைப் பேணி வருகின்றன.

மேலும் பாதுகாப்பு தொடர்பான உரையாடல்கள், கூட்டு இராணுவ மற்றும் கடற்படை பயிற்சிகள், பாதுகாப்பு விடயம் தொடர்பான பயிற்சித் திட்டங்கள் மற்றும் செயலமர்வுகள் போன்ற இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த நடவடிக்கைகள் மூலம் நட்புறவு வலுப்படுத்தப்பட்டு வருகிறது.

இலங்கையின் முப்படையினரில் 750 பேருக்கு இந்தியா வருடாந்தம் பயிற்சியளித்து வருகிறது.

இலங்கையின் பிற நாடுகளுடனான இராஜதந்திர உறவுகள் தொடர்பாகக் கடந்த ஜனவரி மாதம் ஜனாதிபதியின் செயலாளரால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின்படி,

இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையே ஏற்கனவே உள்ள புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பில் ஆராயப்பட்டு விவாதங்களும் நடத்தப்பட்டுள்ளது.

எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கமைய தயாரிக்கப்பட்ட இறுதிப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்கு முன்னர், அமைச்சரவையிடமிருந்து தேவையான அனுமதி முறையாகப் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் கூட்டுறவு நடவடிக்கைகள் சர்வதேசளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சிறந்த நடைமுறைகளின்படி மேற்கொள்ளப்படும் என்றார். (ம-7)

# அமெரிக்க வரிக்கொள்கையை சமாளிக்க இந்திய சந்தைவாய்ப்பைத் தந்துதவுங்கள்

### பாரதப்பிரதமரிடம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் கோரிக்கை

(கொழும்பு)

அமெரிக்கா, இலங்கை ஏற்றுமதிக்கு விதித்துள்ள 44% பரஸ்பர வரி காரணமாக நாட்டின் ஏற்றுமதி சார்ந்த தொழில்களுக்கும் பாதகமான விளைவுகளையும் ஏற்படுத்தக்கூடும். ஆகையால் இந்திய சந்தையில் எமது நாட்டின் ஆடைகள் உட்பட பிற உற்பத்திப் பொருட்களுக்கு அதிக சந்தை வாய்ப்புகளைப் பெற்றுத் தருமாறும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இடையிலான சந்திப்பு நேற்று சனிக்கிழமை (05) கொழும்பில் இடம்பெற்றது. இதன்போதே சஜித் பிரேமதாஸ குறித்த கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

அவ்வாறே எமது நாடு வீழ்ச்சியடைந்துள்ள பொருளாதார மந்த நிலையிலிருந்து மீளுவதற்கு மேலும் தேவையான ஒத்துழைப்புகளைப் பெற்றுத் தருமாறு எதிர்க்கட்சித் தலைவர் இதன்போது கோரிக்கை விடுத்தார்.

மேலும் எமது நாடு வங்குரோத்தடைந்திருந்த சந்தர்ப்பத்தில் ஒரு தனி நாடாக எமது நாட்டுக்கு அதிக நிதி ஆதரவுகளை வழங்கி அதிக உதவிகளைச் செய்த நாடு இந்தியாவே என்றும் அத்தருணத்தில் நாட்டுக்கு உதவும் வகையில் இந்திய அரசு அளித்த ஒத்துழைப்பை பெரும் மனம் கொண்டு பாராட்டுகிறேன் என்றும் இதற்காக இந்திய அரசாங்கத்திற்கும் இந்திய மக்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இந்தியப் பிரதமரிடம் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளித்த இந்தியப்பிரதமர் நரேந்திர மோடி சஜித் பிரேமதாஸவின் கோரிக்கைகள் குறித்து சாதகமாக பரிசீலிப்பதாகவும் இந்திய - இலங்கை நட்புறவை வலுவாக்க எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவின் தனிப்பட்ட அர்ப்பணிப்பும் பங்களிப்பும் பாராட்டுக்குரியவை எனவும் தெரிவித்துள்ளார்.

இங்கு சமூகம், அரசியல் மற்றும் பொருளாதார ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள் பலவற்றை பரஸ்பரம் இரு தரப்பினரும் பரிமாறிக் கொண்டனர். (ம-7)

# மீனவர் விவகாரத்திற்கு கலந்துரையாடலே தீர்வு

### தமிழ் எம்.பிக்களிடம் தெரிவித்த மோடி

(கொழும்பு)

இந்திய மீனவர்களின் அத்துமீறல்களால் இலங்கை மீனவர்கள் எதிர்கொள்ளும் இன்னல்கள் தொடர்பில் தமிழ்ப் பிரதிநிதிகளினால் பாரதப்பிரதமருடனான நேற்றைய சந்திப்பின்போது எடுத்துரைக்கப்பட்டது.

இங்கு கருத்துரைத்த தமிழ்ப் பிரதிநிதிகள், இந்திய மீனவர்களின் அத்துமீறல்களால் எமது மீனவர்கள படும் கஸ்டங்கள் அதிகம், அவர்கள் முப்பது வருடங்களுக்கும் மேலாக யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு அனைத்தையும் இழந்து ஒன்றும் இல்லாத நிலையில் உள்ளனர். இது ஒரு மனிதாபிமானப் பிரச்சினை, அவர்களின் நிலைமைகளை கவனத்தில் கொண்டு மீனவர் பிரச்சினைக்கு உரிய தீர்வினைக் காண வேண்டுமென வலியுறுத்தினர்.

இங்கு கருத்துக் கூறிய இந்தியப் பிரதமர், இது அடிப்படையில் இரு அரசாங்கங்களுக்கு இடையிலான பிரச்சினை அல்ல. இரு பகுதி மீனவர்களிடையேயான பிரச்சினை. இப் பிரச்சினை தொடர்பில் நீங்களும், வடபகுதி மீனவர்களும் தமிழக மீனவர்களும் சேர்ந்து பேசி இப்பிரச்சினை தொடர்பில் ஒரு புரிதலுக்கு வாருங்கள். இவ்வாறு ஒரு இணக்கப்பாட்டுக்கு வந்தால் தொடர்ந்து அடுத்த கட்டத்தை நோக்கி செல்ல முடியும் என்றார். (ம-7)

# ஜெனீவா தீர்மானத்தை மறந்து செயற்படும் அரசு

### கடுமையாக சாடுகிறது எதிர்க்கட்சி

(கொழும்பு)

ஜெனீவா தீர்மானத்திற்கு எதிராக தேசிய மக்கள் சக்தி அரசாங்கம் தொடர்ந்தும் செற்படுவதாகப் பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி குற்றம் சாட்டியுள்ளது.

இது குறித்து அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா ஊடகங்களிடம் தெரிவித்துள்ளதாவது,

அநுர அரசாங்கம் நல்லிணக்கத்தினை ஏற்படுத்துவதற்கான எந்தவொரு செயற்பாட்டையும் இதுவரை முன்னெடுக்கவில்லை.

அண்மையில் ஒருவர் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஜெனீவா தீர்மானத்திற்கு எதிராகவே அரசாங்கம் செயற்படுகின்றது என்றார். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நிர்வாகத் தெரிவு

(யாழ்ப்பாணம்)

பகிரங்க சேவைகள் ஓய்வூதியர் நம்பிக்கை நிதிய வலிகாமம் தெற்கு (உடுவில்) பிரதேச செயலகப் பிரிவுச் சங்கத்தின் 22 ஆவது ஆண்டுப் பொதுக் கூட்டப் புதிய நிர்வாகத் தெரிவு வலிகாமம் தெற்கு (உடுவில்) பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் கடந்த மார்ச் மாதம் 26 ஆம் திகதி புதன் கிழமை இடம்பெற்றது.

இப் பொதுக்கூட்டத்தில் புதிய நிர்வாகத்தினராக ப.மகேந்திரதாசன் தலைவராகவும், ந.சுப்பிரமணியம் செயலாளராகவும், நா.மோகனதாஸ் பொருளாளராகவும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (நி-8)

# யோகர் சுவாமிகளின் நினைவாக சிவஞான சபையின் பாத யாத்திரை

(யாழ்ப்பாணம்)

அருள்மிகு யோகாம்பிகை உடனுறை யோகபுரநாதர் சிவன் கோயில் பெருந் திருவிழாக் காலத்தில் யோகர் சுவாமிகள் சிவஞானசபையால் நெறிப்படுத்தப்படும் முதலாவது பாத யாத்திரை சிவாலயத்தை நிலையாக வைத்து இரு திசைகளாகப் பிரித்து இடம்பெறும். கிழக்குப் பகுதி யாத்திரிகர்கள் அணிஞ்சியங்குளம் சித்திவிநாயகர் ஆலயத்திலிருந்து இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு ஆரம்பித்து மல்லாவி பேருந்து நிலையத்தை வந்தடைவர்.

மேற்குப் பகுதி யாத்திரிகர்கள் துணுக்காய் அருள்மிகு சந்திரசேகரப் பிள்ளையார் ஆலயத்திலிருந்து இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணிக்கு ஆரம்பித்து மல்லாவி பேருந்து நிலையத்தை வந்தடைவர்.

அங்கிருந்து ஒன்று சேர்ந்து ஆலயம் சென்று பிரார்த்தனை செய்து சுவாமியின் குருபூசை இடம்பெற்று மாணவர்களுக்கான பரிசில்கள், சான்றிதழ்கள் வழங்கப்படும்.

தொடர்ந்து சமயப் பெரியோர்களின் சொற்பொழிவுகள், மாணவர்களின் கலை நிகழ்வுகள் நடைபெற்று பாத யாத்திரை நிகழ்வு நிறைவு பெறும். (நி-8)


ருஷ்யா வேலைவாய்ப்பு
டெய்லர்/ஜூக்கி மெஷின் ஒபரேட்டர்



ருஷ்யாவிலுள்ள மொஸ்கோ நகரில் ஆடைத் தொழிற்சாலைக்கு கீழ்கண்ட வேலையாள் உடனடியாக தேவை.
டெய்லர்/ஜூக்கி மெஷின் ஒபரேட்டர்
(C-120)
சம்பளம் 45000 ருஷ்யா ரூபில்ஸ்
இலங்கை ரூபா. 155,600.00 + ஓவர்டைம்
(மாதம் 225,000 ரூபாய் வரை வருமானம் பெறலாம். மூன்று வருட காலத்தில் 81 இலட்சம் வரை வருமானம் ஈட்டலாம்)
AL/0701/ADVT/0002/25
நிபந்தனை
உடடியாக பாஸ்போர்டுடன் வரவும். தினசரி தேர்வு நடைபெறுகின்றது.
3 வருட ஒப்பந்தம், சாப்பாடு, தங்குமிட வசதி, மருத்துவம் இலவசம். வேலை நேரம் 10 மணித்தியாலங்கள். கிழமையில் ஒருநாள் விடுமுறை. விமான டிக்கட் வழங்கப்படும்.
தனா மேன்பவர் (பி) லிமிடட்
104, செட்டியார் தெரு, கொழும்பு-11. (நகைகடை தெரு, ஐந்துலாம்பு சந்தி அருகில்)
0767 403 832 | 070 521 0021 | 0112 439 189 | 0112 335 100
Web: www.danamanpower.com | Email: danamanpower@yahoo.com

மணமகள் தேவை
1992, இந்து, ஆயிலியம், CIVL ENGINEER
பூர்வீகம் – மிருசுவில், வதியுமிடம் – AUSTRALIA
மணமகள் பதிவு இல: 11048.
திருமணம் சரி வரும் போது தரகர் கூலி ஏதும் இல்லை
50% புத்தாண்டு விலைக்கழிவு, 10-04-2025 வரை.
இணையவழி திருமணசேவை.
அழையுங்கள் 076 664 9401 (C-119)
www.EQMarriageService.com

கோவில் வேலைவாய்ப்பு
கொழும்பு - 10, மருதானையிலுள்ள பிள்ளையார் கோவிலுக்கு
பிரதம குரு, உதவி ஐயர், கணக்குப்பிள்ளை, பல வேலைக்காரர், மடப்பள்ளி
போன்ற வேலையாட்கள் தேவை. விரும்புவர்கள் 15.04.2025 முன் கீழ்கொடுக்கப்பட்டுள்ள What'sapp / Telephone இலக்கத்திற்கு கதைக்கவும். தெரிவுசெய்யப்பட்டவர்களுக்கு தங்குமிடத்துடன் தகுந்த சம்பளம் வழங்கப்படும். (C-121)
0777 562013 | 0777 314949
What'sapp only

மணமகன் தேவை
1986, இந்து, கார்த்திகை, ENGINEER
பூர்வீகம் – வயாவிளான், வதியுமிடம் – யாழ்ப்பாணம்
மணமகள் பதிவு இல: 10719.
திருமணம் சரி வரும் போது தரகர் கூலி ஏதும் இல்லை
50% புத்தாண்டு விலைக்கழிவு, 10-04-2025 வரை.
இணையவழி திருமணசேவை.
அழையுங்கள் 076 664 9401 (C-119)
www.EQMarriageService.com

மணமகன் தேவை
1983, இந்து, மூலம், TEACHER
பூர்வீகம் – இளவாலை, வதியுமிடம் – யாழ்ப்பாணம்
மணமகள் பதிவு இல: 10864.
திருமணம் சரி வரும் போது தரகர் கூலி ஏதும் இல்லை
50% புத்தாண்டு விலைக்கழிவு, 10-04-2025 வரை.
இணையவழி திருமணசேவை.
அழையுங்கள் 076 664 9401 (C-119)
www.EQMarriageService.com

மணமகன் தேவை
1997, இந்து, ஸ்வாதி, DOCTOR
பூர்வீகம் – யாழ்ப்பாணம், வதியுமிடம் – திருகோணமலை
மணமகள் பதிவு இல: 11059.
திருமணம் சரி வரும் போது தரகர் கூலி ஏதும் இல்லை
50% புத்தாண்டு விலைக்கழிவு, 10-04-2025 வரை.
இணையவழி திருமணசேவை.
அழையுங்கள் 076 664 9401 (C-119)
www.EQMarriageService.com

மணமகள் தேவை
1993, இந்து, சதயம், DOCTOR
பூர்வீகம் – இணுவில், வதியுமிடம் – CANADA
மணமகன் பதிவு இல: 11551.
திருமணம் சரி வரும் போது தரகர் கூலி ஏதும் இல்லை
50% புத்தாண்டு விலைக்கழிவு, 10-04-2025 வரை.
இணையவழி திருமணசேவை.
அழையுங்கள் 076 664 9401 (C-119)
www.EQMarriageService.com




# யோக சுவாமிகளின் அடியவராகிய கனேடிய உயர்ஸ்தானிகர்

இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகராக கடமையாற்றி ஓய்வுபெற்ற கலாநிதி ஜேம்ஸ் ஜோர்ஜ் என்பவர் யோகசுவாமிகளை பலமுறை சந்தித்து ஆசி பெற்றதாகவும், 90வயதைக் கடந்த நிலையில் கனடா, ரொறன்ரோ நகரில் வாழ்ந்து வரும் அவர் 2007ஆம் ஆண்டில் நூலொன்றை எழுதியிருப்ப தாகவும், அதில் ஓர் அத்தியாயத்தை யோகசுவாமிகளுக்கு அர்ப்பணித்து, அதில் சுவாமியுடனான தனது அனுபவங்களைக் குறிப்பிட்டிருப்பதாகவும் அறிந்து கொண்டேன்.

நான் 2009ஆம் ஆண்டு ஜூன் மாதம் கலாநிதி ஜோர்ஜ் அவர்களை, அவரது இல்லத்தில் சந்தித்த போது அவரும், அவரது பாரியாரும் அன்புடன் வரவேற்றார்கள். இவர் 1960 தொடக்கம்1964 வரை இலங்கைக்கான கனேடிய உயர் ஸ்தானிகராக கடமையாற்றி இருக்கிறார்.

யோக சுவாமிகளின் சீடர்களுள் ஒருவராகிய சந்தசுவாமி, இலங்கையின் கடைசி தேசாதிபதி சோல்பரிபிரபுவின் மகன் என்பது அனைவரும் அறிந்ததே. சோல் பரிபிரபுவுக்கு பீட்டர் பிரபு என்ற இன்னொரு மகனும் இருந்தார். இவர் பிரித்தானியாவின் தூதுவராகப் பலநாடுகளில் பணியாற்றியிருக்கிறார். இவரே கலாநிதி ஜேம்ஸ் ஜோர்ஜ் அவர்களுக்கு யோக சுவாமிகளை அறிமுகம் செய்து வைத்தார். கலாநிதி ஜேம்ஸ் ஜோர்ஜ் அவர்கள் யோகசுவாமி களுடனான தனது முதலாவது சந்திப்புத் தொடர்பாக என்னிடம் இவ்வாறு தெரிவித்தார்.

"I knocked quietly on the door to his modest thatched hut in Jaffna and a voice from within roared, 'Is that the Canadian High Commissioner?' I opened the door to find him seated crosslegged on the floor - an erect, commanding presence, clad in a white robe, with a generous topping of white hair and long white beard. Well Swami, I began, that is just what I do, not what I am. 'Then come and sit with me', he laughed uproariously. I felt bonded with him from that moment. He helped me to go deeper towards the discovery of who I am, and to identify less with the role I played."

(யாழ்ப்பாணத்தில் உள்ள அவரது சாதாரண ஓலைக் குடிசையின் கதவை நான் அமைதியாகத் தட்டினேன். உள்ளிருந்து ஒரு குரல் கர்ஜித்தது. "அது கனேடிய உயர் ஸ்தானிகரா?" என்று. நான் கதவைத் திறந்தேன்.- ஒரு கம்பீர [illegible] வெள்ளை வேட்டி சால்வை, நீண்ட வெள்ளை முடி, தாடியுடன் அவர் நிலத்தில் சப்பாணி கட்டி இருப்பதைக் கண்டேன். "சுவாமி, நான் செய்யும் தொழில் கனேடிய உயர் ஸ்தானிகர், நான் கனேடிய உயர் ஸ்தானிகர் அல்ல" என்று கூறினேன். சுவாமி பலமாகச் சிரித்தவாறு வந்து எனது பக்கத்தில் அமருங்கள் என்று கூறினார். அந்தக் கணமே சுவாமியுடன் ஓர் பெரிய ஆத்ம பந்தம் ஏற்பட்டதை உணர்ந்தேன். "நான் யார்"என்பதை நான் அறிய என்னுள் ஆழமாகச் செல்லவும், நான் வகித்த பதவியுடன் குறைவாக அடையாளம் காணவும் சுவாமி எனக்கு உதவினார்.)

கலாநிதி ஜேம்ஸ் ஜோர்ஜ் அவர்கள், இலங்கையில் உயர் ஸ்தானிகராக இருந்த காலத்தில், பத்துக்கும் மேற்பட்ட தடவைகள் யாழ்ப்பாணம் வந்து, யோக சுவாமிகளைச் சந்தித்துள்ளார். சர்வதேச இராஜதந்திர சமூகத்தினரால் இவர் "ஆன்மீகத் தூதுவர்" என்று பலராலும் அழைக்கப்பட் டார். இவர் இந்தியாவில் உயர் ஸ்தானிகராக இருந்த காலத்தில், 1971ஆம் ஆண்டு இந்தியா - பாக்கிஸ்தான் யுத்தத்தினை முடிவுக்கு கொண்டுவந்த பெருமை கலாநிதி ஜேம்ஸ் ஜோர்ஜ் அவர்களையே சாரும்.

நானும், கலாநிதி ஜேம்ஸ் ஜோர்ஜ் அவர்களும் இரண்டு மணி நேரத்திற்கும் மேலாக ஆன்மீக விஷயங்கள் தொடர்பாக உரையாடினோம். யோக சுவாமிகள் பற்றித்தான் எழுதிய நூலில் கையெழுத்திட்டு நூலின் பிரதியொன்றை எனக்கு அன்பளிப்பாகத் தந்தார். இவரிடமிருந்து விடைபெறும் போது, கொழும்புத் துறையில் ஒரு குடிசையில் வாழ்ந்தயோக சுவாமிகளின் அருட்கடாட்சமும், போதனைகளும் எவ்வளவு தூரம் சர்வதேச ரீதியில் வியாபித்துள்ளது என்பதை நினைத்து அகமகிழ்ந்தேன்.



ரிஷி தொண்டுநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாதுகாப்பு...

நேற்றுக் காலை ஜனாதிபதி செயலகத்தில் கையெழுத்தானது.

இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள இந்தியப் பிரதமருக்கான உத்தியோகபூர்வ வரவேற்பு நேற்றுக் காலை கொழும்பில் உள்ள சுதந்திர சதுக்கத்தில் நடைபெற்றது.

பின்னர், இரு நாட்டுத் தலைவர்களும் இரு தரப்பு உறவுகள் குறித்த கலந்துரையாடல்களில் ஈடுபட்டனர்.

கலந்துரையாடல்களைத் தொடர்ந்து, புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கையெழுத்திடுவதும், இந்திய - இலங்கை கூட்டு ஊடகவியலாளர் சந்திப்பும் இடம்பெற்றது.

இதன்போது கையெழுத்திடப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன.

தொடர்ந்து இந்திய ஒத்துழைப்புடன் சம்பூர் சூரிய மின் நிலையத் திட்டத்தின் முதல் கட்டத்தை இரு நாட்டுத் தலைவர்களும் இணையவழியாகத் தொடங்கி வைத்தனர்.

அதேநேரம் நாட்டில் உள்ள 5 ஆயிரம் மதத் தலங்களின் கூரைகளில் நிறுவப்படும் சூரிய ஒளி மின் திட்டத்தையும் இரு நாட்டுத் தலைவர்கள் இணையவழியாகத் தொடக்கி வைத்தனர்.

அத்துடன் வெப்பநிலை மற்றும் ஈரப்பதத்தைக் கட்டுப்படுத்த தம்புள்ளையில் கட்டப்பட்ட குளிர் சேமிப்பு வசதிகளுடன் கூடிய விவசாய சேமிப்பு வளாகத்தையும் பிரதமர் மோடி மற்றும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவும் திறந்து வைத்தனர்.

இதற்கிடையில் இலங்கையில் இந்தியக் கடனை மறுசீரமைப்பது தொடர்பான ஒப்பந்தங்கள் பரிமாறப்பட்டன. (ம-7)

## இந்திய மீனவர்...

யப் பிரதமர் நரேந்திர மோடிக்கும் இடையிலான இரு தரப்புப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. பேச்சுவார்த்தைகள் நிறைவடைந்ததையடுத்து, இரு நாட்டுப் பிரதிநிதிகளுக்கும் இடையிலான கலந்துரையாடல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

கலந்துரையாடலில் இந்தியப் பிரதமர் மோடி கருத்துத் தெரிவிக்கையில்,

மீனவர்கள் விடயத்தில் மனிதாபிமான அணுகுமுறையுடன் நாம் முன்னேற வேண்டும் என்பதை ஒப்புக் கொள்கிறோம்.

அந்த வகையில் இந்திய மீனவர்களை உடனடியாக விடுவித்து, அவர்களின் படகுகளை திருப்பி அனுப்ப வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றோம் எனக் கோரிக்கை விடுத்தார். (ம-7)

## திருக்குறளோடு...

அமைவாக இலங்கைக்கான அரச விஜயமாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி நேற்று முன்தினம் கொழும்பை வந்தடைந்தார்.

இந்தப் பயணத்தின்போது இந்தியா - இலங்கை இருதரப்பு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடுவதற்கான உத்தியோகபூர்வ அரச வைபவம் இடம்பெற்றுள்ளது.

இந்நிலையில் அங்கு உரையாற்றிய நரேந்திர மோடி, திருவள்ளுவரின் குறள் ஒன்றை உதாரணம் காட்டி இலங்கை மக்களுக்கு உரையாற்றியுள்ளார்.

***செயற்கரிய யாவுள நட்பின் அதுபோல் வினைக்கரிய யாவுள காப்பு.***

அதாவது எதிரிகளிடம் இருந்து பாதுகாப்பு பெற நல்ல நண்பனும் நல்ல நட்பையும் தவிர பாதுகாப்பு அரணாக வேறென்ன இருக்க முடியும் என்றும் அவர் வினவியுள்ளார்.

குறிப்பாக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தனது முதல் வெளிநாட்டுப் பயணத்திற்கு இந்தியாவைத் தேர்ந்தெடுத்தமையை அவர் இங்கு நினைவுகூர்ந்துள்ளார்.

மேலும் அவரது முதல் வெளிநாட்டு விருந்தாளியாக இலங்கைக்கு வந்துள்ளேன். இது நமது சிறப்பு உறவின் ஆழத்தைக் காட்டுகிறது என்றும் மோடி குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## தொடர்ந்து...

இது குறித்து மோடி தமது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளார்.

அதில் இலங்கையிலுள்ள தமிழ் சமூகத்தினரது தலைவர்களை சந்திக்கின்றமை எப்பொழுதும் மகிழ்ச்சிக்குரிய ஒரு விடயமாகும்.

மேலும் பெருமதிப்புக்குரிய தமிழ் தலைவர்களான இரா.சம்பந்தன் மற்றும் மாவை சேனாதிராஜா ஆகியோரது மறைவுக்கு [illegible]

தில் அனுதாபம் தெரிவித்ததாக குறிப்பிட்டுள்ள இந்தியப் பிரதமர், அவர்கள் இருவருமே தனிப்பட்ட ரீதியில் எனக்குத் தெரிந்தவர்கள் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் ஐக்கிய இலங்கைக்குள் தமிழ்ச் சமூகத்திற்கு சமத்துவம், கௌரவம் மற்றும் நீதி ஆகியவற்றைக் கொண்ட வாழ்க்கைக்கான எமது அசைக்க முடியாத அர்ப்பணிப்பு இச்சந்திப்பின்போது மீண்டும் வலியுறுத்தப்பட்டது.

எனது விஜயத்தின்போது ஆரம்பித்து வைக்கப்பட்ட பல திட்டங்களும் முன்னெடுப்புகளும் அவர்களது சமூக, பொருளாதார மற்றும் கலாசார முன்னேற்றத்துக்கான பங்களிப்பை வழங்கும் என மோடி தனது எக்ஸ் தளத்தில் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## பௌத்த மயமாக்...

உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தமிழர்களின் நிலங்கள் அபகரிக்கப்படுகின்ற விடயத்தை இந்தியப் பிரதமருக்கு விபரித்தார்.

திருகோணமலை மாவட்டம், குச்சவெளியை அதற்கான உதாரணமாக எடுத்துரைத்த சுமந்திரன், இந்துக் கோயில்களின் பிரதேசங்கள் அபகரிக்கப்பட்டு பௌத்த விகாரைகளின் பெயர்களில் மாற்றம் செய்யப்படுவதை விபரித்தார்.

அச்சமயத்தில் குறுக்கிட்ட இந்தியப் பிரதமர், அந்த நடவடிக்கைகள் அரசால் முன்னெடுக்கப் படுகின்றனவா?, தற்போதைய அரசும் அதை மேற்கொள்கின்றதா? என்று கேள்வி எழுப்பினார்.

அரசின் திணைக்களங்கள் இந்த நடவடிக்கைகளை முன்னெடுப்பதால் அவை அரசு ஆதரவோடு மேற்கொள்ளப்படுகின்ற செயற்பாடுகள்தான் எனத் தமிழர்கள் பிரதிநிதிகள் பதிலளித்தனர். (ம-7)

## திருக்...

யாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

திருகோணமலையிலுள்ள திருக் கோணேஸ்வரக் கோயிலின் புனரமைப்புக்கு இந்தியா உதவும். மேலும் [illegible]

மகாபோதி கோயில் வளாகத்தில் புனித நகரத்தின் கட்டுமானத்திலும் நுவரெலியாவில் சீதா எலிய கோயிலின் கட்டுமானத்திலும் இந்தியா ஆதரவளிக்கும் என்றார். (ம-7

## தமிழ் மக்களின்...

வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

"இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் என்றும் இலங்கையின் அரசியலமைப்பை முழுமையாக செயல்படுத்துவதற்கும் மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதற்கும் அதன் உறுதிப்பாட்டை நிறைவேற்றும் என்றும் நாங்கள் நம்புகிறோம் என்று இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

பிரதமராக, இது இலங்கைக்கு எனது நான்காவது வருகை. 2019ஆம் ஆண்டில் எனது இறுதி வருகை மிகவும் உணர்ச்சிகரமான நேரத்தில் இடம் பெற்றது . அந்த நேரத்தில் இலங்கை எழுச்சி பெறும், மேலும் வலுவாக எழுச்சி பெறும் என்பதில் எனது உறுதியான நம்பிக்கையாக இருந்தது என்றார். (ம-7)


மஹஜன சம்பத
திகதி 2025.04.05
சீட்டிழுப்பு இலக்கம் 5797
Y 0 4 7 8 1 6
அத சம்பத Y 7 8 1 6
சீட்டிழுப்பு இலக்கம் 0372
தேசிய லொத்தர் சபை National Lotteries Board

தன நிதானய
திகதி - 2025.04.05
சீட்டிழுப்பு இலக்கம் - 1827
J 02 10 47 82 J
Double Chance 14149

மெகா பவர்
திகதி 05/04/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2145
D 10 10 34 51 57

ஜய
திகதி 2025.04.05
சீட்டிழுப்பு இலக்கம் 065
U 5 5 0 6

கோவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4039
சீட்டிழுப்பு திகதி 05.04.2025
E 09 59 61 72
E

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.04.05
சீட்டிழுப்பு இலக்கம் 1106
கும்பம் 09 23 29 60 கும்பம்
27985 12

உத்தியோகபூர்வ முடிவுகள்
05.04.2025 வெற்றி வாரம் 505
ஆங்கில எழுத்து J
மற்றும் வெற்றி இலக்கம் 9 7 4 0 8 1
99707
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.35,033,196.00
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2771
சீட்டிழுப்பு திகதி 2025.04.05
தினம் சனிக்கிழமை
02 12 72 79 C
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.54,865,732.80

சனிதா
திகதி 05.04.2025 வெற்றி வாரம் 4932
25 27 61 69 E
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 59,656,744.40
ரூ.100,000/- 73186

சசிரி
வெற்றி வாரம் 658
சீட்டிழுப்பு திகதி 05.04.2025
சனிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 19 33 44
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 200,000.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4483
சீட்டிழுப்பு திகதி 05.04.2025
தினம் சனிக்கிழமை
26 27 30 33
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,265,734.00
223636

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
T 40 01 31 47 66
1947
05.04.2025 சனிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.570,995,653.60

அட கோடிபதி ADA KOTIPATHI
சனிக்கிழமை
வெற்றி வாரம்: 2597
சீட்டிழுப்பு திகதி: 2025.04.05
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.55,126,412.80
01 02 17 73 U
ரூ.100,000/- 735642


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் வடமராட்சி அல்வாய் கிழக்கில்**
**32 பரப்பு (நிலப்பரப்பு) விற்பனைக்கு உண்டு.**

- 2 பரப்பாகப் பிரிக்கப்பட்ட நிலையில் இருவழிப் பாதையுடன்
- ஒரு பரப்பின் விலை பிரதான வீதி முகப்புடன் பதினேழு இலட்சம் ரூபாய் (17,00 000/=). இரண்டாம் காணி (நடுப் பகுதி) பதினைந்து லட்சம் (15, 00 000/=). பின் பகுதிக் காணி எட்டு லட்சம் ரூபாய் (8,00 000/=)
- நெல்லியடி பஸ்நிலையம் 2 ½ Km, பருத்தித்துறை பஸ் நிலையம் 2 Km, மந்திகை ஆஸ்பத்திரி 1 Km, பருத்தித்துறை வீதி 600m, மாலு சந்தி 1 Km தூரம்.
- தம்பசிட்டி மெதடிஸ்த மிசன் வித்தியாலயம் 1 Km தூரம், மாலு சந்தி பிள்ளையார் கோயில் 1 Km தூரம்.
- குடியிருப்புகள் சூழவுள்ள பகுதி, செம்மண் தரை, நன்னீர் ஊற்று
- தரகர் தேவையில்லை.

(பார்வையிடும் நேரம் காலை 8.00 – மாலை 6.00 மணி வரை)

தொடர்புகளுக்கு:

**076 860 2770, 076 987 8617**
**076 935 3971**

(3865)

## Smart Science Academy
## A/L 2027 கணித விஞ்ஞானப் பிரிவு

புதிய அனுமதிகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

- PHYSICS T.சம்பந்தன் BSc, PGDE
- CHEMISTRY S.சுரேஸ்குமார் BSc (Hons), PGDE
- BIOLOGY K.சுதா BSc with Ed (Hons)
- COM.MATHS V.ஹரிவண்ணன் BSc, PGDE

அனுமதிகள் 03.04.2025 – 10.04.2025 வரை வழங்கப்படும்.

**154A, Navalar Road, Jaffna.**
**Tel : 0777 872 903, 0775 559 028**

(3866)

எமது 50 வருட சேவையின் ஓர் அங்கமாக பொருளாதார வாழ்வியல் இடர்களுக்கு முகம் கொடுக்கும் குடும்பங்களுக்கு தமது இறுதி மரியாதையையும் கடமையையும் செய்யக்கூடிய வகையில்

## பரிபூரணம்

சேவையை நாம் எம் மக்களுக்காக ஆரம்பித்துள்ளோம். ரூபா 35,000/- முதல் இறுதிச் சடங்கிற்கு ஏற்ற மரப்பேழை, வாகனம், உடல் பதப்படுத்தல் மற்றும் இதர சேவைகளும் ஏற்றுக்கொள்ளப்படும்.

விபரங்களுக்கு : ஈ - சன்ஸ் அந்தியகால சேவை
இல.148, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

**021 222 2695, 077 429 0613**

(C-2625)

## தொழில் தொடங்கும் இளைஞர்களுக்கு ஒரு வரப்பிரசாதம்

சங்கரத்தை முருகமூர்த்தி கோவிலுக்கு அண்மையில் உள்ள ரட்ணசிங்கம் மணிமண்டபத்தை தொழில் தொடங்கும் இளைஞர்களுக்கு வரப்பிரசாதமாக வழங்கவுள்ளோம்.

- திருமண வைபவங்கள், பூப்புனித நீராட்டு விழாக்கள்
- பிறந்தநாள் கொண்டாட்டங்கள் போன்றவற்றை நடத்தலாம் அல்லது
- தனியார் அலுவலகமாகவோ சிறிய தொழிற்சாலையாகவோ பயன்படுத்தவும் முடியும்.

குறிப்பிட்ட காலத்திற்கு வாடகை இலவசம்

- 3 பேஸ் மின்சாரம், இரண்டு அலுவலகம், மலசலகூட வசதி, வாகனத் தரிப்பிடம் மேலும் பல வசதிகளுடன்...

மேலதிக தொடர்புகளுக்கு

**076 017 1951, 077 662 5516**
**00447956377627(whatsapp)**

(3775)

## வேலைவாய்ப்பு

- அலுவலக உதவியாளர்
- மாதாந்த பரீட்சை உதவியாளர்கள்
- ஆசிரிய உதவியாளர் (BSc)
- துவிச்சக்கரவண்டிக் காப்பாளர்

**Smart Science Academy**
**No.154A, Navalar Road, Jaffna.**
**Tel : 0777 872 903, 0775 559 028**

நிர்வாகம்

(3833)

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

**V2 TRAVELS**

எமது கிளைகள்

- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மாவிட்டபுரம்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-

0777-068-777
v2vacancies@gmail.com

(C-2629)

## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்

IELTS, A1 UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN

GUARANTEED TO 7.5 in IELTS Exam.
PASS in UK A1 Exam.
Exam REGISTRATION CENTER.

**Special offer 50% Discount to all the Courses**

OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam Junction, Jaffna.

**T.P : 077 780 3970, 074 007 1970**

(3844)

## புகையிலை விற்பனைக்கு

அறுவடைக்குத் தயாராக உள்ள தரமான பாணிப் புகையிலை விற்பனைக்கு.

தொடர்புகளுக்கு :

**076 287 8655**

(1002)

## லைடன் புடவை நிலையம்
## யாழ்ப்பாணம்



எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டு, உயிர்த்த ஞாயிறு தினங்களை முன்னிட்டு எமது நண்பர்கள், அன்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரிற்கும் அனைத்து வகையான துணி வகைகள் ரெடிமேற் ஆடைகள், மகப்பேற்றுத் தாய்மார்கள், குழந்தைகளுக்கான பொருட்கள் மற்றும் மாணவர்களுக்கான சீருடைவகைகள் போன்ற சகலவிதமான பொருட்களையும் 10% விசேட விலைக்கழிவில் பெற்றுக்கொள்ள உடனே விரையுங்கள்

**10%**
01.04.2025 - 19.04.2025

வாடிக்கையாளர் நலன்கருதி 06.04.2025 ஞாயிற்றுக்கிழமை மற்றும் 13.04.2025 ஞாயிற்றுக்கிழமைகளில் எமது வியாபார நிலையம் திறக்கப்படும் என்பதனை மகிழ்வுடன் அறியத் தருகின்றோம்.

**Leyden Textile Center**
**410, Hospital Road, Jaffna. 0212222381**

(C-2623)

தேன் ஒரு அருமருந்து. சீனிக்குப் பதிலாக தேனைப் பயன்படுத்துவதனால், இரத்தத்திலுள்ள சீனியின் அளவு சீராகி கொலஸ்ரோலின் அளவு குறையும். இதயநோய் தாக்காது. உடல் எடை குறையும். இவ்வாறு பல பயன்களைக் கொண்டது.

## Royal றோயல் சுத்தமான தேன்

உங்கள் முழுக் குடும்பத்தின் ஆரோக்கியத்தினைப் பாதுகாத்திட இன்றே பாவியுங்கள் றோயல் சுத்தமான தேன்.

**ஆய்வுகூடத்தில் தரம் பரிசோதிக்கப்பட்டு பொதியிடப்படுகிறது.**



குறிப்பு :- யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து பாமசிகளிலும், சுப்பர்மார்க்கட்களிலும், பலசரக்கு கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

Marketed By:-
சிவா நறுமணப் பூங்கா®
இல.288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
குறிப்பு : (சத்திரத்துச்சந்திக்கு அருகாமையில்)
தொ.பே : 021 2222 567

Packed By:- Royal Industries®

(C-2622)

## வேலையாட்கள் தேவை

உடுவிலில் உள்ள அரைக்கும் ஆலைக்கு அனுபவமுள்ள வேலையாட்கள் தேவை.

**077 077 2946**
**075 056 7178**

(C-2630)

## காணி விற்பனைக்கு

பொஸ்கோ பாடசாலைக்கு முன்பாக சோமசுந்தரம் அவெனியுவில் 3.5 பரப்புக் காணி மாடி வீட்டுடன் விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு:

**076 342 4705**

(3840)

## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 222/= | |
| 1Kg Prima கோதுமை மா | - 158/= | |
| 1Kg சிவப்பு பருப்பு | - 263/= | |
| 1Kg றவை | - 285/= | |
| 1Kg பொன்னி அரிசி | - 243/= | |
| 1Kg தீட்டல் பச்சை | - 245/= | |
| 1Kg கீரி சம்பா | - 260/= | Max 3Kg |
| 1Kg வெள்ளைப்பச்சை(உள்நாடு) | - 217/= | |
| 1Kg கடலை | - 390/= | |
| 1Kg சோயா | - 380/= | |
| 10Kg விஜிதா நாடு | - 2870/= | ~~3000/=~~ |
| 700g சுபோஷா | - 580/= | ~~590/=~~ |
| 01 அங்கர் யோக்கட் | - 47/= | ~~80/=~~ |
| 180Ml சன்சில்க் சம்போ(மஞ்சள்) | - 380/= | ~~480/=~~ |
| 1.5 ℓ பெப்சி சோடா | - 320/= | ~~360/=~~ |

400g Anchor
1040/= ~~1100/=~~



1Kg சன்லைட் றோஸ் பவுடர்
270/= ~~320/=~~



தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.

Happy Supermarket
0777 8080 30

(1003)

## இடைக்காடு
## புவனேஸ்வரி அம்மன் ஆலய பரிபாலன சபை
## கட்டுத்தேர் விற்பனைக்கு

எமது ஆலயத்தின் பாவனையில் இருந்த நல்ல நிலையில் உள்ள கட்டுத்தேர் விற்பனைக்கு உள்ளது. வாங்க ஆர்வமுள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**077 760 4782**
**077 918 8481**

தலைவர்
பரிபாலன சபை

(3812)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.04.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.